# உதயன்

சுடர்: 29 கதிர்: 287 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆவணி 24, செவ்வாய் 09.09.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

பக்கங்கள்

யாழ். - 20/=

வன்னி - 20/=


தெளிவான வானிலை

காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று 34 km/h
ஈரப்பதம்: 48%
காற்றமுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியாஸ்தமனம்: 18:04



ரி-20 ஆட்டத்தில் இங்கிலாந்து வெற்றி தோல்வியை பொறுப்பேற்றார் டோனி

பக்கம் 18

# முதலமைச்சரை சந்திக்க கோத்தபாய திடீர் தூது



## மனோகணேசன் ஊடாக தகவல் பரிமாற்றம் முதலமைச்சரின் முடிவுக்காகக் காத்திருப்பு

கொழும்பு, செப்.9

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனை நேரில் சந்தித்துப் பேசுவதற்கு பாதுகாப்புச் செயலரும் ஜனாதிபதியின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷ திடீர் விருப்பம் தெரிவித்துள்ளார். மேல் மாகாண மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசனை இதற்காக அவர் தூது அனுப்பியுள்ளார்.

வடக்கு மாகாணசபைக்கும் – கொழும்பு அரசுக்கும் இடையிலான முரண்நிலையைத் தீர்ப்பதற்காக, வடக்கு முதல்வருடன் யாழ்ப்பாணத்திற்கு வந்து பேசவும் தயாராக இருக்கிறார் என்று பாதுகாப்புச் செய

22 ஆம் பக்கம் பார்க்க

## 2,500 பனைகள் அழிப்பு

யாழ்ப்பாணம், செப்.9

பளை, தர்மக்கேணி பகுதியில் பல ஏக்கர் விஸ்தீரணக் காணியில் சுமார் 2 ஆயிரத்து 500 பனை மரங்கள் சட்டவிரோதமாகத் தறிக்கப்பட்டு விற்பனை செய்யப் பட்டுள்ளன. இது தொடர்பில் நான்கு பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள னர். அவர்களிடம் இருந்து இரு டிராக்டர்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த நபர்கள் பலநாள்கள் காட்டிலேயே தங்கியிருந்து நவீன கனரக இயந்திரங்கள் மூலம் பனைகளைத் தறித்து, அரிந்து விற்றுவந்துள்ளனர். தறிக்கப்பட்ட பனைகளை மிதிவெடி அபாயம் உள்ள இடங்களாகக் கருதப்படும் இடங்களுடாக – காட்டுப் பாதைகள்

22 ஆம் பக்கம் பார்க்க

## நவிப்பிள்ளையின் பாதையே நான் பயணிக்கவுள்ள பாதை



### ஐ.நா. மனித உரிமைகள் சபையின் புதிய ஆணையாளர் திட்டவட்டம்

“இலங்கையில் மனித உரிமை ஆர்வலர்களுக்கு எதிராக பிரயோகிக்கப் படும் பயமுறுத்தல்களையிட்டு நான் அச்சமடைந்துள்ளேன்.”

யாழ்ப்பாணம், செப்.9

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் முன்னாள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் பாதையிலேயே தொடர்ந்து பயணிக்கவுள்ளேன். இலங்கையில் மனித உரிமை ஆர்வலர்களுக்கு எதிராகப் பிரயோகிக்கப்படும் பயமுறுத்தல்களையிட்டு நான் அச்ச மடைந்துள்ளேன். – இவ்வாறு தெரிவித்துள்ளார் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளராகப் புதிதாகப் பதவியேற்றிருக்கும் சையிட் அல் ஹுசைன்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் புதிய ஆணையாளராகக் கடந்த முதலாம் திகதி பொறுப்பேற்றுக் கொண்ட ஹுசைன், நேற்று ஆரம்பமான 27 ஆவது மாநாட்டில்

22 ஆம் பக்கம் பார்க்க

## அரோகரா ஒலி வான்பிளக்க சந்நிதியான் நேற்று தேர்வலம்



வரலாற்று பிரசித்தி பெற்ற தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய தேர் உற்சவம் பக்தர்களின் அரோகரா கோஷத்துடன் நேற்றுக்காலை பக்தி பூர்வமாக நடைபெற்றது.

மேலதிக படங்கள் 11ஆம் பக்கத்தில்

22 ஆம் பக்கம் பார்க்க

## மிதிவெடியால் கால் இழந்தார் முதியவர்

யாழ்ப்பாணம், செப்.9

காட்டுக்கு வேட்டைக்குச் சென்ற முதியவர் ஒருவர் மிதிவெடியில் சிக்கி வலது காலை இழந்துள்ளார். இந்தச் சம்பவம் பளையில் நடந்துள்ளது. அதே பகுதியைச் சேர்ந்த எஸ்.செல்வராசா (வயது-64) என்பவரே காலை இழந்த நிலையில் தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று மதியம் அவர் வேட்டைக்குச் சென்றபோதே இந்த அனர்த்தம் நடந்துள்ளது.

உறவினர்களால் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர், பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

(ந-9,106,426)



டெங்கு ஒழிப்பு வாரம் நாளைமுதல் ஆரம்பம்

விரிவான தகவல்கள் 23 ஆம் பக்கத்தில்

## ஐ.நாவின் விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டும்

### அமெரிக்கா, பிரிட்டன் நாடுகள் இலங்கையிடம் மீளவும் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 09

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகளுக்கு இலங்கை அரசு ஒத்துழைக்க வேண்டும் என்று அமெரிக்காவும் – பிரிட்டனும் மீளவும் வலியுறுத்தியுள்ளன. நேற்று ஆரம்பமாகியுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 27 ஆவது அமர்விலேயே அவை இவ்வாறு வலியுறுத்தியுள்ளன.

அமர்வின் ஆரம்ப நிகழ்வில், புதிய ஆணையாளர் உரையாற்றிய பின்னர், ஒவ்வொரு நாட்டுப் பிரதிநிதிகளும் உரையாற்றினர். அதன்போது உரையாற்றி ஜெனீவாவுக்கான அமெரிக்கப் பிரதிநிதி ஹெய்த் கார்பர், “முன்னாள் ஆணை

21 ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நா. விசாரணைகள் தொடர்பான முடிவில் எந்த மாற்றமும் இல்லை

### திட்டவட்டமாகத் தெரிவித்தது இலங்கை அரசு

கொழும்பு, செப்.9

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் குறித்த தமது நிலைப்பாட்டில் எந்த வித மாற்றமும் இல்லை என்று தெரிவித்துள்ள இலங்கை அரசு, இலங்கையில் மனித உரிமைப் பாதுகாவலர்கள்

22 ஆம் பக்கம் பார்க்க

“போர்க் கால கரிசனைகள் குறித்த விடயங்களுக்குத் தீர்வு காண்பதற்காக அரசு தொடர்ந்தும் உள்ளூர் பொறிமுறைகளைப் பயன்படுத்தும்”




## சிவாஜியின் பிரேரணை திருத்தங்கள் ஏதுமின்றி நாளைய அமர்வில்

யாழ்ப்பாணம், செப். 09

வடக்கு மாகாண சபையின் கடந்த அமர்வில் ஆளுங் கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தால் முன்வைக்கப்பட்டு, திருத்தங்களுக்காக அடுத்த விசேட அமர்வுக்கு ஒத்தி வைக்கப்பட்ட பிரேரணை எதுவித மாற்றங்களும் இன்றி நாளைய அமர்வில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது என்று தெரிவிக்கப் படுகின்றது.

வடக்கு மாகாண சபையின் அமர்வு கடந்த மாதம் 21 ஆம் திகதி நடைபெற்றது. அதில் ஆளுங்கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தால், ‘தமிழ் மக்கள் மீதான இனப் படுகொலைகளில் இருந்து பாதுகாக்க சர்வதேச பொறிமுறையை ஏற்படுத்துமாறு வேண்டுகோள்’ என்ற பிரேரணை முன்வைக்கப்பட்டது டன், அதன் மீது நீண்ட விவாதமும் நடைபெற்றது.

இறுதியில் குறித்த பிரேரணையை கட்சியின் தலைமையின் ஆலோசனைக்கமைய மாற்றம் செய்து, அடுத்த விசேட அமர்வில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால் குறித்த பிரேரணையில் சொல்லப்பட்ட திருத்தங்கள் எதுவும் மேற்கொள்ளப்படாமலேயே, மீளவும் நாளைய அமர்வில் எடுத்

22 ஆம் பக்கம் பார்க்க

## கட்டுப்பாட்டை இழந்த பஸ் மோதியது மின்கம்பத்துடன்

### ஒருவர் சாவு: பலர் படுகாயம்

அச்சுவேலி, செப்.10

கொழும்பு நோக்கிப் பயணித்த பயணிகள் பஸ் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பத்துடன் மோதித் தடம் புரண்டது. பஸ்ஸில் பயணித்த இளைஞர் ஒருவர் உடல்

படங்கள் 24 ஆம் பக்கத்தில்

21 ஆம் பக்கம் பார்க்க

# தமிழர் உணர்வுகளின் ஒட்டுமொத்த பிரதிபலிப்பே ஆயுதப் போராட்டம்

## வெறுமனே இளைஞர்களால் உருவாக்கப்பட்டதல்ல

## புளொட் இயக்கத் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 9

ஆயுதப் போராட்டம் வெறுமனே உணர்வுகளால் உந்தப்பட்ட இளைஞர்களால் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் அல்ல. ஒட்டுமொத்தமான தமிழ் மக்களுடைய உணர்வுகளின் பிரதிபலிப்பே ஆயுதப் போராட்டமாக பரிணமித்தது.- இவ்வாறு தெரிவித்துள்ளார் புளொட் தலைவரும், வடக்கு மாகாண சபை உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன்.

வவுனியாவில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-



"தலைவராகப் பொறுப்பேற்றுள்ள மாவை.சேனாதிராசா, மிகச் சிறிய பராயத்திலிருந்து தமிழ் மக்களுடைய போராட்ட வரலாற்றிலே, தமிழரசுக் கட்சியின் வரலாற்றிலே தன்னைப் பதித்துக் கொண்டவர். ஏறத்தாழ நான்கு வருடங்கள் சிறைச்சாலைகளிலே சித்திர வதைக்குட்பட்டு வாடியவர். சிறைச்சாலையிலே அவரை அடித்து அங்கிருந்த மேலதிகாரியின் அறையிலே கொண்டு வந்து போட்டபோது, அங்கேயிருந்த குண்டூசியால் மேசையிலேயே ஈழம் வாழ்க என்று எழுதி மீண்டும் அடிக்கப்பட்டு வைத்தியசாலைக்கு கொண்டு சென்று போடப்பட்டவர்.

தம்பி பிரபாகரன் - ஆரம்பத்திலே தமிழரசுக் கட்சியினுடைய செயற்பாடுகளிலே அவர் இல்லாதுவிட்டாலும் கூட - இளமையாக இருந்த காலத்திலேயே இன விடுதலைக்காக, வன்முறை அரசியலில் ஈடுபடத் தொடங்கிவிட்டார். அவருடனும் எங்களுடைய தலைவர் உமா மகேஸ்வரன், பத்மநாபா போன்றவர்கள் தமிழரசுக் கட்சி இளைஞர் பேரவை விடயங்களிலே தொடர்ந்து ஈடுபட்டு வந்தபடியால் அவர்களுடனும் மிக நெருக்கமாக பழகியவர் மாவை.சேனாதிராசா. அவர், இன்று தலைவராக வந்திருப்பதானது, தமிழ் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்துவதற்கு ஏதுவாக இருக்கும் என்பதில் பெருமகிழ்ச்சி.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமை இரா.சம்பந்தன் மற்றும் மாவை.சேனாதிராசா இருவரின் கைகளிலேயே இருக்கின்றது. ஒற்றுமைக்காக சேனாதிராசா செய்த ஒரு தியாகத்தை நான் இங்கு கூறியே தீரவேண்டும்.

### சாத்வீகத்துக்கு முடிவுரை

தனது கணவரால் கொண்டு வரப்பட்ட சிங்கள மொழிச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவேன் என்று கங்கணங்கட்டி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க, வட-கிழக்கிற்கு சிங்கள அதிகாரிகளை அனுப்பினார். அதைத் தடுக்க வேண்டுமென்று அதற்கு முன்பு நடந்த தமிழரசுக் கட்சி மகாநாட்டிலேயே தீர்மானம் எடுக்கப்பட்டது. அதன்படி வடக்குக் - கிழக்கிலே இருந்த ஒவ்வொரு அரச அலுவலகங்களும் இரண்டரை மாதங்களுக்கு முடக்கப்பட்டது. இப்படியாக தமிழரசுக் கட்சியின் போராட்ட வரலாற்றினாலேயே தமிழ் தேசியம் என்பது உருவாகியது.

### ஆயுத போராட்டத்தின் ஆரம்பம்

அதேபோல 1974 ஆம் ஆண்டு அண்ணன் அமிர்தலிங்கம் தமிழரசுக் கட்சியின் 25 ஆவது ஆண்டு மலரிலே 'தியாக வரலாறு' என்ற கட்டுரையை எழுதியிருந்தார். அதில் கடைசியிலே 'தியாகி சிவகுமாரன் போன்ற விடிவெள்ளிகள் தோன்றிவிட்டார்கள். நாம் தொடர்ந்தும் செல்வோம், வெல்வோம்' என்று முடிக்கின்றார். அவரும் மறைமுகமாக சாத்வீகப் போராட்டம் சரிவராது என்பதையே குறித்து நின்றார். இதையெல்லாம் நான் ஏன் கூறுகிறேன் என்றால், ஆயுதப் போராட்டம் வெறுமனே உணர்வுகளால் உந்தப்பட்ட இளைஞர்களால் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் அல்ல. ஒட்டுமொத்தமான தமிழ் மக்களுடைய உணர்வுகளின் பிரதிபலிப்பே ஆயுதப் போராட்டமாக பரிணமித்தது.

### ஒற்றுமை முக்கியம்

எங்களுடைய ஒற்றுமை எவ்வளவு முக்கியம் என்பதை 2010 ஆம் ஆண்டு மட்டக்களப்பு தேர்தலைப் பார்த்தீர்களென்றால் உங்களுக்குத் தெரியும். அப்போது மூன்று கட்சிகள்தான் கூட்டமைப்பிலே இருந்தன. அந்த மூன்று கட்சிகளும் கூட்டாக போட்டியிட்டபோது வெறும் 4 ஆயிரம் வாக்குகளால்தான் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரச கூட்டணியை மட்டக்களப்பில் வென்றது.

அதன் பிறகு 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலிலே மட்டக்களப்பு மாவட்டத்திலே 40 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் ஐந்து கட்சிகள் இணைந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு வெற்றிபெற்றது. மக்கள் ஒற்றுமையையே விரும்புகிறார்கள். அந்த ஒற்றுமையையே ஆதரிக்கிறார்கள். இதனை நாங்கள் மனதில் கொள்ள வேண்டும்" - என்று தெரிவித்துள்ளார். (ற-5)

## பேராசிரியர்களை அச்சுறுத்திய மாணவருக்கு வகுப்புத்தடை



கொழும்பு, செப்.9

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மாணவர் சங்கத் தலைவர் உள்ளிட்ட மூன்று மாணவர்களுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த மாணவர்களுக்கு ஒரு வாரம் வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் அதுல சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு இடையூறு ஏற்படுத்தியமை, தவறான கருத்துக்களை மக்கள் மத்தியில் கொண்டு சென்றுள்ளமை மற்றும் விரிவுரையாளர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் குறித்த மாணவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)

## இலங்கையின் முன்னேற்றத்தை ஏற்க மறுக்கின்றது சர்வதேசம்

### கவலை வெளியிடுகிறார் ஜனாதிபதி



*ஜனாதிபதி மற்றும் ஜப்பான் பிரதமர் ஆகியோரிடையேயான சந்திப்பு*

யாழ்ப்பாணம், செப். 9

இலங்கை சர்வதேச சமூகத்துடன் வெளிப்படைத் தன்மையாகச் செயற்பட்டு வருகின்றது. ஆயினும் இலங்கையின் முன்னேற்றங்களை வெளிநாட்டு சக்திகள் ஏற்க மறுப்பது கவலையளிக்கின்றது - என்று தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும், ஜப்பானிய பிரதமருக்கும் இடையில் நேற்றுமுன்தினம் சந்திப்புக்கள் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே, ஜனாதிபதி மஹிந்த மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"இலங்கை சர்வதேச சமூகத்துடன் தொடர்ச்சியாகப் பேச்சை நல்லெண்ணத்துடனும் பரஸ்பர மதிப்பு மற்றும் வெளிப்படைத்தன்மையுடனும் மேற்கொண்டு வருகிறது. ஆனால் சமாதானத்தை உறுதிசெய்வதிலும், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதிலும் இலங்கை கண்டுள்ள குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைச் சில வெளிநாட்டுச் சக்திகள் அங்கீகரிக்க மறுக்கின்றன.

இலங்கை பல சவால்களை எதிர்கொண்ட வேளை ஜப்பானின் புரிந்துணர்வு, ஆதரவு, நட்புணர்வு என்பனவற்றுக்காக நான் நன்றி கூறவிரும்புகிறேன். நாம் தொடர்ந்தும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளில் உறுதியான விதத்தில் ஈடுபடுவோம். சவால்களுக்கு மத்தியில் நாங்கள் பல கடினமான முடிவுகளை எடுத்துள்ளோம். உள்ளூர் பொறிமுறைகள் குறிப்பிடத்தக்க நன்மையை அளித்துள்ளன" என்று குறிப்பிட்டுள்ளார். (ற-5)

## வடக்கு மாகாண சபைக்கான சொகுசு வாகனங்கள் வந்தன

### இன்று அவை ஆளுநரால் கையளிக்கப்படவுள்ளன



யாழ்ப்பாணம், செப்.9

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் மற்றும் சுகாதார அமைச்சருக்குரிய சொகுசு வாகனங்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்து சேர்ந்துள்ளதுடன் அவை இன்றைய தினம் உரிய அமைச்சுச் செயலாளர்களிடம் ஆளுநரால் கையளிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு மாகாணசபையால், கடந்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் 50 மில்லியன் ரூபா நிதி, சொகுசு வாகனக் கொள்வனவுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. முதலமைச்சருக்கு 10 மில்லியன் ரூபாவில் சொகுசு வாகனமும், 5 மில்லியன் ரூபாவில் சொகுசு காரும், ஏனைய நான்கு அமைச்சர்கள் மற்றும் அவைத் தலைவர் ஆகியோருக்கு தலா 7 மில்லியன் ரூபா செலவில் சொகுசு வாகனமும் கொள்வனவு செய்ய நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. இதற்கமைய ஜப்பானிலிருந்து குறித்த வாகனங்கள் நேரடியாகக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இவற்றில் விவசாய அமைச்சர், கல்வி அமைச்சர், மீன்பிடி அமைச்சர் மற்றும் அவைத் தலைவர் ஆகியோரின் வாகனங்கள் என்பன கடந்த ஜூலை மாதம் குறித்த அமைச்சுக்களின் செயலாளர்களிடம் கையளிக்கப்பட்டிருந்தன. இவ்வாறு வழங்கப்பட்ட சொகுசு வாகனங்களையே குறித்த அமைச்சர்கள் மற்றும் அவைத் தலைவர் ஆகியோர் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் முதலமைச்சருக்குரிய சொகுசு வாகனம் மற்றும் சுகாதார அமைச்சருக்குரிய சொகுசு வாகனம் என்பன நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்கு வந்து சேர்ந்துள்ளன. இந்த வாகனங்கள், ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியால் இன்றைய தினம் முதலமைச்சரின் செயலாளரிடமும், சுகாதார அமைச்சின் செயலாளரிடமும் கையளிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-5)

## ஜே.வி.பி. ஆதரவாளர் மீது தாக்குதல்

கொழும்பு, செப்.9

மொனராகலையில் மக்கள் விடுதலை முன்னணி ஆதரவாளர்கள்மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த தாக்குதல் சம்பவம் நேற்றுக் காலை 6.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதன்போது ஒருவரைக் கடத்திச் செல்லவும் முயற்சிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள அவர், இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, தேர்தல் பாதுகாப்புக் கடமையில் 11 ஆயிரம் பொலிஸ் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தவுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

தேர்தல் தினத்துக்கு இரண்டு தினங்களுக்கு முன்னதாக இவர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (ற)

## சிவில் சமூக செயற்பாடுகளில் தலையிடுகின்றது அரசு

### திறந்த பல்கலைக்கழகத்தின் சமூகவியல் பீட மூத்த விரிவுரையாளர் குற்றச்சாட்டு



கொழும்பு, செப். 9

சிவில் சமூக செயற்பாடுகளில் அரசு தலையீடு செய்து வருகின்றது என்று குற்றஞ்சாட்டியுள்ளார் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் சமூகவியல் பீட மூத்த விரிவுரையாளர் டொக்டர் ஹரினி அமரசூரிய.

அரசின் ஆதரவாளர்கள் சிவில் சமூக செயற்பாடுகளில் ஈடுபட்டு, சமூகத்தை திசை திருப்பி வருகின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"பல்கலைக்கழக மாணவர்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் போராட்டங்களின் போது பொலிஸார் அடக்குமுறைகளைப் பிரயோகிக்கின்றனர். மாணவர் தலைவர்கள் தொடர்ச்சியாகக் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்படுகின்றனர். ஆயினும் பொதுபல சேனா, ராவணா பலய போன்ற அமைப்புக்களால் நடத்தப்படும் போராட்டங்களின் போது பொலிஸார் வேடிக்கை பார்க்கின்றனர். இவ்வாறான ஒடுக்குமுறைகள் சிவில் சமூக செயற்பாடுகளைப் பாதிக்கும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

பக்கங்கள்: இருபத்திநான்க

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆவணி 24 செவ்வாய் (09.09.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 287

# புதிய ஆணையாளரோடு பேசிய பின்னரே முடிவு

## ஐ.நா. விசாரணை குறித்து அமைச்சர் கெஹலிய



யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 9

**ஐ.நா. மனித உரிமைகள் சபையின் புதிய ஆணையாளருடன் கருத்துக்களைப் பரிமாறிய பின்னரே, ஐ.நா. விசாரணைக்கு ஒத்துழைப்பதா இல்லையா என்பது தொடர்பில் எதனையும் தெரிவிக்க முடியும் என்று தெரிவித்துள்ளார் அமைச்சரவைப் பேச்சாளரும், ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல.**

ஐ.நா மனித உரிமைகள் சபையின் புதிய ஆணையாளராகப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ள சையத் அல் ஹூஸைன், இலங்கை தொடர்பில் கடந்த சனிக்கிழமை வெளியிட்ட அறிக்கை தொடர்பில், பி.பி.சி செய்திச் சேவை எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"சர்வதேச விசாரணை தொடர்பான எமது நிலைப்பாட்டை, முன்னைய ஆணையாளரிடம் நாம் தெளிவாகவே எடுத்துரைத்தோம். அது தொடர்பான கவலையையும் தெரியப்படுத்தியிருந்தோம். அந்த விடயங்களைக் கடைப்பிடிக்கும் புதிய ஆணையாளரிடம், புதிய அணுகுமுறையைப் பின்பற்றுவோம்."- என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய ஆணையாளர் இலங்கை தொடர்பான விடயத்தில் கொள்கை மாற்றம் எதனையும் கொண்டிருக்கவில்லை என்பது தொடர்பில் அவரிடம் கேள்வி எழுப்பப்பட்ட போது.

"அது உங்களுடைய புரிதல் என்று நினைக்கின்றேன். இந்த விடயத்தில் இனி எங்களுக்கு கூடுதல் நீதி கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றோம். ஐ.நா மனித

(22ஆம் பக்கம் பார்க்க)

## நாளாந்தம் விலை உயரும் நாட்டரிசி

யாழ்ப்பாணம், செப்.9

நாட்டரிசிக்கு (குத்தரிசி) கட்டுப்பாட்டு விலை அறிவிக்கப்படாமையால் வடக்கு மாகாணத்தில் நாட்டரிசியின் விலை நாளாந்தம் உயர்ந்த வண்ணம் உள்ளது. ஒரு கிலோ அரிசி 100 ரூபா வரை தற்போது விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

நெல் உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோரின் நலனுக்காகக் கடந்த ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி தொடக்கம் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சினால் குறிப்பிட்ட சில அரிசி வகைகளுக்குக் கட்டுப்பாட்டு விலை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக ஒரு கிலோ வெள்ளைப் பச்சை அரிசி 66 ரூபாவும், ஒரு கிலோ சிவப்பு பச்சை அரிசி 60 ரூபாவும், ஒரு கிலோ வெள்ளைநாடு அரிசி 68 ரூபாவும், ஒரு கிலோ சிவப்பு நாடு அரிசி 66 ரூபாவும், ஒரு கிலோ சம்பா அரிசிக்கு 66 ரூபாவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஆனால் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் நாட்டரிசி உட்பட சில குறிப்பிட்ட அரிசி வகைகளுக்குக் கட்டுப்பாட்டு விலை அறிவிக்கப்படவில்லை.

கட்டுப்பாட்டு விலைகளில் உள்ள அரிசி வகைகளை

(22ஆம் பக்கம் பார்க்க)

## பனங்களியை உற்பத்தி செய்து நீண்டநாள் பாதுகாக்கத் திட்டம்

### பனை அபிவிருத்திச் சபை மேற்கொள்ளும்

யாழ்ப்பாணம், செப்.9

பனங்களியைக் கூடுதலாக உற்பத்தி செய்து அதை நீண்ட நாள்களுக்குப் பாதுகாக்கும்திட்டம் ஒன்றைப் பனை அபிவிருத்தி சபை மேற்கொள்ளவுள்ளது.

இது தொடர்பாக இரண்டு நாள் பயிற்சிப் பட்டறை ஒன்று கைதடியில் உள்ள பனை ஆராய்ச்சி நிலையத்தில் கடந்த 4 ஆம், 5 ஆம் திகதிகளில் இடம்பெற்றதாகச் சபையின் தலைவர் பசுபதி சிவரட்ணம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது பனம் பழத்தின் சீசன் ஆரம்பமாகியுள்ளது. இந்தக் காலத்தில் பனம் பழத்தில் இருந்து பனங்களியைப் பெற்று அதனைப் பாதுகாத்துப் பனம் பொருள் உற்பத்திக்குப் பயன்படுத்தச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கெனக் கடந்த வாரம் இடம்பெற்ற இரண்டு நாள் பயிற்சிப் பட்டறையில் 25 பயனாளிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

பனம்பழத்தில் இருந்து பனங்களியைப் பெறுவது அதனை ஆராய்ச்சிக்கு உட்படுத்திப் பாதுகாப்பது' அதில் இருந்து வெவ்வேறு வகையான பொருள்களை தயாரிக்க பயன்படுத்துவது தொடர்பான பயிற்சிகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுப் பின்னர் அவர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

அத்துடன் இரண்டாம் கட்டமாக 60 இற்கும் மேற்பட்ட பய

(22ஆம் பக்கம் பார்க்க)

## ஊவாவில் பிரசாரத்தை முடித்து திரும்பினர் சமுர்த்தி ஊழியர்கள்

### யாழ்ப்பாணத்திலிருந்து இரகசியமாக அங்கு அழைத்துச் செல்லப்பட்டனர்

யாழ்ப்பாணம், செப். 9

யாழ்.மாவட்டத்திலிருந்து இரகசியமாக, ஊவா மாகாணத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அங்கு தேர்தல் பிரசார நடவடிக்கைகளை முடித்துக் கொண்டு நேற்றுக் காலை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வந்து விடப்பட்டனர்.

ஊவா மாகாண சபைத் தேர்தலுக்காக, பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்படும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 16 ஆயிரம் பேரைப் பிரசாரத்தில் ஈடுபடுத்துவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்த நடவடிக்கைக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி என்பன இணைந்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்திருந்தன. இந்த முறைப்பாடு தொடர்பில் கடந்த 4 ஆம் திகதி மனித உரிமைகள் ஆணைக் குழு தேர்தல்கள் ஆணையாளர், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஆகியோரிடம் விசாரணை மேற்கொண்டிருந்தது.

(22ஆம் பக்கம் பார்க்க)

## நாடு திரும்பினார் ஜப்பான் பிரதமர்

கொழும்பு, செப். 9

உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இலங்கை வந்த ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே நேற்று முற்பகல் ஜப்பான் நோக்கிப் பயணமானார்.

ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் இலங்கை வந்த அவர், ஜனாதிபதி மஹிந்த

(22ஆம் பக்கம் பார்க்க)

## கர்ப்பிணியை கொன்ற ரிப்பர் எரிப்பு; மேலும் ஏழு பேர் பொலிஸில் சரண்

யாழ்ப்பாணம், செப். 9

புத்தூரில் கர்ப்பிணிப் பெண்ணை மோதிக் கொலை செய்ததனால் ஆவேசமடைந்த மக்கள் ரிப்பரைத் தீயிட்டுக் கொழுத்திய நிலையில் அந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 6 பேரைப் பொலிஸார் கைது செய்திருந்த நிலையில்மேலும் 7 பேர்தாமும் அதில் ஈடுபட்டோம் என்று கூறிப் பொலிஸில் சரணடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தூரைச் சேர்ந்த அந்த 7 பேரும் நேற்றுமுன்தினம் அவ்வாறு சரணடைந்துள்ளனர்.

அதற்கு முன்னர் கொல்லப்பட்ட கர்ப்பிணியின் உறவினர்கள் 6 பேரைப் பொலிஸார் கைது செய்து சென்ற நிலையிலேயே 7 பேரும் சரணடைந்துள்ளனர்.

புத்தூர் நவக்கிரியில் கடந்த மாதம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் வீதியால் சென்று கொண்டிருந்த கர்ப்பிணிப் பெண்ணை அந்த வழியூடாக மணல்கொண்டுசென்றமகேஸ்

(22ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலை, வேம்பொடுகேணியில் 243 குடும்பங்கள் மீள்குடியேற பதிவு

கிளிநொச்சி,செப் 9

கிளிநொச்சி மாவட்டத்தின் முகமாலை, இத்தாவில், வேம்பொடுகேணி ஆகிய பகுதிகளில் மீள்குடியேறுவதற்கு 243 குடும்பங்கள் பதிவுகளை மேற்கொண்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் வெடிபொருள்கள் ஆபத்தான நிலையில் காணப்பட்ட முகமாலைப் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் முகமாலை பகுதியில் 103 குடும்பங்களைச் சேர்ந்த 339 பேரும், இத்தாவில் பகுதியில் 10 குடும்பங்களைச்சேர்ந்த 39 பேரும், வேம்பொடுகேணியில் 130 குடும்பங்களைச் சேர்ந்த 842 பேரும்

(22ஆம் பக்கம் பார்க்க)

## மூன்றாம்தரப்பு மத்தியஸ்தமின்றி பேச்சுக்குத் தயாரில்லை

### அரசுக்கு கூட்டமைப்பு பதிலடி; தெரிவுக்குழு ஏமாற்று நாடகம் எனவும் சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 9

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுத்திட்ட விவகாரத்தில் இலங்கை அரசுமீதோ அல்லது அதன் ஏமாற்றுப் பொறிமுறையான நாடாளுமன்றத் தெரிவுக்குழு மீதோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு நம்பிக்கையில்லை. ஆகவே, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் நடைபெறும் பேச்சிலேயே நாம் பங்கேற்போம் - என்று கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்று திட்டவட்டமாக அறிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இருதரப்பு பேச்சு நடத்தப்படமாட்டாது என்றும், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவே தீர்வுக்கு வழியென்றும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அரசின் சார்பில் வெளியிட்டுள்ள அறிவிப்பு தொடர்பில் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தி கருத்து வெளியிடுகையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் மேற்கண்டவாறு கூறினார்.

" இலங்கை அரசு தொடர்ச்சியாக இதேபல்லவியைத் தான் மீண்டும் மீண்டும் பாடிவருகின்றது. எனவே, உலகை ஏமாற்றுவதற்காக அது நியமித்துள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கேற்பதற்கு நாம் தயாரில்லை. அரசுதான் எம்முடனான பேச்சை முறித்துக் கொண்டது. தீர்வுத் திட்ட நகலைக்கூட நாம் முன்வைத்திருந்தோம். எனினும், அரத தரப்பு அதை முன்வைக்கவில்லை. இவ்

(22ஆம் பக்கம் பார்க்க)



## மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பெரும்பான்மையினச் சிங்கள மக்களின் கருத்தை கவர ஆவன செய்யவேண்டும்

## தமிழரசுக் கட்சி மாநாட்டில் வடக்கு முதல்வர் அழைப்பு

எமது புதிய பயணத்தில் பெரும்பான்மையின சிங்கள மக்களின் கருத்தைக் கவர நாம் ஆவன செய்ய வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன். வவுனியாவில் நடைபெறும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 15 ஆவது மாநாட்டின் இறுதி அமர்வில் சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவரது உரையின் முழுவிவரம் வருமாறு:-.

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் இந்தப் பதினைந்தாவது தேசிய மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். எமது உரிமைப் போராட்டம் தற்பொழுது ஒரு முக்கிய கட்டத்தை அடைந்துள்ளது. ஒரு சிலர் தவிர தமிழ்ப் பேசும் பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்ட வடமாகாணசபையானது தேர்தலில் வெற்றிகண்டு பதவியேற்ற பின்னர் பலவிதமான விடயங்களை மீள் பரிசீலனை செய்ய வேண்டிய ஒரு கடப்பாடு எல்லோருக்கும் ஏற்பட்டுள்ளது. கிழக்கு மாகாணசபை தமிழர்சார் அரசியல் பின்னடைவுகளை அண்மையில் கண்டதன் காரணத்தால் வடமாகாணந்தான் இப்பேர்ப்பட்ட ஒரு நிலைமையை ஏற்படுத்தியுள்ளது என்று கூறலாம்.

### சர்வாதிகார அரசு

அரசைப் பொறுத்த வரையில் இவ்வளவு காலமும்.அதாவது 2009ஆம் ஆண்டு மே மாதம் முதல், தாம் நினைத்ததைச் செய்து, தாம் நினைத்ததைக் கொடுத்து, தாம் நினைத்ததை எடுத்து போர் வெற்றியின் அடிப்படையில் சர்வாதிகார முறையில் அது நடத்துவித்து வந்த அரசியல் இயந்திரம் பெருவாரியான வடமாகாண மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட வடமாகாணசபை பதவி ஏற்றதும் அச்சபை எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் அல்லது எவ்வாறு அதனை நடத்துவிக்க வேண்டும் என்று தெரியாமல் திகைப்புற்றிருக்கின்றது. அதே நேரத்தில் வெளிநாட்டு சூழல், அயல்நாட்டு சூழல், உள்நாட்டு சூழல் என்பவை சற்று கரிசனை தந்து கொண்டிருப்பதால் அரசாங்க முக்கியஸ்தர்களைப் பொறுத்த வரையில் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கின்றனர். வடமாகாண முதலமைச்சரைப் பக்கத்தில் வைத்துத் தனிமையில் பேச வேண்டும் என்று சகோதரர்கள் இருவரும் காரணமில்லாமல் வெவ்வேறாகக் கருத்து வெளியிட்டிருக்கமாட்டார்கள். காரணமில்லாமல் நல்லூர் முருகனின் திருவிழாக் காலத்தில் இன்னும் இன்னும் வழங்குவேன்; நீங்கள் முன்னேற வேண்டும்; உங்கள் பிரதேசம் முன்னேற வேண்டும் என்று மாண்புமிகு ஜனாதிபதி அவர்கள் தான் படித்த தமிழில் கூறியிருக்கமாட்டார். இது அரசின் குழப்ப நிலை.

### மூன்று விதமான எமது தமிழ் மக்கள்

எமக்குள்ளும் ஒரு குழப்பநிலை. எம்மைப் பொறுத்த வரையில் மூன்று விதமான எமது தமிழ் மக்கள் உலகெங்கணும் இருந்து ஒருவரை ஒருவர் சாடி நிற்கின்றார்கள். இன்று தந்ததை எடு; தருவதை ஏற்றுக் கொள்; தலையெழுத்தை மாற்ற முடியாது; கிடைப்பதைச் சுருட்டிக்கொள் என்று ஒருசாரார் கூறுகின்றார்கள். அவர்கள் கிடைப்பதைச் சுருட்டிக் கொண்டவர்களாகக் காலம் கடத்துகின்றார்கள். தீர்வோ கிடைத்த பாடில்லை. மேலும் ஒரு சாரார் முன்னர் ஒருவர் கண்ட கனவைத் தாங்கள் நனவாக்க முனைகின்றார்கள். முன்னர் கனவு கண்டவரின் கனவு நனவாகவில்லை என்பது பற்றி அவர்களுக்குக் கரிசனை இல்லை. மாகாணசபை தொடர்ந்திருப்பதால் என்ன நன்மை என்பது அவர்கள் சித்தாந்தம்? மூன்றாவது சாரார் நிலைமையை முழுமையாக உணர்ந்து கொண்டு காலத்திற்கு ஏற்றவாறு, கருத்துக்கு ஏற்றவாறு கண்காணிப்புடன் கருமம் ஆற்றி வருகின்றார்கள். எனினும் அவர்கள் நோக்கிச் செல்லும் தீர்வு யதார்த்தமானது.

### குழப்பங்களில் மாட்டிவிட்டோம்

எல்லா நாடுகளும் ஏற்றுக்கொள்ளக் கூடியவை. அரசும் அவர்களின் அறிவுரைகளை அனுசரித்தே செல்ல வேண்டியிருக்கும். எனவே வடமாகாணசபை வந்தமை பெரும்பான்மையினரை மட்டும் அன்றி எம்மையும் 'சில குழப்பங்களில் மாட்டிவிட்டுள்ளது. இந்தக் குழப்ப நிலைக்குள்ளேதான் எங்கள் பதினைந்தாவது தேசிய மாநாடு இங்கு நடைபெறுகின்றது. ஒரே நாட்டினுள் அஹிம்சை வழியில் எமது அதிகார வரம்புகளை அடையாளம் கண்டு அங்கு நாம் எமக்கென ஒரு ஆட்சியை நிறுவ வேண்டும் என்றே எமது ஆரம்ப கர்த்தாக்கள் முடிவெடுத்திருந்தார்கள். ஆனால் தமிழரசு என்ற சொல் தம்மிடம் இருந்து எம்மைப் பிரித்துக் கொண்டு செல்ல நாம் முனையும் முஸ்தீபு என்று சிங்களத் தலைவர்கள் முடிவு கட்டியமையால் இன்று வடமாகாணசபை எதிர் நோக்குவது போல் அன்றும் மத்திய அரசிடம் இருந்து பல நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டி வந்தது. சிங்களம் மட்டும் என்ற சிந்திக்காத ஒரு சித்தாந்தத்தால் இந்த நெருக்கடி மிக வலுவுற்றது. அதன் பின்னர் 1958ஆம் ஆண்டு பண்டா-செல்வா உடன்பாடு கிழித்தெறியப்பட்டதால் ஏற்பட்ட இனக் கலவரத்தை எதிர்நோக்கியமை, 1960இல் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டமை, 1972இல் கொண்டுவந்த புதிய குடியரசு அரசியல் யாப்பிற்கு எதிர்ப்பு தெரிவித்தல் என்று போராட்டங்கள் பலவாறாக முன்னெடுக்கப்பட்டன.

### தமிழர் - முஸ்லிம் நல்லெண்ணம்

அக்கால கட்டங்களில் எல்லாம் எமது முஸ்லிம் சகோதரர்கள் எம்முடன் தோளோடு தோள் நின்று கட்சியை வளர்த்தார்கள். அக்காலகட்டத்தில் தமிழர் - முஸ்லிம் நல்லெண்ணம் மட்டுமன்றி மலையக மக்களின் தலைவர்களும் எம்முடன் சார்ந்து நின் றார்கள். அமரர் ஜீ.ஜீ. பொன்னம்பலமும், சீ.சுந்தரலிங் கமும் மலையக மக்கள் சார்பில் சௌமியமூர்த்தி தொண்டமானும் தமிழரசுக் கட்சியுடன் கருத்து வேறுபாடுகள் கொண்டிருப்பினும் தந்தை செல்வாவின் அழைப்புக்கு மதிப்புக் கொடுத்து ஒரே மேடையில் தோன்றச் சம்மதித்தார்கள். 1965ஆம் ஆண்டில் டட்லி - செல்வநாயகம் உடன்பாட்டின் காரணமாக சிங்கள - தமிழ் ஒற்றுமையும் ஒரு சில காலம் நிலவியது. 1980ஆம் ஆண்டில் திருமதி பண்டாரநாயக்காவின் குடியியல் உரிமைகளை அரசாங்கம் பறிக்க முயல்கையில் அவர் சார்பாக நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்த ஒரே வேற்றுக் கட்சித் தலைவர் எமது சகோதரர் அண்ணன் அமிர்தலிங்கம் அவர்களே. அப்போது அவர் எதிர்க் கட்சித் தலைவராக இருந்தார். கட்சி பேதமின்றித் தமிழ் மக்களையும், தமிழ்ப் பேசும் முஸ்லிம் மக்களையும், தம்பால் ஈர்த்தே தந்தை செல்வா அரசியல் நடத்தினார். பெரும்பான்மை இனத்தவரிடையே பாகுபாட்டுக்கு ஆட்படுத்தப்பட்ட சிங்கள மக்களுக்கும் குரல் கொடுக்கும் ஒரு கட்சியா கவே இலங்கைத் தமிழரசுக் கட்சி அக்கால கட்டத்தில் பரிணமித்திருந்தது. இதனை நாங்கள் மறக்கக் கூடாது. இவை முற்றாகப் பிரிந்து செல்வோம், முடிவாக நாம் பிரிந்து வாழ்வோம் என்ற ஆயுதமேந்திய குரல் ஒலிப்பதற்கு முன்னர் இருந்த சூழல். அதாவது அதிகாரத்தில் உள்ளவர்கள் தரமாட்டோம் என்றாலும் அவர்களின் தவறைச் சுட்டிக்காட்டினோம், ஆனால் தவறு செய்தவர்களைத் தண்டிக்க நாம் முன்வர வில்லை. இது அஹிம்சையின் வழி. ஆயுதப் போராட்டம் மௌனித்த நிலையில் எமது அந்தப் பாரம்பரியத்தை நாம் மனதில் எடுப்பது உசிதம் என்றதாலேயே அதனை இங்கு நான் குறிப்பிடுகின்றேன்.

### அபிமன்யுவுக்கு நேர்ந்த கதிதான்

ஆனால் அன்றைய நிலை வேறு. இன்றைய நிலை வேறு. ஒரேயொரு தீர்வுதான் உண்டு என்று அந்த இலக்கை நோக்கிச் செல்பவர்கள் அது கிடைக்காவிட்டால் என்ன செய்வது என்பதையும் மனதில் கொள்ள வேண்டும். இல்லையென்றால் மகாபாரதத்தில் அபிமன்யுவுக்கு நேர்ந்த கதிதான் நடக்க நேரிடும். வியூகத்தை உடைத்து உட்செல்ல அறிந்திருந்தவனுக்கு வெளியேவர வழி தெரியவில்லை. பலர் சேர்ந்து அவனைக் கொன்று விட்டனர். எனவே மாற்றுவழியொன்றை மனதில் நிறுத்தாமல் எம் இளைஞர்கள் நுழைந்த பாதை இப்பொழுது எங்கே எங்களைக் கொண்டு வந்து விட்டிருக்கின்றது என்பதை நாம் ஊன்றிக் கவனிக்க வேண்டும். அரசாங்கத்தின் போர் வெற்றி எப்பேர்ப்பட்ட ஓர் இயல்பை வடகிழக்கு மாகாணங்களில் ஏற்படுத்தியுள்ளது என்பதை நாங்கள் உணர்ந்து கொள்வோமாக. போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் வாழ்வாதாரங்கள் இன்றி வாடும் நிலை, போர் எம்மக்கள் மனதில் ஏற்றிய பயம், பீதி ஆகியவற்றினால் ஏற்பட்டுள்ள பாதிப்பு நிலை, இராணுவ கட்டுப்பாட்டினுள் எம்மக்கள் இடருரும் நிலை, எம்மக்களின் பாரம்பரிய வாழ் விடங்களில் பிறமாகாணத்தில் இருந்து கொண்டுவந்து வேற்று மக்களைக் குடியிருத்தும் நிலை, 13ஆவது திருத்தச் சட்டத்தின் வலுவற்ற நிர்வாக நிலை, எமது சிறிது அளவான நிர்வாக அதிகாரத்தினுள்ளும் திவிநெகும என்ற சட்டம் செய்துள்ள ஊடுருவல் நிலை போன்ற பலதையும் எதிர் நோக்கும் நிலையில் எம் மக்கள் உள்ளனர். எமது வடமாகாணசபை பல இடர்களின் மத்தியில்தான் தனது கடமைகளைச் செய்து வருகின்றது. இப்பேர்ப்பட்ட சூழ்நிலையில்தான் நாம் தற்போது நிற்கின்றோம். சர்வதேசச் சூழல், அயல் நாட்டுச் சூழல், மேலும் உள்நாட்டிலும் எழுந்து வரும் சில' சூழல்கள் எமக்கு சாதகமாக இருப்பதை நாம் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். தமிழ் நாட்டுடன் எங்கள் உறவுகள், அறிஞர் அண்ணாத்துரை காலத்தில் இருந்து இன்று ஜெயலலிதா அம்மையார் காலம் வரையில் சுமூகமாக இருந்து வருகின்றதை இங்கு நான் சுட்டிக்காட்ட வேண்டும். எம்மைப் பிரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும் அந்தத் தொடர்பு என்றென்றும் இருந்து கொண்டே இருக்கும்.

### அரசியல்வாதியாக எடைபோடாதீர்கள்

இந்தச் சூழ்நிலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஒரு கட்சி என்ற முறையில் மனதிற்கு எடுக்க வேண்டிய பல விடயங்கள் உள்ளன என்பதை நாம் மறந்து விடக் கூடாது. இதனை அரசியலில் இதுவரைகாலம் உள் நுழையாது நின்று அரசியலில் ஈடுபட்டுள்ள ஒருவராகக் கூற விரும்புகின்றேன். ஒரு புத்திஜீவியின் கருத்தாக அதை எடுத்துக் கொள்ளவேண்டுமே தவிர ஓர் அரசியல்வாதியாக என் கூற்றுக்களை எடைபோடாதீர்கள் என்று தாழ்மையுடன் உங்களிடம் கேட்டுக் கொண்டு எனது கருத்துக்களை முன்வைக்கின்றேன். முதலாவது - இலங்கைத் தமிழரசுக் கட்சி முதிய தலைவர்களுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை இளைய மக்கள் தலைவர்களுடன் பகிராதிருப்பது எனக்கு ஒரு தளர்வு நிலையாகத் தோன்றுகின்றது. எவ்வாறு ஆயுதம் ஏந்தியவர்கள் தாம் இல்லாது போனால் பொது மக்களுக்கு என்ன நடக்கும் என்று சிந்திக்காது போர் நடத்தினார்களோ அதேபோல் எமது சிரேஷ்ட தலைவர்கள் தாங்கள் சடுதியாகப் போய்விட்டால் என்ன நடக்கும் என்று சிந்தித்துச் செயலாற்றுகின்றார்களா என்ற கேள்வி என் மனதில் பூதாகரமாக இருந்து வருகின்றது. அதே நேரத்தில் பேராசிரியர் சிற்றம்பலம் போன்ற மூத்த தலைவர்களை அணைத்துச் செல்லும் கட்சியின் பாங்கை நான் மெச்சுகின்றேன். இரண்டாவது - பெண்களின் பங்காற்றல். தற்பொழுது இலங்கைத் தமிழ்சமுதாயத்தினுள் பெண்களின் தொகை ஆண்களிலுங் கூடியதே என்று நான் நம்புகின்றேன். எப்படியிருப்பினும் வடமாகாணத்தில் இது உண்மையே. எமது அரசியல் செயற்பாடுகளுக்குப் பெண்களைச் சேர்த்துக் கொள்வது மிக முக்கியமாக எனக்குப் படுகிறது.

### அஹிம்சை அரசியல்

போர்க் காலத்தில் எமது பெண்களின் பங்கு மிக நேர்த்தியாக அமைந்திருந்ததை நாங்கள் மறக்கக் கூடாது. இப்பொழுதும் அவர்களுள் பலர் எம்மிடையே வாழ்ந்து வருகின்றார்கள். பலர் வறுமையினால் வாடுகின்றார்கள். மக்களை ஒருங்கிணைத்து ஓர் அஹிம்சை அரசியல் இயக்கமாக மாற்றுவதற்கு அவர்களின் பங்கு மிக முக்கியமானதாக அமையக் கூடும் என்று எனக்குப்படுகின்றது. உரிய உற்சாகத்தையும் அறிவுரைகளையும் பொருளாதார வளங்களையும் வழங்கினால் அவர்கள் நிச்சயமாக எமது மக்களின் ஈடேற்றத்திற்கு வழி வகுப்பார்கள் என்று நான் நம்புகின்றேன். இதைக்கூற இன்னுமொரு காரணமும் உண்டு. உரியவர்களை, உறவினர்களை, உற்றாரைப் பறிகொடுத்து நிற்கும் பெண்கள் பலர் இருக்கின்றார்கள். அவர்களின் உணர்வுகளை எதிர்மறையாகப் பிரயோகிக்க விடாது எமக்கு நன்மை தரக் கூடிய தன்னுறுதியுடைய பாங்காக மாற்றியமைத்து முன்னேற அவர்களை அரசியல் போராட்டத்தில், கட்சி விருத்தியில் ஈடுபடுத்துவது நன்மையைத் தரும். மூன்றாவதாக - இளைஞர்களை ஈடுபடுத்துவது. முதலில் நான் குறிப்பிட்ட இளம் தலைமைத்துவ அங்கத்தவர்கள் மத்திய வயதில் உள்ளவர்கள். இங்கு நான் குறிப்பிடுவது எமது இளைய தலைமுறையினரை. அவர்களை இயக்கக் கூடிய அரசியல் நோக்கத்தை இளைஞர், யுவதிகளுக்கு நாம் அறிமுகப்படுத்த வேண்டும். அரசியல் ரீதியாக மக்களை ஒன்று சேர்க்கவும், அரசியல் சிந்தனைகளை அவர்கள் மத்தியில் வலுப்பெறச் செய்யவும், வருங்காலம் பற்றிய சிந்தனைகள், வாழ்வாதார மேம்பாடுகள் பற்றிய சிந்தனைகள், பண்பாட்டு சூழல் பற்றிய சிந்தனைகள் போன்றவற்றை விருத்தியடையச் செய்து மக்களிடையே கொண்டு செல்லவும் தமிழரசுக் கட்சி உதவி அளிக்க வேண்டும். வெறும் இளைஞர் அணிகளை உருவாக்கி விட்டு சும்மா இருப்பதில் பயன் இல்லை. அல்லது அவர்களுக்கு வன்னியில் இடம்பெற்றுக் கொடுப்பதில் மட்டும் கரிசனை காட்டுவதில் பயனில்லை. அவர்களுக்கான கருத்தரங்குங்கள், பணி மனைகள், விவாதங்கள், கருத்துப்பரிமாறல்கள் என்று அறிவையும் அனுபவத்தையும் மேம்படுத்தும் திட்டங்களைத் தீட்டி உரிய பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும்.

### விவரம் திரட்டும் இராணுவத்தினர்

அதே நேரம் அவர்களுக்கான பொருளாதார விருத்திக்கும் நாம் அடிசமைக்க வேண்டும். தற்போது இராணுவத்தினர் எமது குடும்பங்கள் அனைவரையும் பற்றி சகல விவரங்களையும் கணினியில் உள்ளடக்கி வருகின்றார்கள். எம்முள் பலருக்கு இதுபற்றி எதுவுமே தெரியாது. நேற்றுமுன்தினம் தான் எமது உடல் கூறும் மொழி சம்பந்தமாக இராணுவம் ஆராய்ந்து வருவதைப் பற்றி ஒரு வெளிநாட்டுப் பிரதிநிதியுடன் பேசிக் கொண்டிருந்தேன். ஒருவர் இருக்கும் விதம், சிரிக்கும் விதம், முறைக்கும் விதம், கைகால்களை அசைக்கும் விதம் எல்லாவற்றையும் படம் பிடித்து அவற்றில் இருந்து அந்த மனிதரை எடைபோடக் கூடியதாக விஞ்ஞானம் வளர்ந்துள்ளது. இந்தக் கலையில் இஸ்ரேல் நாடுதான் முன்னணியில் நிற்கின்றது. எமது அரசாங்கம் அந் நாட்டுடன் சுமுகமான உறவினைப் பேணிப் பாது காத்து வருகின்றது. ஆகவே இராணுவம் வட மாகாணத்தில் இருந்து புல்லுத்தின்று கொண்டிருக்கவில்லை என்பதை எம்மக்கள் உணர வேண்டும். எமது இளந்தலைவர்கள் தலைமையின் கீழ் எமது இளைஞர்கள் இராணுவம் பற்றிய சகல விவரங்களையும் சேகரிக்க வேண்டிய அவசியம் தற்போது எழுந் துள்ளது. எங்கெங்கே, எத்தனைபேர், எவ்வளவு ஏக்கர் நிலத்தில் இருக்கின்றார்கள், என்னென்ன வேலைகளில் ஈடுபட்டிருக்கின்றார்கள் போன்ற பல தரவுகளையும் பெற்றுக் கொடுக்க எமது மக்கள் குறிப்பாக இளைஞர், யுவதிகள் ஆற்றுப்படுத்தப்பட வேண்டும். எமது கட்சி முன்னர் போல் மேடைப் பேச்சுக்கள் பேசுவதுடன் இருந்துவிட முடியாது.

### ஈமெயில் விலாசம் என்ன?

நான் கணினி பற்றிய எந்த அறிவும் இல்லாதிருந்தேன் ஒரு 15 வருடங்களுக்கு முன்னர். எங்கள் வயதுக்கு எதற்கு இந்தக் கணினி அறிவு என்ற எண்ணத்தில் இருந்தேன். கருத்தரங்கங்கள் பலவற்றிற்கு நான் வெளிநாடுகளுக்குச் சென்ற போதுதான் எனது குறைபாட்டை நான் உணர்ந்து கொண்டேன். உங்கள் ஈமெயில் விலாசம் என்ன என்று வெளிநாட்டில் பலரும் கேட்டார்கள். எனக்கு அப்படியொன்றும் இல்லை என்று கூறக் கூச்சமாக இருந்தது. உடனே வந்து கணினி அறிவை ஓரளவு பெற்றுக் கொண்டேன். இதே போல்தான் கட்சியின் நடவடிக்கைகளையும் நாம் பார்க்க வேண்டும். தலைமைத்துவத்தில் வெளிப்படைத் தன்மையை இப்பொழுதே கோரத் தொடங்கிவிட்டார்கள் இளைஞர்கள். அதற்கு நாம் இடமளிக்க வேண்டும். உலகளாவிய ரீதியில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் கட்சிக் கிளைகளுடனும் வேறு ஒத்த கருத்துக்கள் உள்ள நிறுவனங்களுடனும் போதிய தொடர்பு வைத்து அவர்கள் செயற்படும் விதம் பற்றிய அறிவைப் பெறவும் மேலும் அரசியல் பற்றிய அறிவையும், அனைத்துலக ரீதியாக எமக்கான வளங்களைப் பெற ஆவன செய்யவும் பின்னிற்கக் கூடாது. புலம்பெயர் எமது உறவுகள் இந்த விடயம் சம்பந்தமாக எமக்கிருக்கும் பாரிய ஒரு வளம் என்பதை நாம் மறத்தல் ஆகாது. கடைசியாக அரசியல் சம்பந்தமான ஒருசில சொந்தக் கருத்துக்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என்று நினைக்கின்றேன். இவற்றை நான் முழுமையாகச் சிந்தித்துப் பார்த்துப் பகர்கின்றேன் என்று கூறமுடியாது. மனதில் உதிப்பதைப் பகிர்ந்து கொள்கின்றேன். நான் கூறும் விடயங்களில் ஏதேனும் நன்மை பயக்கும் கருத்துக்கள் இருந்தால் அவற்றை எம் மக்கள் கவனத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். அதாவது ஆங்கிலத்தில் Conglomerate என்ற ஒரு சொல் இருப்பதை நீங்கள் அறிவீர்கள். திரட்டப்பட்ட அல்லது உருட்டி எடுத்துக் கொள்ளப்பட்ட ஒன்றையே அவ்வாறு குறிப்பிடுவர். இது வாணிப, வணிக உலகில் கையாளப்படும் ஒரு சொல். பல கம்பெனிகள் சிறியதும் பெரியதுமாகச் சேர்ந்து திரட்டப்பட்டு மத்திய ஆளுமையின் கீழ் அவை தனித்துவமாக செயற்படும் போது அந்த முழுமையான கட்டமைப்பை திரட்டப்பட்ட நிறுவனம் என்று அழைப்பர். இதை ஏன் இங்கு கொண்டு வருகின்றேன் என்றால் அரசியலிலும் இந்தக் கருத்தை நாங்கள் உட்புகுத்தலாம் என்று எண்ணுகின்றேன். ஜோன் கீல்ஸ் போன்ற பெரிய கம்பனிகள் இப்பேர்ப்பட்ட திரட்டப்பட்ட கம்பனிகளே. அவை வேலை செய்வ தெல்லாம் சமஷ்டி அடிப்டையிலேயே என்பதை இங்கு கூறுவதற்கே இதை உங்களுக்கு அறிமுகப்படுத்தி னேன். குறிப்பிட்ட ஒரு பொருளை உற்பத்தி செய்யவோ, ஒரு தொழிற் சேவையை மக்களுக்கு ஆற்றி வழங்கவோ அந்தந்த தனிப்பட்ட கம்பனிகள் உதவி செய்வன. ஒரு பொருளை உற்பத்தி செய்ய உகந்த அந்தந்த இடங்களில் கம்பனியானது நிலைபெற்றால்தான் அந்தக் கம்பனி தொழிற் திறனுடனும் மலிவான செலவுடனும் செயற்படலாம். கொழும்பில் இருக்கும் அந்தத் திரட்டப்பட்ட கம்பனியின் தலைமைப் பீடம் மாகாணத்திலோ மாவட்டத்திலோ கிராமத்திலோ தொழிலை மையப்படுத்தி செயற்பட்டு வரும் சிறிய கம்பனியின் செயற்பாடுகளில் பொதுவாகத் தலையிடாது. கொள்கை ரீதியாக மட்டும் சில நேரங்களில் சில கருத்துக்களை முன்வைப்பார்கள். மற்றப்படி சிறிய கம்பெனியைத் தனித்துவமாக செயல்பட இடமளிப் பார்கள்.

### சமஷ்டி என்ற சொல்

ஆகவே இந்தக் கருத்தை நாங்கள் சிங்கள மக்களுக்கு விற்க வேண்டும் என்று கருதுகின்றேன். சமஷ்டி என்ற சொல் சிங்களவர் அகராதியில் தனித்துப் போதல் என்றே பொருள்படுகின்றது. நாட்டைப் பிரித்தல் என்றே அர்த்தப்படுகின்றது. ஒரு திரட்டப்பட்ட கம்பெனியில் சிறியதொரு கம்பெனி எவ்வாறு தனித்துவத்துடன் செயலாற்றுகின்றதோ அதே வகையில் வடகிழக்கு மாகாணங்கள் தம்மைத் தாமே நிர்வகிக்கும் முறையில் அரசியல் யாப்பு அமைய வேண்டும் என்பதையே கடந்த 65 வருடகாலமாக நாங்கள் வலியுறுத்தி வந்துள்ளோம் என்பதை எடுத்துக்காட்ட வேண்டும். சமஷ்டி என்ற சொல்லை அரசியல்வாதிகள் சகதியாக்கியுள்ளதால்தான் வணிக மொழியில் அதே கருத்தை முன்வைத்தால் என்ன என்ற எண்ணம் எழுந்தது. வடமாகாணம் வித்தியாசமான மாகாணம். வேறு மக்கள், வேறு மொழி, வேறு மதங்கள், வேறு பூகோள நிலை, வேறு சீதோஷ்ண நிலை, வேறு விதமான தாவர, மிருக, பட்சிச் சூழல், வேறு கலாசார பண்பாடுகள், வேறு கலைப்படைப்புக்கள் என்று நாட்டின் மற்றைய பிரதேசங்களுக்கு மாறுபட்ட விதத்தில் இங்கு நிலைமை அமைந்திருப்பதை நாம் சுட்டிக் காட்ட வேண்டும். போருக்குப் பின்னரும் நாங்கள் வித்தியாசப்பட்டுவிட்டோம். மக்கள் பாதுகாப்பு, பயத்தில் இருந்து விடுபடவேண்டிய ஒரு மனோ சூழல்.வாழ்வாதார வசதிகளை ஏற்படுத்த வேண்டிய அவசியம் என்று பலதையும் குறிப்பிடலாம். இவை மற்றைய மாகாணங்களில் ஒரு பிரச்சினை அன்று. ஆகவே அப்பேர்ப்பட்ட ஒரு தனி அலகைத் தானாக இயங்க விட்டு ஸ்ரீலங்கா என்ற ஒன்று திரட்டப்பட்ட ஒரு பாரிய கம்பனியின் கீழ் தனித்துவமாக இயங்கும் ஒரு சிறிய கம்பனிபோல் வடகீழ் மாகாணம் இயங்க இடமளிக்க வேண்டும் என்பதை சிங்களப் பெரும்பான்மையினரும், நம்மவரும், உலக நாட்டு மக்களும் உய்த்துணர வழிசெய்ய வேண்டும் என்பதே எமது கோரிக்கையாக இருக்கலாம். வாணிப வணிக உலகத்தில் முக்கியமாக ஸ்ரீலங்காவில் ஒருங்கிணைக்கப்பட்ட அல்லது ஒன்று திரட்டப்பட்ட கம்பனிகள் சமஷ்டி அடிப்படையிலேயே செயற்படுவதைச் சுட்டிக் காட்டுவதால் சிங்கள மக்களிடையே மாற்றுச் சிந்தனைகள் ஏற்படலாம் என்பதே எனது கருத்து. ஆகவே சமஷ்டிக் கருத்துக்கள் பிரிவினையை ஏற்படுத்தாது ஒன்று திரளப்பட்டிருக்கும் கம்பனிகள் மத்தியில் ஜனநாயகம், புரிந்துணர்வு, சகோதரத்துவம் போன்றவற்றை ஏற்படுத்துகின்றன என்பதை எடுத்துக்காட்ட வேண்டும். எமது புதிய பயணத்தில் பெரும்பான்மையின சிங்கள மக்களின் கருத்தைக் கவர நாம் ஆவன செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தவே மேற்படி எடுத்துக் காட்டுக்களை உங்கள் முன்வைத்தேன். இன்றைய இந்த 15ஆவது மாநாட்டில் என்னைப் பேச அழைத்த தம்பி மாவைக்கும் என்பேச்சைச் செவிமடுத்த உங்கள் யாவருக்கும் என் மனமார்ந்த நன்றிகள் - என்றார். (த)

## சாட்டி சிந்தாத்திரை மாதாவின் கொடியேற்றம் வியாழனன்று

வடமராட்சி, செப்.9

யாழ்.மாவட்டத்தில் உள்ள கத்தோலிக்க யாத்திரைத் தலங்களில் ஒன்றான வேலணை சாட்டி சிந்தாத்திரை மாதா தேவாலய வருடாந்த திருவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாவுள்ளது.

எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு திருச்சொரூப மாலையும் தொடர்ந்து 6 மணிக்கு திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து நற்கருணை வழிபாடும் ஆசீர்வாதமும் இடம்பெறும்.

மறுநாள் சனிக்கிழமை காலை 7மணிக்கு யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட் திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் தலைமையில் கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். கூட்டுத் திருப்பலிக்குப் பின்னர் திருச்சொரூப பவனியுடன் வருடாந்தத் திருவிழா நிறைவுறும்.

இதேவேளை - குறித்த ஆலய வருடாந்தத் திருவிழாவை முன்னிட்டு யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் இருந்து சாட்டி வரை விசேட பஸ் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. குடிதண்ணீர் மற்றும் சுகாதார ஒழுங்குகள், பாதுகாப்பு என்பன வேலணை பிரதேச சபை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு, ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையம் ஆகியவற்றால் மேற்கொள்ளப்படும் என்று வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளா தேவி சதீசன் தெரிவித்துள்ளார். (வ-173)

## நல்லொழுக்க தினத்தை முன்னிட்டு மாணவர்கள் இடையே போட்டிகள்

கரணவாய், செப்.9

சர்வதேச நல்லொழுக்க தினத்தை முன்னிட்டு வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தால் பாடசாலை மாணவர்களுக்கு இடையே பல்வேறு போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

சர்வதேச நல்லொழுக்க தினம் எதிர்வரும் ஒக்ரோபர் 3ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது. இதனை முன்னிட்டு வடமராட்சி கல்வி வலயத்துக் குட்பட்ட மாணவர்களின் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக பேச்சு, நாடகம் மற்றும் விவாதப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இதில் தரம் 4,5 வகுப்பு ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கு சிறுவர் உரிமைகளைப் பாதுகாத்தல் என்ற தலைப்பிலும் - தரம் 6,7,8 வகுப்பு மாணவர்களுக்கு 'புகைத்தல் பாவனையற்ற நல்லொழுக்க சமுதாயத்தை உருவாக்க முன் வருவோம்' என்ற தலைப்பிலும்- தரம் 10,11 வகுப்பு மாணவர்களுக்கு 'மது பாவனையற்ற நல்லெழுக்க சமுதாயத்தை உருவாக்க முன்வருவோம்' என்ற தலைப்பிலும்- தரம் 12, 13 வகுப்பு மாணவர்களுக்கு போதைப் பொருள் பாவனையற்ற நல்லொழுக்க சமுதாயத்தை உருவாக்க முன் வருவோம் என்ற தலைப்பிலும் பேச்சுப் போட்டிகள் இடம்பெறவுள்ளது.

'மது, புகை போதையற்ற நல்லொழுக்க சமூகத்தை உருவாக்க முன்வருவோம்' என்ற தலைப்பில் 15-20 வரையான மாணவர்கள் பங்குபற்றும் நாடகமும்-

தரம் 12,13 வகுப்பு மாணவர்கள் பங்குபற்றும் 'இன்றைய சமுதாயத்தை மது, புகை, போதை பாவனையற்ற நல்லொழுக்க சமுதாயமாக உருவாக்க உதவுவது பாடசாலைச் சமூகமா? புறச்சூழலா?' என்ற கருப் பொருளில் விவாத மேடையும் இடம் பெறவுள்ளன.

குறித்த போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் மாணவர்கள் பற்றிய விவரங்களை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் இணைப்பாளர், வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம், அல்வாய் கிழக்கு, அல்வாய் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அதன் செயலாளர் சூ.குலநாதன் கேட்டுள்ளார். (வ-108)

## செல்வச்சந்நிதியில் குருதிக் கொடை

யாழ்ப்பாணம், செப்.9

பொன்னொளி ஐக்கிய விளையாட்டுக்கழகம், பொன்னொளி ஐக்கிய இலவச வாசிகசாலை ஆகியவற்றின் அனுசரணையுடன் வல்வெட்டித்துறை பிரதேச மருத்துவமனை நோயாளர் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் பி.ப.3 மணி வரை செல்வச்சந்நிதியில் அமைந்துள்ள பல நோக்கு மண்டபத்தில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனை இரத்த வங்கியினரால் நடமாடும் குருதிக்கொடை முகாம நடத்தப்படவுள்ளது. (வ)

## புங்குடுதீவு மருத்துவமனைக்கு பஸ்சேவை ஏற்படுத்த வேண்டும்

### அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்

யாழ்ப்பாணம், செப்.9

புங்குடுதீவு மருத்துவமனைக்கு பஸ்சேவை ஏற்படுத்தப்பட வேண்டும் என்று அந்தப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இறுப்பிட்டி மற்றும் ஊரதீவு, வல்லன் போன்ற தூர இடங்களில் இருந்து நோயாளர்கள் புங்குடுதீவு மருத்துவமனைக்குச் செல்வதற்கு மிகவும் சிரமப்பட வேண்டியுள்ளது. அத்துடன் புங்குடுதீவு மகாவித்தியாலய சந்தியில் இருந்து ஆஸ்பத்திரிக்குச் செல்வதற்கு நோயாளர்கள் சுமார் ஒரு கிலோ மீற்றர் வரை நடந்தே செல்ல வேண்டியுள்ளது. ஆஸ்பத்திரி வரை வேறு எந்தவொரு போக்குவரத்துச் சேவையும் இல்லை.

எனவே இந்த மார்க்கத்தில் காலை 8.30, 9.30 மணிக்கும், பிற்பகல் 2.30, 4.30 மணிக்கும் பஸ் சேவை இடம் பெறக்கூடியதாக குறிகாட்டுவான் வழித்தடத்தில் சேவையில் உள்ள பஸ்களை குறித்த நேரங்களில் ஆஸ்பத்திரி வரை சேவையில் ஈடுபடுத்த ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும் என்று மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-7)

## வங்கிக் கணக்குக்கு ஓய்வூதியம்

தென்மராட்சி, செப்.9

ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதியம் அவர்களது வங்கிக்கணக்குக்கு நேரடியாக அனுப்பப் படவுள்ளதால் இந்த மாதம் தொடக்கம் ஓய்வூதிய வவுச்சர்கள் ஓய்வூதியர்களின் விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படமாட்டாது.

மேற்கண்டவாறு பிரதேச செயலக ஓய்வூதியக் கிளையினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. ஓய்வூதியர்கள் ஓய்வூதியத் திகதியில் வங்கியில் தமது ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதிய வவுச்சர் இன்றி ஓய்வூதியம் வ்ழங்குவது தொடர்பாகக் கடந்த ஜூலை மாதம் ஓய்வூதியர்களிடமிருந்து ஓய்வூதியக் கிளையினரால் படிவம் மூலம் விவரங்கள் பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-9)

## விசேட இலவச தொழில்சார் பயிற்சிகள்

வடமராட்சி, செப்.9

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழக 30 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு விசேட இலவச தொழில்சார் பயிற்சித் திட்டங்கள் நாளை புதன் கிழமை ஆரம்பமாகவுள்ளன.

பயிற்சிகளில் இணைந்து கொள்ள விரும்புவோர் வார நாள்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரைவதிரி, உடுப்பிட்டிவீதியில் அமைந்துள்ள வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தில் நேரில் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம். (வ)

## ஐக்கிய மொழிச் சங்கம் வடமராட்சியிலும் ஆரம்பம்


வடமராட்சி, செப்.9

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் கீழ் இயங்கும் ஐக்கிய மொழிச் சங்கம் வடமராட்சிப் பிரதேசத்திலும் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மொழி தொடர்பான பரஸ்பர புரிந்துணர்வை ஏற்படுத்தும் முகமாக வதிரியில் உள்ள வடமராட்சி சுருக்கெழுத்துக் கழக மண்டபத்தில் இடம் பெற்ற குறித்த சங்க ஆரம்ப நிகழ்வில், தேசிய மொழிகள் மற்றும் ஒருமைப்பாட்டு அமைச்சின் யாழ்.மாவட்ட தேசிய இணைப்பாளர் செல்வி என்.ஜனனி, கரவெட்டிப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எம்.முரளி, கிராம சேவையாளர் ஜே.சசிகாந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வடமராட்சி ஐக்கிய மொழிச் சங்கத்தின் தலைவராக கரணவாயைச் சேர்ந்த எஸ்.கணேசமூர்த்தியும், உப தலைவராக கரவெட்டியைச் சேர்ந்த திருமதி பி.கலைவாணியும், செயலாளராக புலோலியைச் சேர்ந்த எஸ்.யாழினியும், உப செயலாளராக அதே இடத்தைச் சேர்ந்த எஸ்.மதுராவும், பொருளாளராக அல்வாயைச் சேர்ந்த வி.விமலனும் தெரிவு செய்யப்பட்டனர்.

செயற்குழு உறுப்பினர்களாக யூ.பற்றிக், செல்வி என்.சோபனா, செல்வி எஸ்.ரூபிகா, செல்வி வி.தாட்சாயிணி ஆகியோரும் தெரிவானார்கள். (வ-173)






# மன்னார் மீனவர்களின் எதிர்காலம் கேள்விக்குறி

## சமாச தலைவர் ஆலம் கவலை



மன்னார், செப். 9

மன்னார் மாவட்ட மீனவர்கள் தமது வருவாயை பெற்றுக் கொள்ளுவதில் பெரும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதாக மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவுச் சங்கச் சமாசத் தலைவர் என்.எம். ஆலம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மன்னார் மாவட்ட மீனவர்கள் தமது நாளாந்த வாழ்வாதாரக்கை [illegible] பயன்படுத்துவதில பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளைச் சட்டவிரோதமாகப் பயன்படுத்துவதனாலேயே மீனவர்கள் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர்.

குறிப்பாக இந்திய மீனவர்களின் இழுவைப்படகுத் தொழில் முறைகள், நாட்டுப் படகுகளின் தொழில் நடவடிக்கைகள் காரணமாக மாவட்ட மீனவர்கள் அதிகளவில் பாதிப்படைந்துள்ளனர்.

நாட்டுப் படகுகளில் வருகை தரும் இந்திய மீனவர்கள் கடலில் நீண்ட நாள்கள் தங்கி நின்று மீன்பிடித்துச் செல்கின்றனர்.

இதனால் நாளாந்தம் தொழிலுக்குச் செல்லும் எமது மீனவர்கள் பாதிப்படைந்துள்ளனர்.

மேற் குறித்த தொழில் முறைகள் இலங்கை அரசினால் எமது மீனவர்களுக்கு தடை விதிக்கப்பட்ட தொழில் முறைகளாகக் காணப்படுகின்றன.

ஆனால் தடை செய்யப்பட்ட குறித்த மீன்பிடி நடவடிக்கைகளை இந்திய மீனவர்கள் எமது கடற்பரப்பினுள் மேற்கொள்கின்றனர்.

இழுவை மடித்தொழில் கடல் [illegible] வளத்தை அழிக்கக்கூடியது என்பதால் இலங்கையில் குறித்த இழுவை மடித்தொழிலுக்கு அரசு தடை விதித்தது.

அது மட்டுமன்றித் தங்கூசி வலைகளைப் பயன்படுத்தி இந்திய மீனவர்களினால் மேற்கொள்ளப்படும் தொழில் நடவடிக்கைகளும் இலங் கையில் தடை செய்யப்பட்டுள் ளன.

ஆனால் இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்கள் இலங்கையில் தடை விதிக்கப்பட்டுள்ள மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்தித் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக இலங்கையின் வட பகுதியில் அதிலும் மன்னார் மாவட்டத்தில் இவ்வாறான தொழில் நடவடிக்கைகள் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன.

அத்துமீறி தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டால் குறித்த வலைத் தொகுதிகள் பறிமுதல் செய்யப்படுவதோடு குறித்த மீனவர்களுக்கு எதிராக மன்னார் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றது.

மன்னார் மாவட்ட மீனவர்கள் தொடர்ச்சியாக பெரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

ஆனால் இவ்வாறு பாதிக்கப்படும் மீனவர்களை இலங்கை அரசும் சரி வட மாகாண சபையும் சரி கண்டு கொள்வதாக இல்லை.

பல வருடங்களாக இந்தப் பிரச்சினை தொடர்ந்து கொண்டு செல்கின்றது.

குறிப்பாக மன்னார் மாவட்ட மீனவர்கள் தென்னிலங்கை மீனவர்களினால் தொடர்ச்சியாகப் பாதிப்படைந்து வருகின்றனர்.

தென்னிலங்கை மீனவர்கள் பருவ காலத்துக்கு மன்னார் வந்து குடும்பத்துடன் தங்கியிருந்து மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். இதனால் மன்னார் மாவட்ட மீனவர்களின் நிலை கேள்விக்குறியான நிலையில் உள்ளது.

இது மட்டுமன்றி மன்னார் மாவட்ட மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த எரிபொருள் மானியம் தற்போது நிறுத்தப்பட்டு இரண்டு வருடங்களைக் கடக்கின்றது.

தற்போது எரிபொருள் மானியத்துக்குப் பதிலாக வலைகளும் ஏனைய உபகர ணங்களும் வழங்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்ற போதும் அவை இன்னும் முழுமையாக வழங்கப்பட வில்லை.

மன்னார் மாவட்டத்தில் தற்போது 9 ஆயிரத்து 500 மீனவக் குடும்பங்கள் உள்ளன.

இதில் ஆண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட 7ஆயிரம் மீனவக் குடும்பங்களும் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட 2ஆயிரத்து 500 மீனவக் குடும்பங்களும் அடங்கு கின்றன. இவர்களை நம்பி மன்னார் மாவட்டத்தில் 38 ஆயிரம் மீனவக் குடும்ப உறவுகள் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த மீன்பிடி மூலம் கிடைக்கின்ற வருமானத்தை வைத்து உணவு, கல்வி , மருத்துவம் உட்பட சகல தேவைகளையும் நிறைவேற்றுகின்றனர்.

இந்த வருவாய் இழக்கப்படுகின்றபோது குறித்த மீனவக் குடும்பங்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது.

எனவே பல்வேறு துயரங்களுக்கு முகம் கொடுத்து வரும் மன்னார் மாவட்ட மீனவர்களுக்கு வட மாகாண அரசும், மத்திய அரசும் உரிய தீர்வைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் - என்றார். (த-56)

> ஆண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட 7ஆயிரம் மீனவக் குடும்பங்களும் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட 2 ஆயிரத்து 500 மீனவக் குடும்பங் களும் அடங்குகின்றன.


**பன்னிரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி**

செல்வி கந்தவனம் தர்சிகா
(மாணவி, கொக்குவில் இந்துக்கல்லூரி)

திதி : 09.09.2014



சிந்தாமணி விநாயகர் அருளியது 25.05.1990

சிந்தாமணி விநாயகர் கழல் சேர்ந்தது 23.08.2002

கந்தவனம் மனையில்
களித்தாறி மீண்டென்கால்
வந்திடுவாய் என்றேதான்
வரந்தந்தனுப்பினரோ
சிந்தாமணி கஜனார்
செல்வி தர்ஷிகா மகளே!
சிந்தாமணியின் பாதம்
தித்திக்க வாழி அம்மா!

கவி போட்டோ, நவாலி தெற்கு.

அப்பா, அம்மா, சகோதரர், சகோதரி, அத்தான், அண்ணி, உற்றார், உறவினர்.

(51576)(7.6.3)

**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**



அமரர் அன்னம் கந்தசாமி

மண்ணில் 10.04.1926

விண்ணில் 10.08.2014

கடந்த 10.08.2014 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள், ஒத்தாசைகள் புரிந்த, அஞ்சலி ஆறுதல் தெரிவித்த, இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட அன்பு நெஞ்சங்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (09.09.2014) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

"அன்ன மாளிகை"
அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.
077 617 9142

குடும்பத்தினர்.

**இலெக்ட்ரிக் மோட்டர்**



விலை ரூபா 7,500/= இருந்து

GENERAL EQUIPMENTS (PVT) LTD.
316 & 400, Sri Sangaraja Mw, Colombo - 12.
Tel: 0112327264, 0112343822, 0112343823, 0112430799. Fax: 2434637, 2345046.

**ஆங்கில வகுப்பு**

O/L ஆங்கில பெறுபேறு தரமான பல்கலைக் கழக அனுமதிக்குத் தடையா? கவலையை விடுங்கள்.
(தனிப்பட்ட மற்றும் குழு வகுப்புகள் நடைபெறும்) (51842)(4.6.3)
தொடர்பு: 077 611 4068 - ஜீவன் (அனுபவமிக்க ஆங்கில ஆசிரியர்)

**பெயர் மாற்றம்**

உரும்பிராய் வடக்கு, உரும்பிராயைச் சேர்ந்த சஞ்ஜே சஞ்ஜீவ் சிவஞானம் ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை சஞ்ஜே சிவஞானம் என பெயர்மாற்றம் செய்வதோடு, இனிவரும் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என சகலருக்கும் அறியத்தருகிறேன். சஞ்ஜே.
(51841) (4.6.3)

**காணி விற்பனைக்கு**

தெல்லிப்பழை, பூந்தோட்டம் (குருநாதர் கோயிலடி) மகாஜனக் கல்லூரியில் இருந்து 400m தூரத்தில் 2½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 501 2864
(51845) (45.3.6)

**தேவை**

நடனம், வயலின், சங்கீதம், ஓகன் ஆகிய வகுப்புக்கள் நடத்துவதற்கு வீடு வாடகைக்குத் தேவை. பகுதியாக இருப்பினும் பரவாயில்லை. யாழ் நகரை அண்டிய பகுதிகளில் விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 456 8636 (51840)(4.6.3)

**கடை வாடகைக்கு**

கொடிகாமம் நகர் பகுதியில் ஏ9 வீதியில் 51x25 அடி அளவுடைய கட்டடம் அரச, தனியார் நிறுவனங்களுக்கு வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு: 077 542 5028
(47269) (4.6.3)

**After A/Level's**

சர்வதேச அங்கீகாரம் பெற்ற கொம்ப்யூட்டர் மற்றும் ஆங்கிலக்கல்வி

Mega கொம்ப்யூட்டர் தொழிற்கல்விக்கான புலமைப்பரிசில்

Sept. 21st ஞாயிறு

Win 75% Discount Offer

கிளிநொச்சி & வவுனியாவில் 14-09-2014 & யாழ்.நகரில் 21-9-2014 பரீட்சை நடைபெறும்

CSC-ASIAN COMPUTER EDUCATION

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 2G ஸ்ரான்லி வீதி, 021-2225677 |
| கிளிநொச்சி | A9 வீதி, ஆனந்தபுரம், 021-2283925 |
| வவுனியா | 192, குருமன்காடு சந்தி, 024-2226050 |

**மரண அறிவித்தல்**

சதாசிவம் ஜெகதீசன் (அம்பி)



நயினாதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் ஜெகதீசன் 06.09.2014 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் -சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை மற்றும் நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், இந்திரமலரின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான முத்தையா- செல்லமுத்து ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்ற துரைராசாவின் அன்புச்சகோதரரும், மெற்றில்டா (கற்பிட்டி), சத்தியபாமா (டென்மார்க்), உதயகுமார் (இலங்கை), சத்தியபிரேமா (டென்மார்க்), பிரேமாவதி (டென்மார்க்), பிரேமினா (லண்டன்), பிரேமலதா (டென் மார்க்) ஆகியோரின் மைத்துனரும், ராஜன் (டென்மார்க்), உருத்திரா (இலங்கை), ஜெயந்திசிவம் (டென்மார்க்), கணேசமூர்த்தி (டென்மார்க்), ஜலால் (லண்டன்), கெங்காதரன் (டென்மார்க்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்:
இந்திரமலர் (மனைவி)
உதயகுமார் (மைத்துனர்)

19/2, புகையிரத நிலைய வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
021 321 0984/077 503 6118
(51846)(6.4.3)

உலகச் செய்திகள்

# லெபனான் வீரர் தலை துண்டித்து படுகொலை

## ஐ.எஸ். தீவிரவாதிகள் மீண்டும் வெறிச் செயல்



பெய்ரூட், செப்.9
லெபனான் வீரர் ஒருவரின் தலையை துண்டித்து ஐ.எஸ். தீவிரவாதிகள் படுகொலை செய்து மீண்டும் வெறிச் செயலில் ஈடுபட்டுள்ளனர்.
ஈராக் மற்றும் சிரியாவின் சில பகுதிகளை இணைத்து இஸ்லாமிய நாடு அமைப்பதற்காக ஐ.எஸ். தீவிரவாதிகள் தொடர்ந்து தாக்குதலில் ஈடுபட்டு வருகிறார்கள். சிரியாவில் உள்நாட்டு போர் செய்திகளைச் சேகரிக்க ச் சென்ற அமெரிக்க செய்தியாளர்கள் ஜேம்ஸ் போலே, ஸ்டீவன் சாட்லாப் ஆகியோரை ஐ.எஸ். தீவிரவாதிகள்பிணைக் கைதிகளாக பிடித்துச் சென்றனர். அவர்களில் ஜேம்ஸ் போலே கடந்த மாதம் தலை துண்டித்து படுகொலை செய்யப்பட்டார். அதேபோல் கடந்த 2 ஆம் திகதி ஸ்டீவன் சாட்லாப் தலை துண்டித்து கொல்லப்பட்டார்.
இந்தநிலையில், தற்போது லெபனான் நாட்டைச் சேர்ந்த போர் வீரர் ஒருவரின் தலையைத் துண்டித்து தங்கள் வெறிச்செயலை மீண்டும் நிறைவேற்றியுள்ளனர் ஐ.எஸ். தீவிரவாதிகள். கடந்த மாதம் லெபனான் எல்லைப் பகுதியான ஆர்சால் நகரில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கும், லெபனான் படை வீரர்களுக்கும் இடையே கடும் மோதல் ஏற்பட்டது. அப்போது, லெபனான் படை வீரர்கள் 19 பேரை தீவிரவாதிகள்பிணைக்கைதிகளாகப் பிடித்து வந்தனர். அவர்களில் அலி அல்-செய்யது என்பவரை கடந்த வாரம் தலையைத் துண்டித்து கொலை செய்தனர். இதன்தொடர்ச்சியாக, நேற்றுமுன்தினம் மற்றொரு வீரரான அப்பாஸ் மெட்லிஜ் என்பவர் தப்பிச் செல்ல முயற்சித்தபோது தலையைத் துண்டித்து தீவிரவாதிகளால் கொல்லப்பட்டார். (வ)

# காஸாவில் முறையான நிர்வாகம் இல்லாவிட்டால் ஒப்பந்தம் ரத்து

## பலஸ்தீன ஜனாதிபதி எச்சரிக்கை

ரமல்லா, செப். 9
காஸாப் பகுதியில் முறையாக நிர்வாகம் நடைபெறவில்லையானால், ஹமாஸ்- பலஸ்தீன ஒப்பந்தத்தை முறித்துக் கொள்ள வேண்டி வரும் என்று பலஸ்தீன ஜனாதிபதி மகமூத் அப்பாஸ் எச்சரித்தார்.
காஸா நிர்வாகம் தொடர்பாக, தீவிரவாத இயக்கமான ஹமாஸ் மற்றும் பலஸ்தீன அரசு இடையேயான ஒப்பந்தம் கடந்த ஏப்ரல் மாதம் கைச்சாத்தானது. இதன் மூலம், சுமார் ஏழு ஆண்டுகளாக நிலவி வந்த அதிகாரப் பிரச்சினை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.
அதையடுத்து, அதிகாரிகள், பல்வேறு நிபுணர்கள் இடம் பெற்ற இடைக்கால அரசு ரமல்லா நகரில் ஜூன் மாதம் பதவியேற்றது. இந்த இடைக்கால அரசு அதிகாரம் ஏற்றதும் ஹமாஸின் அதிகாரம் முடிவுக்கு வந்ததாகக் கூறப்பட்டாலும் இது முழுமையாக நடைமுறைக்கு வரவில்லை.
காஸாவின் நிர்வாகத்தில் ஹமாஸின் ஆதிக்கம் தொடர்ந்தது.
இந்தநிலையில், இஸ்ரேல்-ஹமாஸ் போர் மூண்டதால் அதிகார மாற்ற நடவடிக்கைகள் முற்றிலுமாக ஸ்தம்பித்தன. இஸ்ரேல்-ஹமாஸ் சண்டை முடிவுக்கு வந்ததையடுத்து, இந்த விவகாரம் மீண்டும் விவாதப் பொருளாகியுள்ளது.
இந்தநிலையில், எகிப்தில் பேச்சு நடத்த கெய்ரோ வந்துள்ள பலஸ்தீன ஜனாதிபதி மகமூத் அப்பாஸ் சனிக்கிழமை தெரிவித்ததாவது:
காஸா நிர்வாகத்தில் ஹமாஸின் தற்போதைய நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது. இடைக்கால் அரசு முறையாக நிர்வாகம் நடத்த முடியாத நிலை உள்ளது.
இந்த நிலை தொடருமானால், ஹமாஸுடனான ஒப்பந்தத்தை முறித்துக் கொள்ள வேண்டிவரும் என்று எச்சரித்தார். (வ)

# அல்-ஷபாப் ஆயுத இயக்கத்தின் புதிய தலைவராக உமர்

சோமாலியாவின் அல் ஷபாப் ஆயுத இயக்கம் தனது புதிய தலைவரின் பெயரை வெளியிட்டுள்ளது. முன்னாள் தலைவரான அஹமட் அப்டிகொடேன் அமெரிக்க வான்தாக்குதலில் கொல்லப்பட்டதை அடுத்து புதிய தலைவராக அஹமட் உமர் பெயரிடப்பட்டுள்ளார்.
அல் ஷஷாப் இயக்கத் தலைவர் பயணித்த தொடரணியை இலக்கு வைத்து கடந்த திங்கட்கிழமை அமெரிக்கா தாக்குதல் நடத்தியிருந்தது. இதில் தலைவர் அஹமட் அப்டி கொடேன் கொல்லப்பட்டுள்ளதை அமெரிக்கா உறுதிப்படுத்தியுள்ளது. (வ)



யேமனிலுள்ள ஹௌதிக்கள் ஸனா விமான நிலையத்துக்குச் செல்லும் முக்கிய வீதியில் ஷியா முஸ்லிம் குழு கிளர்ச்சியாளர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதன்போது கலவரத்தடுப்பு பொலிஸாருடன் மோதல் இடம்பெற்றது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர்மீது பொலிஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் நடத்தினர். இதன்போது பாதிக்கப்பட்ட ஒரு சக எதிர்ப்பாளரை மருத்துவமனைக்குக் கொண்டு செல்கின்றனர். (வ)

# மோர்சிக்கு தூக்குத் தண்டனைக்கு வாய்ப்பு



கெய்ரோ, செப்.9
எகிப்தின் இராணுவ இரகசியங்களை கசிய விட்டமை தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி மோர்சிக்குத் தூக்குத் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்படக் கூடும் என்று அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
சமீபத்தில் கத்தார் நாட்டுக்கு எகிப்தின் இராணுவ இரகசியங்களை வழங்கியதாக மோர்சி உட்பட 10 பேர் மீது கடுமையான சட்ட பிரிவுகளில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.
இந்த வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்டால் முகமது மோர்சிக்கு தூக்குத் தண்டனை கிடைக்க வாய்ப்பு உள்ளது என்று எகிப்து சட்ட நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்த செய்தியை அந்தநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (வ)



# சீனாவில் 20,000 தம்பதியினருக்கு 2 ஆவது குழந்தை பெற அனுமதி

பீஜிங், செப்.9
சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் சுமார் 20 ஆயிரம் தம்பதியினருக்கு இரண்டாவது குழந்தையைப் பெற்றுக்கொள்வதற்கு அந்த நாட்டு அரசு அனுமதி வழங்கியுள்ளது.
அதிகரித்துவரும் சனத்தொகை சவாலை எதிர்கொள்ளும் வகையில் சர்ச்சைக்குரிய ஒரு குழந்தை கொள்கையை சீனா நடைமுறைப்படுத்தியுள்ளது.
இதன்பிரகாரம் இரண்டாவது குழந்தைக்கான பிறப்பு விண்ணப்பங்களை சமர்ப்பித்திருந்த 21 ஆயிரத்து 249 பேரில், 19 ஆயிரத்து 363 பேருக்கு அதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
இந்த அனுமதி வழங்கப்பட்டவர்களில் 56 வீதமானவர்கள் 31 வயது தொடக்கம் 35 வயதுக்கு இடைப்பட்ட பெண்கள் என்று சீன அரச தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது. (வ)

# உலகின் மிகப் பெரிய டைனோசர் வாழ்ந்த ஆதாரம் ஆர்ஜென்டீனாவில்

உலகின் பிரமாண்டமான முதலாவது சூப்பர் மேஸிவ் டைனோசர் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் ஆர்ஜென்டீனாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
டிரெக்ஸல் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் கென்னத் லேகோவரா ஆர்ஜென்டீனாவின் படகோனியா பகுதியில் அதற்கான ஆதாரங்களைக் கண்டுபிடித்திருக்கிறார். தற்போது வரை உலகின் மிகப் பெரிய டைனோசராகக் கருதப்படும் டி.ரெக்ஸை போல 7 மடங்கு பெரியதாக இந்த டைனோசர் இருந்துள்ளது. அதனுடைய. எலும்புக்கூடுகள் மண்ணில் புதைந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த டைனோசர் 12 ஆபிரிக்க காட்டு யானைகளின் எடைக்குச் சமமான எடை கொண்டது.



அதனுடைய மண்டை ஓட்டை ஆராய்ச்சி செய்ததில் 65 தொன் எடை கொண்டதாக இருக்கலாம் என்று தெரிகிறது.
37 அடி நீளமுள்ள கழுத்தை கொண்டுள்ள இந்த டைனோசர் மொத்தம் 85 அடி உயரத்தை கொண்டிருந்துள்ளது. இது வரை ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளவற்றில் இந்த டைனோசர் தான் பூமியில் வாழ்ந்த மிகப்பெரிய உயிரினமாகும். ஆராய்ச்சியாளர்கள் கண்டெடுக்கப்பட்ட டைனோசரின் எலும்புகளை 70 சதவீதம் வரை ஒன்றிணைத்திருக்கின்றனர். முழுவதும் இணைத்த பின்னர் முழுமையான ஆராய்ச்சியின் தகவலும் வெளிவர உள்ளது. எனினும், விஞ்ஞானிகளின் முடிவுப்படி, புதிதாக கண்டு பிடிக்கப்பட்டுள்ள இந்த பெரிய டைனோசர் பெரும்பாலும், தாவரங்களை மட்டுமே உணவாக உட்கொள்ளக்கூடிய 'டிட்டனோசரஸ்' வகையை சார்ந்தது என்று தெரியவருகின்றது. (வ)

# பசுபிக் பெருங்கடலில் எரிமலை

வொஷிங்டன், செப்.9
பசுபிக் பெருங்கடல் பகுதியில், பத்துக் கோடி ஆண்டுகளுக்கு முந்தைய இதுவரை வெடிக்காத எரிமலை, நீர் மட்டத்திலிருந்து, 4 கி.மீ. ஆழத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
அமெரிக்காவின், நியூ ஹாம்ஷைர் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் இந்த பிரமாண்ட எரிமலையை கண்டுபிடித்துள்ளனர். கடலுக்குள், 5,100 மீற்றர் ஆழத்தில், 1,100 மீற்றர் உயரத்துடன் இது உள்ளது.




பத்துக் கோடி ஆண்டுகளுக்கு முன் வெடித்த எரிமலையிலிருந்து இது உருவாகியிருக்க வேண்டும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (வ)

# எனக்குப் பதிலாக இன்னொரு தலைவர் தேவையில்லை

## தலாய்லாமா திட்டவட்டம்

திபெத்தில் தமக்குப் பதிலாக இன்னொரு தலைவர் தேவையில்லை என்று பௌத்தர்களின் ஆன்மிகத் தலைவரான தலாய்லாமா திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.
ஜேர்மனி பத்திரிகைக்கு அண்மையில் அளித்த செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.
தானே திபெத்தில் இறுதி ஆன்மிகத் தலைவர் என்றும் தமக்குப் பின் இந்தப் பழமையான சமய கலாசார வழக்கம் ஒரு முடிவுக்கு வந்து விடும் என்றும் தனது ஹிமாலயன் தாயகத்தில் இருந்து கூறிய கூற்று சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.
Welt am Sonntag என்ற குறித்த பத்திரிகையில் வெளியான கூற்றின்படி தலாய்லாமாவின் பணி தனது உண்மையான தேவைக்கான சேவை முடிவுக்கு வந்து விட்டது என்றும் வெறுமனே இல்லாமல் வெளிப்படையாகவே இவ்விடயம் தெளிவாகியுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.



தலாய்லாமா வின் சொந்த வரிகளில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.
தலாய்லாமா மேலும் கூறுகையில், 'திபெத் பௌத்த மதம் வெறும் தனி நபரில் தங்கியிருக்கவில்லை.
நாம் அனைவரும் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட கட்டமைப்பை நன்கு பயிற்றுவிக்கப்பட்ட துறவிகள் மற்றும் அறிஞர்கள் மூலம் உருவாக்கியுள்ளோம் என்றும் தெரிவித்தார்.
இந்த நிலையில் 1951 இல் சீனா திபெத்தைக் கைப்பற்றியபோது தப்பிச் சென்று இந்தியாவுக்கு அடைக்கலம் தேடி வந்தவரே இப்போதுள்ள இந்தத் தலாய்லாமா ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது.
அவருக்கு 2011 இல் அமைதிக்கான நோபல் பரிசு அளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.
இதேவேளை 79 வயதாகும் தலாய்லாமா தான் 113 வருடங்கள் வரை உயிர்வாழ்ந்தே மடிவேன் அல்லது குறைந்தது 100 வயதளவில் தான் மறைவேன் எனவும் இதற்கிடையில் தான் விவாதிக்க வேண்டிய கடமைகள் பல உள்ளன என்றும் கூறியுள்ளார். (வ)

# காஷ்மீர் வெள்ளப் பாதிப்புக்கு ரூ.1000 கோடி உடனடி உதவி

## நேரில் சென்று பார்வையிட்ட பிரதமர் தேசிய பேரழிவு என்று அறிவிப்பு

ஸ்ரீநகர், செப். 9
காஷ்மீரில் வரலாறு காணாத மழை வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்பு, தேசிய அளவிலான பேரழிவாகும். இதற்காக ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நிதி உதவியுடன் கூடுதலாக ரூ.1,000 கோடி உடனடி நிதி உதவியை மத்திய அரசு வழங்கும் என்று பிரதமர் நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

காஷ்மீரில் கடந்த 5 தினங்களாக பெய்து வரும் மழையால் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. வெள்ளத்தால் ஏற்பட்ட சேதத்தைப் பார்வையிட பிரதமர் மோடி நேற்று காஷ்மீர் சென்றார். விமானம் மூலம் வெள்ளப் பாதிப்புகளைப் பார்வையிட்ட அவர், முதல்வர் உமர் அப்துல்லா உட்பட உயர் அதிகாரிகளுடன் ஸ்ரீநகரில் முக்கிய ஆலோசனை நடத்தினார். கூட்டத்துக்குப் பின் பிரதமர் மோடி அளித்த பேட்டியில், ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் வெள்ளத்தால் கடுமையான பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

இந்த இயற்கைப் பேரிடரில் இருந்து மக்களை மீட்டுக் காப்பாற்றுவதற்கு மாநில அரசுக்கு மத்திய அரசு முழு உதவி அளிக்கும்.

மத்திய, மாநில அரசுகள் ஒன்றிணைந்து பாதிக்கப்பட்டுள்ள மக்களை மீட்கப் பாடுபடும். இயற்கைப் பேரிடரை சமாளிப்பதற்கு மாநில பேரிடர் நிதி ரூ.1,100 கோடியை மாநில அரசு பயன்படுத்திக் கொள்ள ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதில், 90 சதவீத நிதி மத்திய அரசுடையது. அதைத்தவிர, சிறப்பு நிவாரண நிதியாக ரூ.1,000 கோடியை வழங்க உத்தரவிட்டுள்ளேன். சேத விவரங்களை முறையாகக் கணக்கெடுத்த பின், மேலதிக உதவிகள் தேவைப்பட்டால் அதையும் நிறைவேற்ற மத்திய அரசு தயாராக உள்ளது. இது தேசிய அளவிலான பேரழிவாகும்.




இந்தப் பேரழிவில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் அவர்களுக்கு தலா 2 லட்சமும், காயமடைந்தவர்களுக்குத் தலா ரூ.50 ஆயிரமும் பிரதமர்நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும். வீடுகளை இழந்து தவிப்பவர் களுக்காக மத்திய அரசு சார்பில் உடனடியாக 5 ஆயிரம் முகாம்கள் அமைக்கப்படும். அவை நாட்டின் பல்வேறு மாநிலங்களில் இருந்தும் இங்கு வந்து முகாம்களில் தங்கியிருக்கும் மக்கள் குளிரை சமாளிக்க ஒரு லட்சம் போர்வைகள் வாங்க ரூ.5 கோடியை பிரதமர் நிவாரண நிதியிலிருந்து ஒதுக்குகிறேன். விமானப் படை விமானங்கள் மூலம் தேவையான மருந்து, மாத்திரைகள் கொண்டு வந்து தரப்படும். தகவல் தொடர்பு சேவை கூடிய விரைவில் சீரமைத்து தரப்படும். உடைந்த பாலங்களைச் சீரமைக்கும் பணியில் இராணுவப் பொறியியலாளர்கள் உடனடியாக ஈடுபடுத்தப்படுவார்கள். மின் தேவையைப் பூர்த்தி செய்ய 2000 சோலர் விளக்குகள் வழங்கப்படும்" எனத் தெரிவித்தார்.

### பாகிஸ்தானுக்கு உதவத் தயார்

பாகிஸ்தானிலும் கனமழை பெய்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தநிலையில், இது குறித்து பிரதமர் அலுவலகச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதி மக்களுக்கு தேவையான அனைத்து மீட்பு மற்றும் நிவாரண பணிகளைச் செய்து தர பிரதமர் தயாராக இருக்கிறார். இது தொடர்பாக, பாகிஸ்தான் அரசு கேட்டுக் கொண்டால் மனிதாபிமான அடிப்படையில் உதவிகள் செய்ய இந்திய அரசு தயாராக உள்ளது என்று கூறப்பட்டுள்ளது. இதுதொடர்பாக மோடி, பாகிஸ்தான் பிரதமர் நவாஸ்ஷெரீப்புக்கு கடிதம் ஒன்றையும் எழுதியுள்ளார். (வ)

# சி.பி.ஐ.இயக்குநர் சின்ஹாவுக்கு உச்ச நீதிமன்றம் நோட்டீஸ்



டில்லி, செப்.9
2ஜி அலைக்கற்றை வழக்கில் குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்ய விடாமல் தடுப்பதாகக் கூறப்பட்ட குற்றச்சாட்டு குறித்து பதில் அளிக்குமாறு மத்திய புலனாய்வுத்துறை இயக்குநர் ரஞ்சித் சின்ஹாவுக்கு உச்ச நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டுள்ளது.

மூத்த சட்டத்தரணி பிரசாந்த் பூஷண் கூறிய குற்றச்சாட்டில், 2ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டு வழக்கில் தொடர்புடையவர்கள் ரஞ்சித் சின்ஹாவை சந்திப்பதாகவும், குற்றப் பத்திரிகையை தாக்கல் செய்ய விடாமல் ரஞ்சித் சின்ஹா தடுப்பதாகவும் கூறியிருந்தார்.

இந்த குற்றச்சாட்டு குறித்து ஒரு வார காலத்துக்குள் பதில் அளிக்குமாறு ரஞ்சித் சின்ஹாவுக்கு உத்தரவிட்டுள்ள உச்ச நீதிமன்றம், வழக்கு விசாரணையை ஒரு வார காலத்துக்கு ஒத்திவைத்துள்ளது. (வ)

# திருப்பதி ஆலயத்துக்கு தீவிரவாதிகள் அச்சுறுத்தல்



திருப்பதி, செப்.9
திருப்பதி ஏழுமலையான் ஆலயத்துக்குத் தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் காணப்படுவதாக உளவுத்துறையினர் எச்சரித்ததை அடுத்து, அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக ஆலயத்தில் பல இடங்களில் கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளதுடன் தீவிர கண்காணிப்பில் பாதுகாப்பு அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பக்தர்கள் என்ற போர்வையில் தீவிரவாதிகள் ஊடுருவக் கூடும் என்று உளவுத்துறை எச்சரிக்கை வெளியிட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்த நிலையில் ஆப்கானிஸ்தானிலும், பாகிஸ்தானிலும் செயற்பட்டு வரும் தீவிரவாத இயக்கமான அல் கொய்தாவின் கிளை, இந்தியாவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், அது தனது புனிதப்போரை ஆரம்பிக்கும் என்றும் சமூக வலைத்தளத்தில் அந்த இயக்கத்தின் தலைவர் அய்மான் அல் ஜவாகிரி கூறியுள்ளமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்த மிரட்டலைத் தொடர்ந்து திருப்பதி கோவிலின் பாதுகாப்பு நடவடிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் மேலதிகமாகப் பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளுக்காக நியமிக்கபட்டுள்ளனர். (வ)



ஓணம் பண்டிகையை முன்னிட்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கேரள, தமிழக மக்கள் அத்தப்பூ கோலமிட்டு பண்டிகையை மகிழ்ச்சியோடு கொண்டாடி வருகின்றனர். நாகர்கோவில் ஸ்ரீ ஐயப்பா மகளிர் கல்லூரியில் நடைபெற்ற ஓணம் பண்டிகை விழாவில் கல்லூரி மாணவிகள் உறி அடித்து கொண்டாடியபோது.. (வ)

# டில்லியில் ஆட்சி அமைப்பது குறித்து பா.ஜ.க. இன்று முடிவு

டில்லியில் ஆட்சி அமைப்பது குறித்து பா.ஜ.க. இன்று முடிவு செய்யவுள்ளது.

டில்லியில் 15 ஆண்டுகளுக்குப் பிறகு ஆட்சி அமைக்கும் வாய்ப்பு பாரதிய ஜனதாவுக்கு ஏற்பட்டுள்ளதால், அதற்கான முனைப்பில் அந்தக் கட்சி ஈடுபட்டுள்ளது. இதுதொடர்பாக இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறும் பாரதிய ஜனதாவின் மத்திய தேர்தல் குழு கூட்டத்தில்முடிவுஎடுக்கப்படும்என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

டில்லியில் நிலவும் அரசியல் சூழ்நிலை, ஆட்சி அமைப்பது குறித்து மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கை, டில்லி பாரதிய ஜனதா தலைவர் சதீஷ்உபாத்யாய்சந்தித்துஆலோசனை நடத்தியுள்ளார். (வ)

# முக்கிய நகரங்களில் தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் திட்டம்

## பாதுகாப்பை பலப்படுத்த மத்திய, மாநில அரசுகளுக்கு அறிவுறுத்தல்

பண்டிகை காலங்களின்போது டில்லி, மும்பை, சென்னை உள்ளிட்ட பெரிய நகரங்களில் குண்டுவெடிப்புக்களை நிகழ்த்த தீவிரவாதிகள் திட்டம் தீட்டி இருப்பது அம்பலமாகியுள்ளது.

ஹைதராபாத், புனே, உள்ளிட்ட நகரங்களில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவங்கள் மற்றும் டில்லி மகூதி குண்டுவெடிப்பு சம்பவம் தொடர்பாகத் தேடப்பட்டு வந்த இந்திய முகாஜின் தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த ஹஜாக் சேக்கை டில்லி பொலிஸார் சனிக்கிழமை உத்தரப்பிரதேசத்தில் கைது செய்தனர்.


இரகசிய இடத்தில் நடத்தப்பட்ட விசாரணையில் பல்வேறு திடுக்கிடும் தகவல்களை அவன் வெளியிட்டதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தியாவில் இருந்து தப்பித்து நேபாளம் செல்லும் வழியில் அவரை மடக்கி பிடித்ததாக பொலிஸார் கூறினர். பாகிஸ்தானில் இருந்து செயற்படும் தீவிரவாததலைவர்கள்யாஹின் பட்கல், மோஹின் சவுத்ரி ஆகியோர் கூறியபடி லக்னோ, மொராதாபாத், சகரான்பூர் வழியாக நேபாளத்துக்குத் தப்பிக்க முயற்சித்ததாகவும் ஹஜாக் சேக் விசாரணையில் தெரிவித்துள்ளார்.

குண்டுவெடிப்பில் நிபுணத்துவம் வாய்ந்த தன்னைத் தீவிரவாத தலைவர்கள் மூளைச் சலவை செய்ததாகப் பொலிஸாரிடம் கூறிய அவன் ஜேர்மன் பேக்கரியில் குண்டு வைத்தது எப்படி என்றும் தெரிவித்துள்ளான்.

தீவிரவாத தலைவர்களுக்கு பணம் அளித்து வந்ததையும் ஹஜாக் சேக் ஒப்புக் கொண்டதாக பொலிஸார் கூறினர்.

தீபாவளி மற்றும் நவராத்திரி பண்டிகைக் காலங்களில் டில்லி, மும்பை, சென்னை, கொல்கத்தா உள்ளிட்ட பெரும் நகரங்களிலும் மக்கள் அதிகம் கூடும் இடங்களில்குண்டுவெடிப்புகளை நிகழ்த்த திட்டமிட்டு இருந்ததாகவும் இதற்குத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக நேபாளம் செல்ல முயற்சித்ததாகவும் தீவிரவாதி தெரிவித்ததாகப் பொலிஸார் கூறினர். அதையடுத்து தீவிரவாதிகளால் குறிவைக்கப்பட்டுள்ள டில்லி, மும்பை, சென்னை கொல்கத்தா நகரங்களில் பாதுகாப்பை பலப்படுத்துமாறு மத்திய மற்றும் மாநில அரசுகளை உஷார்படுத்தி இருப்பதாக அவர்கள் தெரிவித்தனர். (வ)



இலங்கை வந்துள்ள ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே நேற்றுமுன்தினம் பிற்பகல் நாடாளுமன்றக் கட்டடத்துக்குச் சென்று பார்வையிட்டார். அங்கு அவரை சபாநாயகர் சமல் ராஜபக்ஷ வரவேற்றார். பின்னர் அங்கு நடைபெற்ற விசேட நிகழ்வொன்றிலும் ஜப்பான் பிரதமர் உரையாற்றியதுடன், ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் கலந்துரையாடினார். அத்துடன் நாடாளுமன்ற விசேட அதிதிகள் கையேட்டிலும் அவர் கையெழுத்திட்டார். (ற)

# மக்கா யாத்திரிகர்கள் விசேட கண்காணிப்பில்

## அமைச்சர் பௌசி தெரிவிப்பு

கொழும்பு, செப்.9

இந்த முறை ஹஜ் யாத்திரைக்காக மக்காவுக்குச் சென்ற இலங்கையின் முஸ்லிம் யாத்திரிகர்கள் விசேட மென்பொருளைப் பயன்படுத்திக் கண்காணிக்கப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தகவலை அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் இருந்து ஜெட்டாவுக்கு முதற்கட்டமாக 48 முஸ்லிம் யாத்திரிகர்கள் நேற்று முன்தினம் புறப்பட்டுள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"ஏற்கனவே 3 ஆயிரத்து 200 இலங்கை யாத்திரிகர்களுக்கு ஹஜ் கோட்டா அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும் மக்காவில் இடம்பெறுகின்ற அபிவிருத்திகள் காரணமாக இந்த முறை அது 20 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் இலங்கை யாத்திரிகர்களின் உணவு உடை மற்றும் பாதுகாப்பு விடயங்களை கருத்திற்கொண்டு அவர்கள் விசேட மென்பொருளை பயன்படுத்தி கண்காணிக்கப்படவுள்ளனர்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஐக்கியம் எதுவும் இல்லை

## நிமல் சிறிபால டி சில்வா கூறுகின்றார்



கொழும்பு, செப்.9

ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாட்டின் மூலம் அந்தக் கட்சியில் ஐக்கியம் ஏற்பட்டுள்ளது என்று கூறப்பட்டாலும் அங்கு எவ்வித ஐக்கியமும் இல்லை. மாநாட்டில் பவுடர் பூசிய சில குழந்தைகள் அமர்ந்திருந் தன என்று தெரிவித்துள்ளார் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பரப்புரையில் யானை புறக்கணிக்கப்பட்டுள்ளது. அந்தக் கட்சியின் தேர்தல் பரப்புரை படு தோல்வியடைந்துள்ளது. அதில் ஒற்றுமையாக செயற்படுபவர்கள்எவருமில்லை. எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் சஜித் பிரேமதாஸவையும் அழைத்து வந்து ஒரே தேர்தல் பரப்புரைக் கூட்டங்களை நடத்த போவதாக ஹரின் பெர்னாண்டோ கூறியிருந்தார். அப்படியான ஒன்று எப்போதும் நடக்க போவதில்லை. ஹரின் பெர்னாண்டோ தனியாக தனது தேர்தல் பரப்புரைகளை முன்னெடுத்து வருகிறார்."- என்று தெரிவித்துள்ளார். (ற)

CMYK

## இறக்குவானை ஆர்ப்பாட்டம்: 54 பேர் மீது வழக்குத் தாக்கல்



கொழும்பு, செப்.9

இறக்குவானை நகரில் அண்மையில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டமொன்றில் கலந்து கொண்ட 54 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இறக்குவானை டெல்வின் பகுதியைச் சேர்ந்த 15 வயதான சிறுமி ஒருவர் கடந்த ஜூலை மாதம் 20 ஆம் திகதி பாலியல் ரீதியாக துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டிருந்தார். அந்தச் சம்பவத்தைக் கண்டித்து கடந்த ஜூலை 21 ஆம் திகதி இறக்குவானை நகரில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டிருந்தது.

அந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்த 54 பேரையே மூன்று கட்டங்களாக நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டத்தின்போது டயர்கள் எரிக்கப்பட்டமை உள்ளிட்ட விடயங்களுக்காக இவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. இவர்களுக்கு எதிரான வழக்கு விசாரணை இறக்குவானை சுற்றுலா நீதிமன்றத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. (ற)

# பணத்தை அள்ளி வழங்கி வாக்கு திரட்டுகிறது அரசு

## குற்றஞ்சாட்டுகின்றது ஜே.வி.பி.



கொழும்பு, செப்.9

பணத்தை அள்ளி வழங்கி வாக்குகளைத் திரட்டும் முயற்சிகளில் அரசு ஈடுபட்டுள்ளது என்று குற்றஞ்சாட்டியுள்ளது ஜே.வி.பி.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள அந்தக் கட்சியின் பரப்புரைச் செயலர் விஜித ஹேரத், "மொனரால மாவட்டத்தில் தலா ஒவ்வொரு குடும்பத்துக்கும் அரசு 2 ஆயிரத்து 500 ரூபா வீதம் பணம் வழங்கி வருகின்றது"- என்று குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"வறட்சி நிவாரணம் என்னும் பெயரில் இவ்வாறு பொதுமக்களுக்குப் பணம் வழங்கப்பட்டு வருகின்றது. பொருளாதார அபிவிருத்தி அமைச்சு கடந்த 5ஆம் திகதி கடிதம் மூலம், பிரதேச சபைக்கு அதற்கான உத்தரவை வழங்கியுள்ளது. ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா 2 ஆயிரத்து 500 ரூபா வழங்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் இந்த உத்தரவை வழங்கியுள்ளார்.

அதேவேளை, பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மாவட்ட செயலகத்துக்கு 200 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது."- என்று தெரிவித்துள்ளார். (ற)

# ஒரு காலை இழந்தார் அஜித் மான்னப்பெரும



கொழும்பு, செப்.9

நேற்றுமுன்தினம் நடந்த வாகன விபத்தில்காயமடைந்த ஐக்கியதேசியக் கட்சியின் கம்பாஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெருமவின் வலது கால் சத்திர சிகிச்சை மூலம் அகற்றப்பட்டுள்ளது. தெற்கு அதிவேக வீதியில் மான்னப்பெரும பயணித்த வாகனம் விபத்துக்குள்ளானது.

விபத்தால் நாடாளுமன்ற உறுப்பினரின் வலது காலில் பெரும் காயங்கள் ஏற்பட்டிருந்தன என்று தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார். அதன் காரணமாக அவருக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார். அஜித் மான்னப்பெரும தற்போது தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார். (ற)

# அல்-குவைதாவின் மையமாக மாற்றப்படக்கூடும் இலங்கை

## தடுப்பு நடவடிக்கைகளை அரசு ஆரம்பிக்க வேண்டும் வலியுறுத்துகின்றது ஜாதிக ஹெல உறுமய

கொழும்பு, செப்.9

சர்வதேச ரீதியில் அல்-குவைதா அமைப்பின் மையமாக இலங்கை மாற இடமுள்ளது. அதனால் தெற்காசியா, மேற்குலக நாடுகள் மற்றும் ஐரோப்பிய நாடுகளுடன் ராஜதந்திர அரசியல் மற்றும் இராணுவ புலனாய்வு சார்ந்த தெளிவான இணக்கப்பாடுகளை அரசு ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் - இவ்வாறு வலியுறுத்தியுள்ளது ஜாதிக ஹெல உறுமய.

அல்-குவைதா அமைப்பின் தலைவர் ஜய்மன் அல் ஜவாஹிரியால் அண்மையில் வெளியிடப்பட்ட காணொலியின் மூலம் பௌத்த நாடுகளுக்கு ஏற்பட்டுவரும் இஸ்லாம் அடிப்படைவாதத்தின் தாக்கங்கள் குறித்து தெரியவந்துள்ளது என்றும் ஜாதிக ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளர் நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"நிலைமை பாரதூரமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் இலங்கை அரசு அந்த விடயம் தொடர்பில் அமைதியாக இருந்து வருகிறது. இஸ்லாமிய அடிப்படைவாதத்தின் அழுத்தங்கள் காரணமாக நுழைவிசைவு நடைமுறைகளிலும் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்.

பாகிஸ்தான், இந்தியா, ஆப்கன் ஆகிய நாடுகள் ஊடாக இலங்கைக்கு வருபவர்கள் குறித்தும் பொருள்கள் இறக்குமதி தொடர்பாகவும் கடைபிடிக்கப்படும் கொள்கைகளில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும்."- என்று தெரிவித்துள்ளார். (ற)

# இலங்கையைச் சீரழிக்க பேஸ்புக்கை ஆயுதமாக்கவுள்ளன மேற்கு நாடுகள்

## இப்படி எச்சரிக்கின்றார் அமைச்சர் விமல் வீரவன்ஸ



கொழும்பு, செப்.9

இலங்கையைச் சீரழிப்பதற்கு மேற்கு நாடுகள் பேஸ்புக் எனும் சமூக வலைத்தளத்தைப் பயன்படுத்தும் ஆபத்து எதிர்நோக்கப்படுகின்றது என்று தெரிவித்துள்ளார் அமைச்சர் விமல் வீரவன்ஸ. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க 50 சதவீத வாக்குகளைப் பெறுவதைக் கூட மேற்கு நாடுகள் விரும்பவில்லை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஊவா மாகாண சபைத் தேர்தலை முன்னிட்டு கிராந்துருகோட்டையில் நடைபெற்ற பரப்புரைக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"ரணில் வாக்குகளைப் பெறுவதை அவை விரும்பாவிட்டாலும், ரணில் விக்கிரமசிங்க, அநுரகுமார திஸாநாயக்க அல்லது மாதுலுவாவே சோபித தேரர் ஆகியோரை போட்டியிடவைத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கிடைக்கக் கூடிய சிங்கள வாக்குகளை பெறமுடியாமல் செய்வதே அந்த நாடுகளின் நோக்கமாகும்.

இவ்வாறு சிங்கள வாக்குகளை சிதறடிப்பதன் மூலம் எவரும் 50வீத வாக்குகளை பெறமுடியாமல் செய்வதே மேற்கத்தேய நாடுகளின் திட்டமாகும். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பெரும்பான்மை பலத்தை பெறாது போகும் சந்தர்ப்பத்தில் முகநூலை பயன்படுத்தி நாட்டை சீரழிப்பதே மேற்கத்தேய நாடுகளின் நோக்கம்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## இப்படியெல்லாமா யோசிப்பாங்க!



## புதுவகை சிவகார்த்திகேயன்



சிவகார்த்திகேயன் நகைச் சுவை உணர்வாளர் என்பதும், நகைச் சுவையாக பேசக்கூடிய வர் என்பதும் அனைவரும் அறிந்ததுதான்.

தன்னைப் பற்றி வந்த மோச மான வதந்தியைப் பற்றி 'சீரியஸாக' எடுத்துக்கொள்ளா மல் தன் பாணியிலேயே அதை எடுத்துக்கொண்டு அதே நேரம் தன்னைப் பற்றிய அந்த வதந் திக்கும் முற்றுப்புள்ளி வைத்தி ருக்கிறார்.

சிவகார்த்திகேயனுக்கு படப்பிடிப்புத் தளத்தில் அடிபட்டுவிட்டதாக திரைத்துறையில் வதந்தி பரவியது. அதை உண்மை என்று நம்பிய சிலர் அந்தச் செய்தியை சமூக வலைத்தளங்கள் மூலமும் பரப்பத்தொடங்கினார். இதுபற்றி அறிய சிவகார்த்தி கேயனுக்கு சில ஊடகங்கள் தொடர்பு கொண்டபோது வழக்கம்போல் அவர் தொலை பேசியை எடுக்கவில்லை.

இந்தநிலையில் அவருக்கு நெருக்கமான ஒரு தயாரிப்பாளர் இந்த வதந்தி குறித்து சிவகார்த்திகேயனின் கவனத்துக்குக் கொண்டு சென்றார்.

தன்னைப் பற்றிய வதந்தி உண்மையல்ல என்று நேரடியாக குறிப்பிடாமல், அதே நேரம் அந்த வதந்தி தவறானது என்பதை மறைமுகமாக சொல்லும் விதத்தில் தன்னுடைய டுவிட்டர் பக்கத்தில் டுவீட் செய்துள்ளார் அவர்.

அதில், நான் பாடல் ஒன்றின் படப்பிடிப்புக்காக நோர்வேயில் இருக்கிறேன். அனிருத் இசைக்கு ஏற்றவகையில் ஆட முடிந்தளவு முயற்சித்துக் கொண்டிருக்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார் சிவகார்த்திகேயன்.




## பியர் ந(ரக)கரம்





அமெரிக்காவில் பியர் விளம்பரத்துக்காக ஓர் நகரம் அமைக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் உள்ள பிரபல பியர் தயாரிப்பு நிறுவனம் அன்ஹியூசர் புஷ் தனது நிறுவனத் தயாரிப்பு பியர்களை விளம் பரம் செய்ய நினைத்து, அதற்காக க்ரெஸ்டட் பட் நகரத்தைத் தெரிவு செய்தது.

அங்கு இந்த வார இறுதியில் பியர் விளம்பரக் காட்சி தயாரிக்க உள்ளனர். இந்த விளம்பரத்தை காட்சிப்படுத்துவதற்காக, இந்த நகர நிர்வாகத்துக்கு 5 லட்சம் அமெரிக்க டொலர்கள் கட்டணமாக வழங்கப்பட்டுள்ளன. நிர்வாகத்துக்கும், நிறுவனத்துக்கும் இடையிலான இந்த ஒப்பந்தம் ரகசியமாக நடந்துள்ளது.

விளம்பரத்துக்கு ஏற்றாற் போல ஆங்காங்கே 'செட்'களும் போடப்பட்டுள்ளன. தவிர, க்ரெஸ்டட் பட் எனும் நகரத்தின் பெயர் விளம்பரத்துக்காக 'வட் எவர் யு.எஸ்.ஏ' என்று மாற்றப்பட இருக்கிறது.

விளம்பரத்துக்காக வெளி நகரங்களில் இருந்து சுமார் ஆயிரம் இளைஞர்களை இந்த நகரத்துக்கு வரவழைத்துள்ளது நிறுவனம். இதன் மூலம் இந்த நகரத்தில் உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும், வருமானம் வளரும் என்று நிர்வாகம் சாக்குப்போக்குகள் சொன்னாலும், இந்த விளம்பர ஒப்பந்தம் கேவலமானது என்று நகர மக்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.



## தீபக்கிற்கு தண்ணியில் கண்டம்

சின்னத்திரையில் இளம் கதாநாயகனாக வலம் வருகிறவர் தீபக். திருமதி செல்வம், தென்றல் தொடர்களில் நடித்து வருகிறார். சின்னத்திரையில் இருந்து பெரிய திரைக்கு தீபக்கும் பயணம் செய்கிறார். தற்போது அவர், இவனுக்கு தண்ணியில கண்டம் என்ற படத்தில் கதாநாயகனாக நடித்து வருகிறார். எஸ்.எஸ்.சக்திவேல் இயக்கும் இந்தப் படம் நகைச்சுவைப் படம். தீபக்கின் நண்பர் வெங்கட்ராஜ் தயாரிக்கிறார். 7 பேர் இசை அமைக்கிறார்கள்.

'நண்பர் வெங்கட்ராஜால் கிடைத்த வாய்ப்பு இது. முதல் படத்திலேயே நகைச்சுவை கதாநாயகனாகவே அறிமுக மாகிறேன். படப்பிடிப்புகள் இறுதிக் கட்டத்தை நெருங்கி உள்ள தால் தென்றல் படப்பிடிப்பில் கலந்துகொள்ள முடியவில்லை. இது நண்பர்கள் இணைந்து இந்த நண்பனுக்காக உருவாக் குற படம். நிச்சயம் வெற்றி பெறும் என்ற நம்பிக்கை உண்டு' என்கின்றார் தீபக்.

## ரிலாக்ஸா வாசியுங்க

**மனைவி:** இண்டைக்கு இரவு சாப்பிட என்ன வேணும்?
**கணவன்:** பருப்பும் சாதமும்.
**மனைவி:** நேற்றுத்தானே அதைச் சாப்பிட்டோம்.
**கணவன்:** அப்படியானால் கத்திரிக்காய் வறுவல்.
**மனைவி:** உங்க பையனுக்குப் பிடிக்காது.
**கணவன்:** முட்டைப் பொரியல்?
**மனைவி:** இன்றைக்கு வெள்ளிக்கிழமை.
**கணவன்:** பூரி?
**மனைவி:** இரவில எவரும் பூரி சாப்பிட மாட்டாங்க.
**கணவன்:** நான் 'ஹோட்டலில்' இருந்து பார்சல் வாங்கிட்டு வரவா?
**மனைவி:** ஹோட்டல் சாப்பாடு சாப்பிட்டா உடம்புக் கெட்டுப்போகும்.
**கணவன்:** மோர் குழம்பு?
**மனைவி:** வீட்டில மோர் இல்ல.



**கணவன்:** இட்லி சாம்பார்?
**மனைவி:** நீங்க முன்னாடியே சொல்லி இருக்கணும்.
**கணவன்:** அப்ப நூடில்ஸ் பண்ணு. கொஞ்ச நேரத்தில் செய்திடலாம்.
**மனைவி:** சாப்பிட்ட மாதிரியே இருக்காது. பசி எடுக்கும்.
**கணவன்:** வேற என்னதான் சமைக்கப் போறாய்?
**மனைவி:** நீங்க என்ன சொல்றீங்களோ அது.
**கணவன்:** ஆணியே புடுங்க வேணாம் போடி.









வரலாற்றுச் சிறப்பு மிக்க தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்தத் திருவிழாவின் தேர்த்திருவிழா நேற்று இடம்பெற்றது. விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து முருகப் பெருமான் தேருக்கு ஆரோகணித்து வீதியுலா வந்தார்.
நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வந்திருந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் தேர் திருவிழாவில் கலந்துகொண்டனர். தூக்குக்காவடிகள், காவடிகள், அங்கபிரதிஷ்டை, பாற்செம்பு உள்ளிட்ட நேர்த்திக் கடன்களையும் அடியவர்கள் நிறைவேற்றினர். (வ-109)

# வளமான எதிர்காலத்துக்கு நம்பிக்கையான முதலீடு சீமா

பொறியியல் படித்தால் பொருளாதாரம் மேம்படும் எனவும், மருத்துவம் படித்தால் மகத்துவம் என்றிருந்த காலம் போய் இன்று தொழில்சார் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கும் காலம் வந்தாகிவிட்டது.

வடபகுதியைப் பொறுத்தவரை முன்னர் இருந்த காலத்தைவிட தொழில் சார் கல்வி தொடர்பில் மக்களிடையே ஏற்பட்டுள்ள விழிப்புணர்ச்சி சற்று ஆறுதல் தருவதாக உள்ளது என்றாலும் அதன் வளர்ச்சிவீச்சு போதாமலேயே உள்ளது.


அருகில் இருக்கும் இந்தியாவை எடுத்துக்கொண்டால் பத்தாம் வகுப்பு படித்து முடித்தவுடனேயே பட்டப் படிப்பை மாணவரிடையே ஊக்குவிக்கும் போக்குக் காணப்படுவதாக புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

ஆனாலும் எம் மக்களிடையே உயர் கல்வி தொடர்பில் புரையோடிப்போய் உள்ள பழைமைவாத கருத்துக்கள் மாறவேண்டும்.

மூன்றாம் நிலைக் கல்வியில் முதல் தரக் கல்விகள் எவையென்பதை பெற்றோர், சான்றோர்கள், ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள் அறிந்து அவற்றின் சிறப்புக்களையும் முக்கியத்துவத்தையும் எமது இளைய தலை முறைகளுக்கு எடுத்துக்கூற வேண்டும்.

நான்கு மட்டங்களைக்கொண்ட சீமா கல்வியை மிகக்குறுகிய காலத்திலேயே (இரண்டு ஆண்டுகளில்) நிறைவுசெய்து கவர்ச்சிகரமான சம்பளத்தில் உயர்ந்த வாழ்க்கைத்தரத்தில் தனது குடும்பத்தையும் சுற்றத்தாரையும் வளப்படுத்திக் கொள்ள முடிவதோடு வெளிநாட்டு வாழ்க்கையை விரும்புபவர்கள் நிரந்தரக் குடியுரிமையையும் பெற்றுக்கொள்ளமுடியும் என்பது சீமாவின் சிறப்பன்றி வேறேது.

இலங்கையின் முதல்தரவரிசையில் முதல்தரத்தில் சீமா கல்வியை வழங்கி வரும் விஸ்டம் அக்கடமி வடபகுதிக்கும் தனது உயர்கல்விச் சேவையை விஸ்தரித்திருப்பது எமது மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமே. உன்னதத்தை அடையவிரும்பும் மாணவர்களுக்கு உறுதுணை புரிவதற்காக கொழும்பை தலைமை அலுவலகமாகவும் யாழ்ப்பாணம், மாத்தறை ஆகிய பிரதேசங்களில் கிளைகளையும் கொண்ட விஸ்டம் கல்வி நிறுவனம் ஒரு வருடத்தில் 5,000 இற்கும் மேற்பட்ட கல்வி அனுமதிகளை வழங்குவதுடன் சீமா கல்வியை வழங்கி வரும் நிறுவனங்களில் தொடர்ச்சியாக மூன்று வருடங்கள் முதலாமிடத்தைப் பெற்றிருப்பது இந்தக் கல்வி நிறுவனத்தின் வலிமையை உலகுக்கு பறைசாற்றுகிறது. உலகிலேயே மிகக்குறைந்த வயதில் சீமா கல்வியை நிறைவுசெய்து கொண்டவரை தமது மாணவனாக உரிமை கோருவதில் விஸ்டம் தனது கல்விச் சேவையில் வானளவில் உயர்ந்து நிற்கிறது.




யாழ்ப்பாணத்தில் நாவலர் வீதி இல. 154 இல் அமைந்துள்ள விஸ்டம் கல்வி நிறுவனம் மிகத்தரமான விரிவுரையாளர்களைக் கொண்ட கட்டமைப்பாக இருப்பதுடன் இங்கிலாந்தின் சீமா தலைமையகத்துடன் நேரடியாக இணைக்கப்பட்ட சர்வதேச தரத்திலான கணினிப்பரீட்சை பிரிவையும் கொண்டிருப்பது கூடுதல் தகுதி என்றே கூறவேண்டும்.

சிறப்பு விரிவுரைகள், பரீட்சை நிலையம், நூலகம், நவீன விரிவு ரைகளை நிகழ்த்தக்கூடிய தொழில்நுட்பம், சர்வதேச தரத்திலான விரிவுரை அரங்குகள் என தனது சேவையால் உயர் கல்வித்துறையில் தன்னை யோர் சாம்ராஜ்ஜமாக நிலைநிறுத்தியுள்ளது.

முன்னேற வேண்டும் என்ற வேக வேட்கையில் இருக்கும் ஒவ்வொருவருக்கும் விஸ்டம் ஒரு வடிகாலாக அமைந்துள்ளதென்றே கூறவேண்டும்.

விஸ்டம் கல்வி ஆலோசனை பிரிவின் மூலம் மாணவர்கள் சிறப்பாக வழி நடத்தப்படுவதுடன் அவர்களின் தன்னம்பிக்கையும் வளர்க்கப்படுகின்றது.

இதன்மூலம் அவர்கள் எதிர்காலத்தில் ஒரு சொந்தமான தொழில் முயற்சியை தொடங்கி வெற்றி கரமாக செயற்படுத்தக்கூடிய சிறந்த முயற்சியாளர்களாக உருவாகு வார்கள் என்பதில் எந்த சந்தேகமு மில்லை. இஸ்ரேல் போன்ற நாடுகளில் சுயதொழில் பற்றிய எண்ணம் சிறுவயதில் இருந்தே மனதில் பதிந்து வளரும்படி கல்விப் பாடத்திட்டங்கள் வடிவமைக்கப்படுகின்றன.

# விஜய லங்கா எக்ஸ்போட் யாழ்ப்பாணத்தில் கிளை

விஜய லங்கா எக்ஸ்போட் தனது யாழ் மாவட்டக் கிளையை கடந்த 6ஆம் திகதி பருத்தித்துறை வீதி, புத்தூர் (சோமாஸ் கந்தக் கல்லூரிக்கு முன்பாக) பேராசிரியர் வ. சிவானந்தமூர்த்தி விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

இதில் முக்கிய நோக்கம், யாழ் மாவட்டத்தில் விளையும் விவசாயப் பொருள்கள், முருங்கக்காய், கத்தரிக்காய், வாழைப்பொத்தி, கருணைக் கிழங்கு, இராசவள்ளிக்கிழங்கு, எலுமிச்சம்பழம், போன்றவற்றை ஐரோப்பா, அமெரிக்கா, கனடாவுக்கு ஏற்றுமதி செய்வது என்று தெரிவிக்கப்பட்டது. (த)

# யுனிலீவர் ஸ்ரீலங்கா நான்காம் இடத்தில்

2014 ஆம் ஆண்டுக்கான லங்கா மந்த்லி டிஜெஸ்ட் சஞ்சிகையால் வெளியிடப்பட்டுள்ள இலங்கையிலுள்ள மிகவும் நன் மதிப்பு டைய நிறுவனங்களின் பட்டிய லில் 4 ஆவது ஸ்தானத்தில் இடம்பிடித்துள்ள யுனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனம் தொடர்ந்து எட்டாவது ஆண்டிலும் முதல்பத்து இடங்களுக்குள் இடம்பிடித்து சாதனை படைத்துள்ளது.

இந்தக் கருத்துக்கணிப்பில் உச்ச ஸ்தானத்தைப் பெற்றுக் கொண்ட பல்தேசிய நிறுவனமாகத் திக ழும் யுனிலீவர், பெரிய சர்வதேச நிறுவனம் மற்றும் உள்நாட்டில் ஆழமாக வேரூன்றியுள்ள நிறு வனம் என்ற தனது பலத்தை மீளவும் உறுதிப்படுத்தியுள்ளது.

பல்தேசிய நிறுவனங்கள் பிரி வின் வெற்றியாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள யுனிலீவர், மிகவும் நன்மதிப்புடைய முதல் 100 நிறுவனங்களின் பட்டியலில் உச்ச ஸ்தானத்தில் திகழும் விரைவாக நகரும் நுகர்வோர் உற்பத்திகள் நிறுவனமாகவும் இடம்பிடித்துள்ளது.

நாட்டிலுள்ள முன்னணி வர்த்தக வெளியீடான லங்கா மந்த்லி டிஜெஸ்ட் சஞ்சிகையின் கருத்தாக்கத்தின் கீழ் இலங்கையிலுள்ள மிகவும் நன்மதிப்புடைய நிறுவனங்கள் என்ற கருத்துக்கணிப்பு, நீல்சன் ஆராய்ச்சி நிறுவனத்தால் நடத்தப்பட்டு, இலங்கையிலுள்ள மிகவும் நன்மதிப்புடைய நிறுவனங்களின் பட்டியலை வருடாந்தம் வெளியிட்டுவருகின்றது. (த)

# இந்திராபுரம், முகமாலை தெற்கு மக்கள் விரைவில் மீள்குடியமர்வு

பளை,செப்.9

பளைப் பிரதேச செயலக பிரிவில் இதுவரை மீளக்குடியமர அனுமதிக்கப்படாத இந்திராபுரம், முகமாலை தெற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் விரைவில் வெடிபொருள்கள் அகற்றப்பட்டு அந்தப் பகுதி மக்கள் மீளக்குடியமர்த்தப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 6 ஆம் திகதி பளை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற மீளக்குடியமர அனுமதிக்கப்படாத பகுதிகளைச் சேர்ந்த மக்களுடனான கலந்துரை யாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை வேம்பொடுகேணி கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மக்கள் கிளிநொச்சியில் வைத்து நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரிடம் தம்மை விரைவில் மீளக்குடியமர்த்துமாறு மனுக் கையளித்தனர்.

இதனையடுத்து . பிரதேச செயலர் திருமதி ப.ஜெயராணி தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் ஹலோட்ரஸ்ட் நிறுவனப் பிரதிநிதிகளும், பளைப் பிரதேச சபை உறுப்பினர்களான அன்ரன் அன்பழகன், க.இராசதுரை ஆகியோரும், மீளக்குடியமராத 100 இற்கும் மேற்பட்ட மக்களும் கலந்து கொண்டனர்.

வெடிபொருள்கள் அகற்றும் நிறுவனப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடிய பின்னர் இந்தப் பகுதி மக்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து குடியிருப்புகள் உள்ள பகுதிகளை முன்னுரிமைப்படுத்தி வெடிபொருள்கள் அகற்றி மக்களை விரைவில் மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் உறுதியளித்தார்.

இந்தப் பகுதிகளில் வெடிபொருள்கள் புதைக்கப்படவில்லை, விதைக்கப்பட்டுள்ளன. மிக மிக அவதானமாகச் செயற்பட்டு வெடி பொருள்கள் அகற்றப்பட்டு வருகின்றன. இந்தப் பணியின்போது பணியாளர்கள் தமது உயிரைத் தியாகம் செய்துள்ளனர். சிலர் பாதிப்படைந்துள்ளனர்.

இந்த நிலையில் மீளக்குடியமரும் மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாமல் தவிர்ப்பதற்காக அவை மிக அவதானமாக அகற்றப்பட்டு வருகின்றன.

பொது மக்களாகிய நீங்கள் இதுவரை காலமும் பொறுத்திருந்ததுபோல் ஆகக் கூடியது ஆறு மாதங்கள் பொறுத்திருக்குமாறும் நாடாளுமன்ற உறுப்பினர் அந்தப் பகுதி மக்களை கேட்டுக்கொண்டார். (த-9)

## மணல்குளம் ஆற்றுப்பகுதியில் சட்டவிரோத மணல் கடத்தல்

முல்லைத்தீவு, செப். 9

துணுக்காய், புத்துவெட்டுவான், மணல்குளம் ஆற்றுப் பகுதியில் தொடர்ந்தும் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுவதாகவும், அதனை உரிய அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வந்த போதும், அதனைத் தடுத்து நிறுத்த இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனவும் அந்தப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள புத்துவெட்டுவான், மணற்குளம் ஆற்றுப் பகுதியில் தொடர்ந்தும் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்றமையால் இங்குள்ள வளம் அழிக்கப்படுவதுடன் பாதைகளும் சேதமடைந்து காணப்படுகின்றன.

இந்த நிலையில் இவ்வாறு இடம்பெற்று வரும் சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுத்து நிறுத்துமாறு அந்தப் பகுதி மக்கள் உரிய அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியிருந்தனர்.

ஆனால் எந்தவிதமான நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை என்றும்- கிராம மக்களது தேவைக்கு குறைந்த அளவு மண் கூட ஏற்றமுடியாத நிலையில் இவ்வாறு சட்டவிரோதமாக மணல் அகழ்வதை ஏன் இந்த அதிகாரிகள் நிறுத்த மறுக்கின்றனர் என்றும் கேள்வி எழுப்பியுள்ளனர். (த-55)

## வீதியைப் புனரமைக்குக

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பாலைப்பாணி கிராமத்துக்கான 11.05 கிலோ மீற்றர் நீளமான பிரதான வீதியைப் புனரமைத்துத் தருமாறு இவ் வீதியை பயன்படுத்துவோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட வன்னி விளாங்குளம் சந்தியில் இருந்து 11.05 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள பாலைப்பாணி கிராமத்திலும் அதனை அடுத்துள்ள கொம்புவைத்தகுளம் கிராமத்திலும் 100இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்ற நிலையில் குறித்த வீதி புனரமைக்கப்படாது காணப்படுகின்றது.

அத்துடன் இரு மருங்கிலும் பற்றைக்காடுகள் வளர்ந்து காணப்படுகின்றன. இதனால் இந்த வீதியுடாக பயணிக்க முடியாத அச்சமான நிலைமை காணப்படுகின்றது.

எனவே குறித்த வீதியை புனரமைத்துத் தருமாறு இந்த வீதியைப் பயன்படுத்துகின்ற மேற்படி கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-55)



முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரியின் பிரதான நுழைவாயிலின் முன்னால் இரு வாரங்களாக உடைந்து கிடக்கும் வடிகாலின் மூடியை இதுவரை யாரும் சீர் செய்யவில்லை. ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் இதனூடாகவே பாடசாலைக்குச் செல்கின்றனர். (த-433)

## மக்களின் பாவனைக்கு உதவாத வீதிகள்

முல்லைத்தீவுமாவட்ட மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வன்னி விளாங்குளம் தொடக்கம் நட்டாங் கண்டல் வரை சுமார் 15 கி.மீற்றர் தூரம் கொண்ட பிரதான வீதி, மக்கள் பாவனைக்கு உதவாத நிலையில் காணப்படுகின்றது.

மேற்படி வன்னிவிளாங்குளம் நட்டாங்கண்டல்வீதியைதிருத்துவதற்கு எவரும் முன் வரவில்லை.குறித்த பிரதேசத்தில் மக்கள் மீள்குடியமர்ந்து 5 வருடங்களைக்கடந்தும்எவ்வித செயற்பாடுகளையும் காணாத இந்தக் கிராமத்தில் சுமார் 4 ஆயிரத்துக்கும் அதிக குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

வன்னி விளாங்குளம் தொடக்கம் நட்டாங்கண்டல் வரையான இந்த வீதிகள் வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்குச் சொந்தமானதாகும். கடந்த சில வருடங்களுக்கு முன்பு சில ஒப்பந்தகாரர்களினால் தார் ஊற்றப்பட்டு வன்னிவிளாங்குளம்தொடக்கம் அம்பாள்குளம் வரையும் சீர்படுத்தப்பட்டிருந்தது. 3 வருடங்கள் முடிவடையாத நிலையில் இந்த வீதியானது மக்கள் பாவனைக்கும் போக்குவரத்துக்கும் உதவாத நிலைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பொது அமைப்புக்கள் கவலை தெரிவித்தனர்.

தற்போது பருவ மழை காலம் ஆரம்பித்ததால் பேருந்து சேவைகள் எதுவும் மேற்கொள்ள இயலாது சேவை தடைப்படலாம் என துணுக்காய் தனியார் பேருந்துகளின் உரிமையாளர்கள் கவலையுடன் தெரிவித்தனர். (த-415)

## 3 ஆயிரத்து 504 இந்திய வீடுகள் கிளிநொச்சி மாவட்டத்தில் பூர்த்தி

அமைக்கப்படவுள்ள மொத்த வீடுகள் 8,350

கிளிநொச்சி, செப். 9

கிளிநொச்சி மாவட்டத்துக்குக் கிடைக்கப்பெற்ற 8ஆயிரத்து 350 இந்திய அரசின் நிதியுதவியுடனான வீட்டுத்திட்டங்களில் 3 ஆயிரத்து 504 வீடுகள் இதுவரை கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் சுமார் 41ஆயிரத்து 227 குடும்பங்கள் மீள்குடியேறியுள்ளன.

இதில் மீள்குடியேறியவர்களுக்குப் பல்வேறு திட்டங்களினூடாக நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டு வருகின்றது.

இதில் இந்திய அரசின் நிதியுதவியுடன் 8ஆயிரத்து 350 வீடுகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் கண்டாவளை பிரதேசத்தில் 540 வீடுகளும், கரைச்சி பிரதேசத்தில் 1914 வீடுகளும், பூநகரிப் பிரதேசத்தில் 768 வீடுகளும், பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் 283 வீடுகளும் என 3ஆயிரத்து 504 வீடுகள் இதுவரை அமைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் 2ஆயிரத்து 636 வீடுகளின் கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதேவேளை- 2ஆயிரத்து 210 வீடுகளுக்கான பயனாளிகள் தெரிவுகளும் இடம்பெற்றுள்ளன. (த-55)

## பிரமந்தனாறுக்குளம் திருத்தம்; 638 குடும்பங்களுக்கு நன்மை

கிளிநொச்சி, செப். 9

கிளிநொச்சி பிரமந்தனாறுக் குளம் புனரமைக்கப்பட்டுள்ளமையால் இந்தப் பகுதியைச் சேர்ந்த சுமார் 638 விவசாயக் குடும்பங்கள் நன்மையடைந்துள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள பிர மந்தனாறுக்குளம் கடந்த 2012 ஆம் ஆண்டு புனரமைப்புக்கென தெரிவு செய்யப்பட்டு அதன் புனரமைப்புப் பணிகள் 41 மில்லியன் ரூபா செலவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

கடந்த காலத்தில் குறித்த குளம் புனரமைக்கப்படாமலும் அதன் நீர் விநியோக வாய்க்கால்கள் சேதமடைந்தும் காணப்பட்டன.



இதனால் நீர் விநியோகம் மேற்கொள்வதில் ஏற்பட்ட சிரமங்கள் காரணமாக 50 ஏக்கர் வரையான பயிர்ச் செய்கை நிலங்கள் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டன. தற்போது இந்தக் குளம் புனரமைக்கப்பட்டமையால் 638 குடும்பங்கள் 602 ஏக்கர் நிலப் பரப்பில் நெல், உப உண வுச் செய்கை என்பவற்றை மேற்கொள்ளக் கூடிய வகையில் நன்மையடைந்துள்ளன. (த-55)

## போக்குவரத்து வசதிகள் இல்லை சுதந்திரபுர மக்கள் சிரமத்தில்

முல்லைத்தீவு, செப் .9

முல்லைத்தீவு சுதந்திரபுரம் கிராமத்துக்கான போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தப்படாமையால் இங்குள்ள மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சுதந்திரபுரம் கிராமம் பரந்தன் முல்லைத்தீவு ஏ-35 வீதியில் சுதந்திரபுரம் சந்தியிலிருந்து சுமார் 5 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது.

குறித்த கிராமத்தைச் சேர்ந்தோர் எந்த அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதென்றாலும் இந்தக் கிராமத்துக்கு வெளியே சென்றுதான் பெற வேண்டிய நிலை காணப்படுகின்றது.

ஆனால் கடந்த 2010ஆம் ஆண்டு மீள்குடியேற்றத்துக்குப் பின்னர் இன்று வரை இந்தக் கிராமத்துக்குப் போக்குவரத்து வசதிகள் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை. இதனால் தாங்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக இங்குள்ள மக்கள் தெரிவித்துள்ள அதே சமயம், இந்தக் கிராமத்திலிருந்து உயர் தரக் கல்விக்காக மாணவர்கள் வேறு பாடசாலைகள் செல்வதற்கு 7 கிலோ மீற்றர் தூரம் செல்ல வேண்டியுள்ளது எனவும் கூறினர்.

இந்தவிடயம் தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட தனியார் போக்குவரத்து சங்க நிர்வாகத்திடம் கேட்டபோது, கடந்த காலங்களில் இந்தவழித்தடத்தில்போக்குவரத்து சேவை ஒன்று நடைபெற்றது. மீள்குடியமர்வின் பின்னர் வீதி சீரின்மையால் போக்குவரத்துசேவைகள் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவித்துள்ளது. (த-55)

## மாம்பழங்கள் விலை உயர்வு

யாழ்ப்பாணம்,செப்.9

யாழ்.குடாநாட்டில் மாம்பழங்களின் விலைகள் சடுதியாக எகிறியுள்ளன.

குறிப்பாக யாழ். நகரை அண்டிய சந்தைகளில் அவற்றின் விலைகள் அதிகரித்துக் காணப்பட்டன.

நேற்றைய சந்தை நிலவரப்படி கறுத்தக் கொழும்பான் மாம்பழம் ஒன்று 180 ரூபாவாகவும், விலாட் மாம்பழம் ஒன்று 40 ரூபாவாகவும் விற்கப்பட்டன.

இதேவேளை, பலாப்பழத்துக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதோடு அதன் விலையும் அதிகரித்துள்ளது.

சனி, ஞாயிறு, திங்கள் (போயா) விடுமுறையைப் பயன்படுத்தித் தென்பகுதியில் இருந்து பெரும் எண்ணிக்கையான சுற்றுலாப் பயணிகள் யாழ்பாணம் வந்திருந்தனர். இந்தப் பயணிகள் யாழ்ப்பாணக் கறுத்தக் கொழும்பான் மாம்பழத்தை விலையையும் பார்க்காது வாங்கிச் சென்றதைக் காணமுடிந்தது. (த-17)

## வீதியில் மயங்கி முதியவர் சாவு

யாழ்ப்பாணம்.செப்.9

சொந்த தேவைக்காக வீதியில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த 72 வயது முதியவர் நெஞ்சுவலி ஏற்பட்டு மயங்கி விழுந்து அவ்விடத்திலேயே உயிரிழந்தார்

இந்தச் சம்பவம் நேற்றுக்காலை 8 மணியளவில் சங்கானை பெற்றோல் நிலையத்துக்கு முன்பாக இடம்பெற்றது.

சண்டிலிப்பாய் சீரணி அம்மன் கோவில் பகுதியைச் சேர்ந்தவரே உயிரிழந்தவர் ஆவார்.

சண்டிலிப்பாய் பகுதியில் இருந்து தனது சொந்தத் தேவைக்காகச் சைக்கிளில் சென்று கொண்டிருந்தவேளை பெற்றோல் நிலையத்துக்கு முன்பாக நெஞ்சு வலி ஏற்பட்டபோது அவ்விடத்திலேயே மயங்கி விழுந்துள்ளார்.

வீதியில் நின்றவர்கள் அவரை சங்கானை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று சேர்த்தவேளை சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்துவிட்டார் என மருத்துவர்கள் தெரிவித் தனர். சடலம் நீதிவான் உத்தரவுக்கு அமைவாக உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (த-14)

## விழிப்புலன் இழந்தோருக்கு குழாய் கிணறுகள்

யாழ். விழிப்புலனற்றோர் சங்கம் தமது அங்கத்தவர்களுக்கு வாழ்வாதாரத்தின் கீழ் குழாய்க்கிணறு அமைக்கும் திட்டத்தில் இரண்டாம் கட்டமாக மேலும் நான்கு குழாய்க் கிணறுகளை அமைக்கவுள்ளதாகச் சங்கத்தின் தலைவர் வி.கனகசபை தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:-

ஏற்கனவே எமது உறுப்பினர்களின் தேவை கருதி அவர்களின் வீடுகளில் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டன. வறுமைக்கோட்டின் கீழ் கிணறு வசதிகள் இன்றி வாழும் அங்கத்தவர்களுக்கே இந்தக் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு அவர்களிடம் வழங்கப்பட்டன.

மேலும் 4 குடும்பங்களுக்கு விரைவில் நான்கு குழாய்க் கிணறுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன - என்றார். (த-17)

# யாழ்ப்பாண வர்த்தகர் சங்கத்துக்கு 9 வருடத்துக்கு மேல் ஒரே நிர்வாகம்

## வர்த்தகர்களின் நலன்களில் அக்கறை இல்லையெனக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், செப்.9

யாழ்ப்பாண வர்த்தகர் சங்கம் வர்த்தகர்களின் நலன்களில் அக்கறை கொள்ளவில்லை. தொடர்சியாக 9 வருடங்களுக்கு மேலாக ஒரே நிர்வாகம் செயற்பட்டு வருவதுடன் முதலாளித்துவ நலன் சார்ந்த முடிவுகளே எடுக்கப்பட்டு வருவதாக வர்த்தகர்கள் குற்றஞ் சாட்டினர்.

யாழ்.மாவட்ட தொழில்திணைக்களத்தின் ஏற்பாட்டில் தொழில் சட்டங்கள் தொடர்பாகத் தொழிலாளர்களுடனான கலந்துரையாடல் நேற்று யாழ்.வர்த்தகர் சங்கத்தில் நடைபெற்றது.

இதன்போதே இந்தக் குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டது.

அங்கு அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். வர்த்தகர் சங்கத்தில் கடந்த 9 வருடங்களுக்குமேலாக ஒரே நிர்வாகத்தினரே தெரிவு செய்யப்பட்டு வருகின்றனர். இதில் முதலாளி வர்க்கத்தினர் உள்வாங்கப்பட்டுள்ளதால் தொழிலாளர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் உள்ளன. ஏனைய மாவட்டங்களில் வர்த்தகச் சங்கங்கள் பலமாக இயங்குவதால் தொழிலாளர்களை ஒன்றித்து பல முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

இங்கு தொழிலாளர்கள் உள்வாங்கப்படாத காரணத்தால் தொழிலாளர்களுக்கென ஒரு சங்கம் உருவாக்கப்படவேண்டும். சம்பளம், விடுமுறை தொடர்பில் குரல் கொடுக்கத் தொழிலாளர்கள் ஒன்றினைக்கப்படவேண்டும் என இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.

ஞாயிற்றுக்கிழமைகளிலும், போயா தினங்கள் மற்றும் பொது விடுமுறை நாள்களிலும் விடுமுறை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

தொழிலாளர்களுக்கு இத்தகைய பிரச்சினைகள் ஏற்படும்போது வர்த்தகர் சங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது. நிர்வாகத்தில் உள்ள தலைவர், செயலாளர், பொருளாளர் என தங்களுக்குள் நிர்வாகத் தெரிவுகளைச் செய்து கொண்டு தாமாகவே சில முடிவுகளை குறிப்பிட்ட சிலர் எடுக்கின்றனர். ஆனால் தொழிலாளர்களுக்காக வர்த்தகர் சங்கம் எதையும் செய்யவில்லை என்று இந்தக் கலந்துரை யாடலில் கூறப்பட்டது.

இது தொடர்பில் யாழ்ப்பாண வர்த்தகர் சங்கத் தலைவர் இ.ஜெயசேகரத்துடன் தொடர்பு கொண்ட கேட்டபோது,

வர்த்தகர் சங்கம் வர்த்தகர்களின் நலனுக்காகத் தான் உருவாக்கப்பட்டது. தொழிலாளர்கள் தமக்கென ஒரு தொழில் சங்கத்தை உருவாக்க வேண்டும். அதனைப் பலமுறை அவர்களுக்குத் தெரியப்படுத்தித் தொழிற்சங்கத்தை உருவாக்குமாறு கேட்டிருந்தோம். ஆனால் யாரும் முன்வரவில்லை. தங்களுக்கான பிரச்சினை என்ன என்று எங்களுடன் பேசினால் தானே அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். 9 வருடமாக ஒரே நிர்வாகம் இருக்கிறது என்றால் அது வர்த்தகர்கள் தெரிவு செய்கிறார்கள். தற்போது என்னால் இரண்டாவது தடவையாகத் தலைமைப் பொறுப்பு ஏற்கப்பட்டுள்ளது. யாப்பு முறைகளின் படி ஒரே நிர்வாகம் தொடர்ச்சியாக இருக்க முடியாது. அந்தந்த வருடங்களில் மாற்றப்பட்ட வண்ணம் தான் உள்ளனர். இந்த நிர்வாகத்தை வேறு நபர்கள் ஏற்கத் தயாராக இருந்தால் நாங்கள் நிர்வாகத்தை ஒப்படைக்கத் தயாராக இருக்கிறோம்.

தொழிலாளர்களால் தற்போது முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கை சட்ட ரீதியாக ஏற்றுக்கொள்ள முடியாது. ஞாயிற்றுக் கிழமைகளில் விடுமுறை வழங்க வேண்டும் என்பதற்குச் சட்டத்தில் இடமில்லாதபோது எங்களால் அதனை எவ்வாறு நிறைவேற்றிக்கொடுக்க முடியும். ஆனால் சட்ட ரீதியாக என்ன கிடைக்க வேண்டுமோ அதனை நாங்கள் செய்யத் தயாராக இருக்கிறோம். தொழிலாளர்கள் என்ன கோரிக்கையை முன்வைத்தார்கள், வர்த்தகர் சங்கம் என்ன செய்யவில்லை என அவர்களிடமே கேளுங்கள்-என்றார்.

(த-14)

# ஹையஸ் வானில் நடமாடும் மதுபானநிலையம்

## யாழ். நகரில் பொலிஸாரின் திடீர்ச் சோதனையில் சிக்கியது

யாழ்ப்பாணம், செப்.9

யாழ்ப்பாணம் பொலிசாரினால் யாழ்.நகரில் நேற்று முன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட திடீர்ச் சோதனை நடவடிக்கையின்போது 3 வெவ்வேறு மதுபான குற்றச் செயல்கள் ஒரே நாளில் கண்டுபிடிக்கப்பட்டன.

இதன்போது 5 பேரும், ஹையஸ் வாகனம் மற்றும் 6 மோட்டார் சைக்கிள்கள், 35 இற்கும் மேற்பட்ட மதுபானப் போத்தல்களும் பொலிசாரால் கைப்பற்றப்பட்டன.

பொதுஇடங்களில் மதுபானம் அருந்துதல் மற்றும் குற்றச் செயல்கள் இடம்பெறுவது தொடர்பில் பொலிசாருக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை அடுத்து யாழ்ப்பாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் றொகான் டயஸ் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் யாழ்.நகரில் திடீர்ச் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.



இதன்போது கஸ்தூரியார் வீதியில் ஹையஸ் வாகனத்தில் வைத்து அனுமதி பெறாமல் மதுபானம் விற்பனை செய்தமை கண்டுபிடிக்கப்பட்டது. வாகனத்துடன் 35 இற்கும் மேற்பட்ட மதுபாணப் போத்தல்களும் கைப்பறறப்பட்டன.

அத்துடன் யாழ்.நகர் பஸ் தரிப்பிடத்துக்கு அருகாமையில் பொது இடத்தில் வைத்து மதுபாணம் அருந்திய 5 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனைவிட ஈச்சமோட்டைச் சந்தியில் மோட்டார் சைக்கிள்களை நிறுத்தி விட்டு மதுபானம் அருந்திக் கொண்டிருந்தவர்கள் பொலிஸாரைக் கண்டவுடன் அங்கிருந்து தப்பிய நிலையில் அவர்களின் 6 மோட்டார் சைக்கிள்களைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளைப் பொலிசார் மேற்கொண்டுள்ளனர். (த-14)

# மரக்கறி விலைகள் குடாநாட்டில் வீழ்ச்சி

யாழ்.குடாநாட்டில் விவசாயிகள் மரக்கறிச் செய்கையில் அதிகமாக ஆர்வம் காட்டியதை அடுத்து அவற்றின் விலைகள் திடீரனவீழ்ச்சியடைந்துள்ளன. கடும் வறட்சி, வெப்பம் போன்றவற்றினால் மரக்கறிப் பயிர்கள் பாதிக்கப்பட்டன. இதன் காரணமாகக் கடந்த மாதத்தில் மரக்கறி வகைகளின் விலைகள் அதிகரித்துக் காணப்பட்டன.

தற்போது விவசாயிகள் மரக்கறிப் பயிர்களைக் கூடுதலாகப் பயிரிட்ட காரணத்தால் அவை தாராளமாகச் சந்தைக்கு வர ஆரம்பித்திருப்பதாக விவசாய திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது முக்கிய ஆலயங்களில் நடைபெற்றுவரும் மஹோற்சவங்கள் மற்றும் திருமண வைபவங்கள், சுபகாரியங்கள் காரணமாக மரக்கறி வகைகளின் பாவனை அதிகரித்துக் காணப்படுகின்றது. சாவகச்சேரி, திருநெல்வேலி, சுன்னாகம், மருதனார்மடம், சங்கானை போன்ற முக்கிய சந்தைகளுக்கு தாராளமாக மரக்கறி வகைகள் வந்து சேர்வதால் அவற்றின் விலை திடீரெனச் சரிந்துள்ளது.

திருநெல்வேலி சந்தையில் நேற்றைய மரக்கறி வகைகளின் விவரம் வருமாறு:

கத்தரிக்காய்-கிலோ 60 ரூபா, பாவற்காய்-கிலோ90 ரூபா, பயிற்றங்காய்-கிலோ 60 ரூபா, பூசணிக்காய்-கிலோ 40 ரூபா, வெண்டிக்காய் கிலோ-60 ரூபா, பீற்றூட்-கிலோ 30 ரூபா, கரட் கிலோ-70 ரூபா, கோவா -கிலோ 70 ரூபா, லீக்ஸ்- கிலோ 60 ரூபா, பச்சை மிளகாய்-கிலோ 60 ரூபா, வெங்காயம்-கிலோ 50 ரூபா, உருளைக்கிழங்கு-கிலோ 70 ரூபா, மரவள்ளி-கிலோ 40ரூபா, கீரை-ஒரு பிடி 10 ரூபா, தேசிக்காய்-ஒன்று 5 ரூபா. (த-17)

# ஈ.பி.டி.பியின் ஜெகனுக்கு எதிராக விந்தன் பொலிஸில் முறைப்பாடு

ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கே.வி.குகேந்திரனினால் (ஜெகன்), தனது நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் அவதூறான ஊடக அறிக்கைகள், அச்சு - இலத்திரனியல் ஊடகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளமை தொடர்பாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்வடக்குமாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம், யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

2007 ஆம் ஆண்டு கே.கே.எஸ். வீதியில் காணி ஒன்றை அதன் உரிமையாளர் விந்தன் கனகரட்ணத்திடம் 6 லட்சம் ரூபாவுக்கு அடைவு வைத்துள்ளார். ஒன்றரை வருடங்களில் அதை மீட்பதாகத் தெரிவித்தே அடைமானம் வைத்துள்ளார். ஒன்றரை வருடங்கள் கடந்தும் குறித்த காணி மீட்கப்படாத நிலை யில், வாடகை வீடு ஒன்றில் குடி யமர்வதற்கு ஒரு லட்சம் ரூபா முற்பணமாக வேண்டும் என்று குறித்த காணியின் உரிமையாளர் மேலும் பணம் வாங்கியுள்ளார்.

இதன் பின்னரும் குறித்த காணி உரிமையாளர் காணியை மீட்கவில்லை. காணியை விட்டு வெளியேறவுமில்லை.

இதனையடுத்து கடந்த 2010 ஆம் ஆண்டு யாழ்.மாவட்ட நீதிமன்றத்தில் சட்டத்தரணி ஊடாக விந்தன் கனகரட்ணம் வழக்குத் தொடர்ந்துள்ளார். எதிராளியும், எதிராளியின் சட்டத்தரணியும் வழக்கின் பல தவணைக ளுக்கு வராத காரணத்தால் கடந்த 5 ஆம் திகதி இடம்பெற்ற நீதிமன்ற அமர்வில், இருவருக் கும் அழைப்பாணை அனுப்ப நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இவ்வாறானதொரு நிலைமையில், வழக்குக்கும் காணிக்கும் தொடர்பில்லாத, எதிராளியின் மகள், கடந்த 2 ஆம் திகதி ஈ.பி.டி.பி. அலுவலகத்துக்குச் சென்று தாங்களுக்கு, நபரொருவர் பணம் தரவேண்டும் எனவும் அதை பெற்றுத் தர நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு மனு ஒன்றைக் கொடுத்துள்ளார்.

குறித்த கடிதத்தைப் பயன்படுத்தி, தனது நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் வகையில் ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் .கே.வி. குகேந்திரன் செயற்பட்டுள்ளதாக விந்தன் கனகரட்ணம் குற்றஞ்சாட்டியுள்ளார். இதற்காக அவர் பகிரங்க மன்னிப்புக் கோரவேண்டும் எனவும், இல்லாவிடில் மானநஷ்ட வழக்குத் தாக்கல் செய்யப்படும் எனவும் விந்தன் கனகரட்ணம் தெரிவித்துள்ளார். (த-5)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழரசுக் கட்சித் தலைவரின் அறிவிப்பும்- ஆதங்கமும்

தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள மாவை சேனாதிராசா உடனடியாக அல்லது அவசரமாக சில அறிவித்தல்களை வெளியிட்டுள்ளார். தமிழர் பிரச்சினையில் அக்கறையுள்ள அனைவருமே இந்த அறிவித்தலின் தாக்கம் அல்லது தாற்பரியம் பற்றி சிந்திக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

தமிழ் மக்களின் நியாயபூர்வமான சட்டரீதியான உரிமைகளை வென்றெடுத்து நிலைநாட்டும் நோக்கத்துடனேயே தமிழரசுக் கட்சி, அமரர் தந்தை செல்வா மற்றும் அவரைப் பின்பற்றி நின்ற தலைவர்களாலும் தோற்றுவிக்கப்பட்டது. சாத்வீகப் போராட்ட முறையில் அபரிமிதமான நம்பிக்கை கொண்டிருந்த அந்தத் தலைவர்களால் முன்னெடுக்கப்பட்ட பல்வேறுவிதமான போராட்டங்களும் அவைகளின் காரணமாக நடைபெற்ற பேச்சு வார்த்தைகளும், அவைகளின் மூலம் உருவான உடன்பாடுகளும் அவை ஒரு தலைப்பட்சமாக கிழித்தெறியப்பட்ட வரலாறுகளும் பழைய கதைகள்.

இடைநடுவில் போராட்ட முறைகள் திசைமாறிப்போனமையும், அவை வன்முறைப் போராட்டங்களாக வெடித்து ஆயிரக்கணக்கான உயிர்கள் பறிபோனமையும் ஒருபுறமிருக்க, இறுதியில் இடம்பெற்ற போரில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு இலங்கை இராணுவத்தினரால் அழிக்கப்பட்டு, தமிழர்கள் பெரும்பான்மையாக வாழுகின்ற பிரதேசங்களில் இலங்கை அரசு தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்கு மக்கள் ஆதரவைப் பெற்றுக்கொள்ள முடியாமையால் ஆயுதம் தரித்த ராணுவத்தினரை இங்கு நிலைகொள்ளச் செய்து அவர்கள் மூலம் பயங்கரவாத தடைச் சட்டத்தின் பிரிவுகளைச் செயற்படுத்தி வருகின்றது.

வன்முறைப் போராட்டங்கள் ஒழிக்கப்பட்ட பின்னரும் மக்கள் தமது ஜனநாயக உரிமைகளைப் பயன்படுத்திக் கொள்ள முடியாத இக்கட்டில் இருந்து வருகிறார்கள்.

எனவேதான், இந்த மக்களின் உரிமைகளை நியாயமான முறையில் வென்றெடுக்க ஜனநாயக முறைகளில் - அதுவும் சாத்வீக முறையில் போராட்டங்களை நடத்துவது குறித்தி தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் சிந்தித்திருக்கிறார் என்று கூறத் தேவையில்லை.

மாவை சேனாதிராசா தமது இளமைக் காலம் முற்கொண்டே இந்த இயக்கத்தில் ஊறித் திளைத்தவர். தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணியின் தலைவராக இருந்து அக்கால முதிய தலைவர்களின் சிந்தனைகளையும் செயல்முறைகளையும் நேரில் கண்டவர். அனுபவம் பெற்றவர். எனவே அந்த வழிமுறைகளில் இருந்து அவர் பிசகிப் போகமுடியாது- போகமாட்டார் என்று நம்ப வேண்டும்.

இந்தப் பின்னணியில்தான் அவர் தமது புதிய பதவியை ஏற்ற கையோடு விடுத்துள்ள அறிக்கையை நாம் கவனிக்க வேண்டும். கொழும்பு அரசின் ஒடுக்குமுறைகள் டிசெம்பர் 31க்குமுன் முடிவுக்கு வரவேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ள விடயத்தின் உள்ளார்ந்த கருத்தை அரசு புரிந்து கொள்ளவேண்டும். அப்படி என்ன என்ன ஒடுக்குமுறைகள் நடைபெறுகின்றன என்று அரசு கேட்கும் என்று எதிர்பார்க்க முடியாது. அதனால் தான் அவசரப்பட்டுக் கொண்டு அரசு தரப்பில் அமைச்சர் சிறிபால டி சில்வா கூட்டமைப்பு அச்சுறுத்தல் விடுத்திருப்பது போலவும், அதற்கு அரசு அஞ்சப் போவதில்லை என்ற வகையிலும் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

அரசு தனது தீர்வுத் திட்டம் பற்றிய விவரங்களை வெளியிடாத நிலையிலேயே தமிழ்த் தரப்பை தெரிவுக் குழுவுக்கு வாருங்கள், அங்கு பேசலாம் என்று கூறிக் கொண்டிருக்கிறது. ஒடுக்குமுறைகள் என்று கூறப்பட்டுள்ளவை குறித்து தமிழரசுக் கட்சித் தலைவரிடம் நீண்ட பட்டியல் ஒன்றே இருக்க முடியும். அதன் விவரத்தை அரசு கேட்காத போதும் சர்வதேசத்திடம் அவர்கள் விரிவாகவே எடுத்து விளக்கும் சந்தர்ப்பம் எழலாம். எனவேதான், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் இரு தரப்பு பேச்சுக்கே இடமில்லையென்று தூக்கி எறிந்து பேசிக்கொண்டிருக்காமல் அரசு இப்பொழுதாகிலும் சற்று விவேகமாகச் சிந்திக்க வேண்டும். ஐ.நாவின் சர்வதேச விசாரணையொன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. உள்நாட்டில் போர்க் குற்றங்கள் மற்றும் காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகள் நடைபெறுகின்றன.

இந்த விசாரணைகளின் முடிவுகள் எவ்வாறு அமையப் போகின்றன என்பதை அறுதியாகக் கூறமுடியாவிட்டாலும், இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கான செயற்பாடுகளையாவது அரசு வெளிப்படையாகவும் நம்பகத் தன்மையோடும் ஆரம்பிப்பது பயனுள்ளதாக அமையும்.

இனநல்லிணக்கம் என்பது வெளியில் இருந்து வரக்கூடிய விடயமல்ல. அது உள்ளேயே உருவாக வேண்டும். அதற்கு இப்போது நல்லதொரு சந்தர்ப்பம் உருவாகி இருப்பதாகக் கருத முடியும். தமிழரசுக் கட்சித் தலைவரின் அறிவித்தல் ஏதோ ஆற்றாமையால் வெளிப்பட்டதாகக் கொள்ள முடியாது.

60 வருடங்களுக்கு மேலாக இந்த நாட்டின் தமிழ் மக்கள் அனுபவித்து வரும் அவலங்களுக்கு எங்கள் காலத்திலாகுதல் ஒரு விடியலை ஏற்படுத்தி விட முடியாதா என்ற ஆதங்கம் அதில் தொனிக்கின்றது.

எனவே அரசு அதனை எதிர்மறையாக நோக்காமல் ஆக்கபூர்வமாகப் பார்க்க வேண்டும்.


தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் பற்றிப் பேசுகிறவர்கள், சிந்திக்கிறவர்கள் எதிர்பார்ப்பது போல் இந்த நாட்டு மக்கள் மத்தியில் அமைதியின்மையும் அக்கலாய்ப்பும் நீடிக்கவேண்டாம். அது ஆட்சியாளர்களின் கையிலேயே தங்கியிருக்கிறது.

# இந்திய-பாகிஸ்தான் எல்லையில் தொடரும் மோதல் சம்பவங்கள்

## அணு ஆயுதங்களுக்கு வழி வகுக்கலாம்

சேரலாதன்

இந்திய - பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் கடந்த சில தினங்களாக துப்பாக்கி வேட்டுக்களின் ஒலி கேட்டுக் கொண்டிருக்கின்றது. பாகிஸ்தான் இராணுவத்தினர் இந்திய இராணுவ நிலைகள் மீது தாக்குதலை மேற்கொள்வதாக இந்தியத் தரப்பிலிருந்து தெரிவிக்கப்படுகின்றது. மேலும் பாகிஸ்தான் இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் தமது தரப்பில் சில இராணுவ வீரர்கள் உயிரிழந்ததாகவும் இந்தியா தெரிவித்துள்ளது.



இந்தியாவிலிருந்து பிரிந்து சென்று பாகிஸ்தான் தனி நாடாக இயங்கத் தொடங்கிய நாளிலிருந்து இந்த இரண்டு நாடுகளும் எலியும் பூனையுமான நிலைக்கு வந்துவிட்டன. இதுவரை போர்கள் சிலவும் இடம்பெற்றுள்ளன. ஆனால் இரண்டு நாடுகளின் முறுகல் நிலைக்குத் காரணமான காஷ்மீர் பிரச்சினை இன்னமும் அணையாத நெருப்பாகக் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கின்றது. காஷ்மீருக்கு இந்த இரண்டு நாடுகளும் உரிமை கோரி வருவதால் அங்கு மோதல்கள் இடம்பெறுவதும். இறப்புகள் ஏற்படுவதும் வழக்கமான நிகழ்வுகளாகி விட்டன.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு பாகிஸ்தான் சர்வதேச மத்தியஸ்தத்தைக் கோரி நிற்கின்றது. ஆனால் இந்தியா இதை அடியோடு நிராகரிக்கின்றது. பல தடைவைகள் இந்த இரண்டு நாடுகளுக்கிடையிலும் போர் இடம்பெற்றுள்ளன.



அவற்றுள் 1971இல் இடம்பெற்ற போரில் பாகிஸ்தானிடமிருந்து பாங்களாதேஷ் பிரிந்து செல்வதற்கு இந்தியா குறிப்பாக அப்போதைய அந்த நாட்டின் பிரதமருமாகியஇந்திரா காந்தி அம்மையார் முழு மூச்சுடன் செயற்பட்டதை பாகிஸ்தான் இன்னமும் மறந்துவிடவில்லை. இந்தியாவைத் தனது பரம எதிரியாகவே பாகிஸ்தான் கருதி வருகின்றது. உலகிலேயே முஸ்லிம் மக்கள் அதிகளவில் வாழும் நாடுகளில் பாகிஸ்தான் இரண்டாவது இடத்தை வகிக்கின்றது. இங்கு சுமார் 20 கோடி முஸ்லிம் மக்கள் வசிக்கின்றனர். இந்துக்கள் உட்பட பிற மதத்தவர்கள் சிறிய எண்ணிக்கையில் வாழ்கின்றனர். பாகிஸ்தான் ஒரு ஜனநாயக நாடென அழைக்க முடியாதொரு நிலை அங்கு காணப்படுகின்றது. இராணுவம் ஆட்சிக் கலைப்பில் ஈடுபடுவதும், ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதும் அந்த நாட்டின் வழக்கமான நிகழ்வுகளாகி விட்டன. இஸ்லாமிய தீவிரவாதிகளின் ஊற்றுக் கண் பாகிஸ்தான் என்பதில் கருத்து வேற்றுமை இருக்க முடியாது. ஏனென்றால் உலகின் எந்தப் பாகத்தில் இருந்தாலும் இஸ்லாமியத் தீவிரவாதி பாகிஸ்தானுடன் தொடர்புகளைப் பேணுவதைக் கைவிடுவதில்லை. உலகின் முதன் நிலை வல்லரசு நாடான அமெரிக்கா பாகிஸ்தான் மீது எப்போதுமே ஒரு கண்ணை வைத்திருக்கின்றது. ஆண்டுதோறும் பயங்கரவாதிகளை ஒடுக்கவென பெருந்தொகைப் பணத்தை பாகிஸ்தானுக்கு வழங்கிவரும் அமெரிக்கா அந்தப் பணம் உரிய வகையில் செலவிடப்படுகின்றதா என்பதை அவதானித்து வருகின்றது. ஆனால் அதில் அந்த நாடு திருப்தி அடைந்ததாகத் தெரியவில்லை.

மேலும் ஆப்கானிஸ்தானில் ஆட்சி புரிந்த தலிபான்களை அமெரிக்கா விரட்டியடித்த போதிலும் பாகிஸ்தான் அவர்களுக்கு மறைமுகமாக அடைக்கலம் வழங்கி வருவதும், தலிபான்கள் ஆப்கானிஸ்தானில் பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபடுமாறும் அமெரிக்காவுக்குச் சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் பாகிஸ்தான் மீது அந்த நாட்டுக்கு கடும் அதிருப்தி ஏற்பட்டுள்ளது. ஆனால் பாகிஸ்தானைக் கைவிட்டுவிட்டால் பயங்கரவாதிகளின் கை அந்த நாட்டில் ஓங்கிவிடும் என்பதோடு அதனால் முழு உலகுமே பயங்கரவாத அச்சுறுத்தலுக்கு ஆளாக நேரிடும் என்பதால் அமெரிக்க வல்லரசு, பாகிஸ்தான் நாட்டுடனான உறவுகளை துண்டித்துக் கொள்ளவில்லை.

ஆனால் வழக்கத்துக்கு மாறாக அமெரிக்காவும், இந்தியாவும் தமக்கிடையிலான உறவுகளை மேம்படுத்தி வருவதைக் காண முடிகின்றது. முன்னரெல்லாம் ரஷ்யாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் உள்ளிட்ட பல்வேறு வகையான உதவிகளையும் பேணிவந்த இந்தியா தற்போது அமெரிக்காவின் பக்கம் சாய்ந்து செல்வதைக் காண முடிகின்றது. இதற்கு முன்னர் சோவியத் ஒன்றியம் என்ற அந்தஸ்துடன் அமெரிக்காவுக் குச் சவால் வருமளவுக்கு பலமான நிலையில் இருந்த சோவியத் ரஷ்யா தற்போது ரஷ்யா என்ற தனியான தோற்றத்துடன் காணப்படுவதும் ஒரு காரணமாகவே இருக்கலாம்.

ஆனால் இந்தியாவுடனான அமெரிக்காவின் நெருக்கத்தை பாகிஸ்தான் சந்தேகக் கண்களுடன் பார்க்கின்றது. அமெரிக்கா கைவிட்டாலும் பரவாயில்லை, சீனா இருக்கவே இருக்கிறது என்கின்ற இறுமாப்பு அதனிடம் காணப்படுகின்றது.

தெற்காசியாவின் வல்லரசு எனத் தன்னை வர்ணித்து அழகு பார்த்துக் கொண்டிருக்கும் இந்தியாவுக்கு. பாகிஸ்தான் ஒரு சுண்டைக்காய் என்றுதான் கூறவேண்டும். ஆனால் இந்தியாவின் பலவீனத்தை பாகிஸ்தான் நன்றாகவே புரிந்து கொண்டதால் இந்த நாட்டுக்குச் சவால்விட்டு வருகின்றது.

தற்போது பாகிஸ்தான் பிரதமராகப் பதவி வகிக்கும் நவாஸ் ஷெரீப் உள்நாட்டில் பெரும் நெருக்கடிகளை எதிர் கொண்டு வருகின்றார். முன்னாள் கிரிக்கெட் அணித் தலைவர் இம்ரான் கானின் கட்சியினர் அவரைப் பிரதமர் பதவியிலிருந்து விலகுமாறு கடுமையான நெருக்கடிகளைக் கொடுத்து வருகின்றனர். இவர்களின் ஆர்ப்பாட்டங்களைக் கலைப்பதற்கு பொலிஸார் மேற்கொண்ட முயற்சிகளின்போது ஆர்ப்பாட்டக்காரர்களில் சிலர் கொல்லப்பட்டுள்ளனர். இதனால் ஆர்ப்பாட்டங்கள் மேலும் தீவிரம் அடைவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. இதே வேளை- பாகிஸ்தான் இராணுவமும் பிரதமரைப் பதவி விலகுமாறு கூறியதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. உள்நாட்டில் கிளர்ந்தெழும் பிரச்சினைகளைத் திசை திருப்பும் நோக்குடன் பாகிஸ்தான் இராணுவத்தினர் எல்லையில் பதற்றத்தை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாகச் சில வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் இந்தியாவுக்குத் துணிவும், செயற்றிறனும் மிக்கதொரு பிரதமர் கிடைத்துள்ளதாக அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர். நரேந்திரமோடி ஒரு இந்துத்துவவாதி எனவும் முஸ்லிம்களுக்கு எதிரானவர் என்றும் ஏற்கனவே முத்திரை குத்தப்பட்டவர். ஆனால் அவர் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் முஸ்லிம் மக்களின் வாக்குகளையும் பெருமளவில் பெற்று ஆட்சி அமைத்துள்ளார். ஆனால் அவர் தாம் சார்ந்த கொள்கையிலிருந்து ஒரு போதுமே பின்வாங்க மாட்டார் என்பதை உறுதியாகக் கூறமுடியும். ஏனென்றால் இந்தியாவில் வாழும் மக்களில் சுமார் 80 வீதமானவர்கள் இந்துக்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆகவே போர் ஒன்று இந்த இரு நாடுகளுக்குமிடையே மூளுமேயானால் அதன் விளைவுகள் முன்னரைப் போலன்றி பயங்கரமானதாக இருந்துவிடப்போகின்றது. மேலும் அரசியல் ஸ்திரம் இல்லாததோடு தீவிரவாதிகளின் நடமாட்டமும் அதிகரித்துக் காணப்படுவதால் பாகிஸ்தான் வசமுள்ள அணு ஆயுதங்கள் தவறான முறையில் பயன்படுத்துவதற்கான சாத்தியங்களும் காணப்படுகின்றன. இந்தியாகூட அணு வல்லமை கொண்டதொரு நாடாக விளங்குவதால் இறுதிக் கட்டத்தில் அணு ஆயுதங்களில் கைவைக்கக்கூடியதொரு நிலை உருவாகக் கூடுமென அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

மாணிக்க லீலா விநோதன்

# 'கத்தறகம தெய்யோ'வாக மாறிய தமிழர்களின் கதிர்காமக் கந்தன்

இலங்கைத் திருநாட்டிலே கந்தக் கடவுள் கோயில் கொண்ட இடங்களில் கதிர்காமம் பழைமை வாய்ந்த, சரித்திரக் கதைகள் கொண்ட, முத்துலிங்க சுவாமிகள் உட்பட பல சித்தர்கள் இருந்து வழிபட்டு முத்தி பெற்ற திருத் தலமாகும்.

ஆண்டு தோறும் ஆடி மாதத்தில் இங்கு உற்சவங்கள் ஆரம்பித்து 15 நாள்கள் இடம்பெறும். பிராமணர்கள் அல்லாத, பெரும்பான்மை இனத்தவரான 'கப்புறாளை' என்போரே இங்கு பூசைகள் செய்து வருகிறார்கள். ஆடி மாத உற்சவம் கண்டு -முருகனைத் தரிசிக்கவென வடபகுதியிலிருந்தும் பல பக்தர்கள் இங்கு செல்வர். கால்நடையாகவும், ஊர்திகளிலும் செல்வது வழமை. ஆனால் முன்னர் போன்று அதிகமானவர்கள் தற்போது செல்வதில்லை.

கதிர்காமம் புண்ணியபூமி என 1956 ஆம் ஆண்டளவிலே அரசால் அறிவிக்கப்படுவதற்கு முன்னர் -இந்தப் பகுதி முழுவதும் தமிழர்களான இந்துக்ளின் பகுதியாகவே இருந்தது. 42 மடங்கள் அங்கு இயங்கி வந்தன. அடியார்களுக்கு உணவு வழங்கித் தங்குவதற்கான வசதிகளும் ஏற்படுத்தப்பட்டன.

1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அங்கு செல்லும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை. ஆயினும், அண்மையில் கதிர்காமம் செல்லும் திடீர் அழைப்புக் கிடைத்தது. நல்லூர் முருகனின் கார்த்திகை உற்சவம் கண்ட அருளுடன் கதிர்காமம் புறப்பட்டேன்.

'அங்கே ஏன் போகிறாய்- எல்லாம் அவங்கள் தங்களுக்கே ஆக்கிப் போட்டாங்கள், பழைய கதிர்காமம் அங்கை இல்லை, எல்லாம் ஆட்சியாளரின் சொத்தாய்ப் போச்சு. அதைவிட உங்கை நின்று நல்லை முருகனைக் கும்பிட்டாலே போதும்' என நண்பர்கள் சிலர் சொன்னார்கள். 32 வருடங்களின் பின்னர் அங்கு சென்று கதிர்காமமுருகன், கதிரமலைக் கந்தனைத் தரிசித்தாக வேண்டுமென்ற ஆவலில் புறப்பட்டேன்-!

தற்போது கதிர்காமத்தில் தங்குவதற்குப் பல இடங்கள் -வசதிகளுடன் கொழும்புக் கட்டணத்தில் உள்ளன. முன்பிருந்த மடங்கள் இல்லை. தமிழர்களின் இடம் எதுவும் இல்லை. இராமகிருஷ்ணமடம் முதல் எதுவுமே இயங்கவில்லை. இந்து கலாசார திணைக்களம் அங்கு நடத்தி வந்த இடம் தற்போது ஏதோ திருத்த வேலையில் உள்ள தாம்.

ஹோட்டல் ஒன்றில் அறை எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 'மகா தேவாலய' என அழைக்கப்படும் முருகன் ஆலயம் முன்பு முத்துலிங்க சுவாமிகளால் (யந்திரப் பெட்டி மூலஸ்தானத்தில் வைத்து) வணங்கப்பட்டு வந்தது. இதுவே அன்று முதல் எமது மூதாதையர் கந்தப்பெருமான் எனப் போற்றி அருள் பெற்ற திருத்தலம். தினமும் காலை 6 மணிக்கும், மாலை 6.30 மணிக்கும் மகாபூசை நடைபெறும். நூற்றுக் கணக்கான பெரும்பான்மையின முருகன் பக்தர்கள் நேர்த்திக் கடன் செலுத்த அர்ச்சனைத் தட்டுக்கள் பழங்கள் நிறைந்த தட்டுக்களுடன் வரிசையில் நின்று, மூலஸ்தானத் திரையின் உள்ளே புகுந்து வணங்கி வர சில நேரங்களில் அனுமதிக்கப்படுகிறார்கள். கரகாட்டம், காவடி ஆட்டம், தீச்சட்டி ஏந்தி ஆட்டம் எனப் பலவித வணக்க முறைகள் அங்கு நிலவு கின்றன. திருவிழாக் காலம் போன்றே அங்கு அன்று வெள்ளிக் கிழமை



அடியார் கூட்டம் நிலவியது. நூற் றுக்கு பத்து வீதத்தினரே நம்மவர் என லாம். தமிழ் நாட்டுப் பக்தர்களும் உண்டு.

முன்பு முருகன் ஆலயத்துடன் ஒன்றாக இருந்த தெய்வானை அம்மன் ஆலயம் மதில் சுவரால் பிரிக்கப்பட்டு வேறாக உள்ளது. பிள்ளையார் ஆலயம் முருகன் ஆலயத்துடன் இணைந்தே உள்ளது. பிராமண குருமார் பிள்ளையார் கோயிலில் உள்ளனர். ஆனால் நிர்வாகப் பொறுப்பு கப்புறாளைமார் வசமே உள்ளது. தெய்வானை அம்மன் ஆலயம் தற்போது இராமேஸ்வர ஆலய நிர்வாகப் பொறுப்பில் உள்ளதாகக் கூறப்பட்டது. தெய்வானை அம்மன் வேறு வாயிலுடன் உள்ளதால் கதிர்காமம் வரும் தமிழ் யாத்திரிகள் எல்லோருக்கும் அது தெரிவதில்லை. கதிர்காமத்தில் கங்கையின் உட்பகுதியில் ஐந்துக்கும் மேற்பட்ட ஆலயங்கள் உள்ளன.

42 மடங்கள் இருந்த இடங்களிலே இவ்வாறு ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அந்தப் பெரிய இராமகிருஷ்ண மடத்துக்கு என்ன நடந்தது எனக் கேட்டேன். அங்கே இடம் இருக்கு. ஆனால் மடம் இல்லை என்றனர்.

'மகா தேவாலயம்' என்கிற எங்கள் கதிர்காமக் கந்தன் ஆலயத்திலே மாலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும் பூசை 7.30 மணிக்கு நிறைவு பெற அடுத்தடுத்து அங்குள்ள ஏனைய ஆலயங்களிலும் பூசைகள் இடம்பெறுகின்றன. மூன்று விஷ்ணு ஆலயங்களும் சிங்களத்தில் மட்டுமே பெயர் பொறிக்கப்பட்ட பலகை முகப்புடன் மின்சார ஒளி அமைப்புடன் துலங்குகின்றன.

கந்தனிடம் மலை ஏறிச் செல்வது புனிதமான யாத்திரையாகும்.

களைப்பின்றிப் படியேறிச் சென்றால் ஒரு மணித்தியாலத்தில் உச்சி மலை செல்லலாம். முப்பது வருடங்களுக்கு முன்பிருந்ததை விட எவ்வளவு பெரிய மாற்றங்கள்! முன்பாக உள்ள ஆலயத்திலும் மறுபக்கம் உள்ள சிவன் ஆலயத்திலும் பூசைகள் நடைபெறுகின்றன. நூறு ரூபா சீட்டு பெற்று அர்ச்சனை செய்யலாம். கப்புறாளைமார்தான் அங்கும் பூசை செய்கின்றனர். நமது ஐயா சமஸ்கிருதத்தில் எவ்வாறு மந்திரங்களை உச்சரிக்கின்றாரோ அதைப் போன்று அவர்களும் சிங்களத்தில் பாளி கலந்தது போன்ற ஒலியுடன் படபட என சொல்லி நூலும் கட்டி விபூதியும் தருகிறார்கள். மலைக்குச் செல்வதற்கு வாகன வசதியும் உள்ளது! அரைமணி நேரத்தில் சுற்றிச் சுழன்று மலை உச்சிக்கு அண்மையில் விடுவார்கள் ஒரு வருக்கு முன்னூற்றி ஐம்பது ரூபா எடுக்கிறார்கள். ஆனால் கேட்டதை வழங்கும் சக்தி கொண்ட உச்சி முருகனிடம் நடந்து சென்றாலேயே நன்மைகள் ஏற்படும் எனத் தொண்ணூறு வயது மூதாட்டி ஒருவர் சொன்னார்.

அடுத்து செல்லக் கதிர்காமம் சென்றேன். ஏழு கிலோமீற்றர் தூரம்தான். அங்கும் பெரும் மாற்றங்கள். மாணிக்க கங்கையில் கதிர்காமத்தை விடக் கூடிய தண்ணீர் ஓடுகிறது. அங்கும் அடியார் கூட்டம் அதிகம்தான்.

கதிர்காமம் முதல் அந்தப் பகுதி எங்குமே வர்த்தக நிலையங்கள், ஹோட்டல்கள் எனப் பெரிய நகரமாகவே அந்தப் பிரதேசம் மாற்றமடைந்துவிட்டது. தமிழ் நாட்டிலிருந்தும், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, மலை நாட்டில் இருந்து வரும் பக்தர்கள் கதிர்காமத்தில் 42 தமிழ் மடங்கள் இருந்த மாணிக்க கங்கையின் உட்பக்கப் புனித பூமிப் பகுதியில் உள்ள ஏனைய இந்து ஆலயங்களையும் தரிசிக்க வேண் டும். கதிரமலை சென்று உச்சி மலை முருகனையும் வணங்க வேண்டும். செல்லக் கதிர்காமம் சென்று பிள்ளையார் முருகனையும் தரிசிக்க வேண்டும்.

கார்த்திகைத் திருவிழா அன்று நல்லூரிலே நூற்றுக்கணக்கான பெரும்பான்மையினப் பொலிஸார் கடமையில் இருந்தார்கள். இரு பெண் பொலிஸ் அதிகாரிகள் நம்மவர்களின் முருகபக்தி வணக்கத்தைப் பார்த்து ஆச்சரியப்பட்டுக் கொண்டு நின்றார்கள்.

அவர்கள் உணர்வைப் புரிந்து கொண்ட நான் கதை கொடுத்தேன். இங்குள்ள தெய்வம் முருகன் என்கிற கந்தன் என்றேன். அப்படியானால் எங்களின்ர கத்தறகம தெய்யோவா? (கதிர்காமக் கடவுளா) என்றார்கள் ஆச்சரியத்துடன். கத்தற கம தெய்யோ தான் முருகன் என்றாலும், கந்தன் என்றாலும் கதிர்காம முருகன் என்றாலும், நல்லூர் முருகன் என்றாலும் அது தமிழரின் கடவுள் என்றவாறே அவர்கள் பதிலைப் பாராமல் வந்துவிட்டேன். கடவுளுக்காகவும் நாம் சண்டை பிடிப்பதா- முருகா?



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: தொழில் போட்டிகள் நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வாக்குவன்மையால் காரிய வெற்றி பெறுவார்கள். குடும்பத்தில் வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் திடீர் கருத்து வேற்றுமை ஏற்படலாம்.

**இடபம்**: நீண்ட நாள்களாக இருந்து வந்த பிரச்சினைகள் தீரும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முயல்வீர்கள். உத்தியோகத்தில் இருந்து வந்த மறைமுக எதிர்ப்புகள் விலகும். நீண்ட நாள்களாக முடிக்க முடியாமல் இருந்த ஒரு காரியத்தைச் செய்து முடிப்பீர்கள்.

**மிதுனம்**: தொழில் வியாபாரத்தில் இருந்த சிக்கல்கள் தீரும். தொழில் விரிவாக்கம் பற்றிய சிந்தனை அதிகரிக்கும். உத்தியோகத்தர்களுக்கு வேலை பார்க்கும் இடத்தில் இருந்த பிரச்சினை குறையும். குடும்பத்தில் அமைதி உண்டாகும்.

**கடகம்**: தடைப்பட்டு வந்த காரியங்கள் தடை நீங்கி சாதகமாக நடந்து முடியும். முக்கிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். அதனால் நன்மை உண்டாகும். மற்றவர்களுடன் இருந்த மனவருத்தம் நீங்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த தடைகள் நீங்கும்.

**சிங்கம்**: அரசு மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் சாதகமாக நடக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் குறையும். மற்றவர்கள் மூலம் உதவி கிடைக்கும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றலாம்.

**கன்னி**: குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். தடைப்பட்ட காரியங்களில் இருந்த தடைநீங்கி சாதகமாக நடந்து முடியும். குழந்தைகளின் எதிர்கால கல்வி தொடர்பாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். தேவையற்ற மருத்துவச் செலவு ஏற்படக்கூடும்.

**துலாம்**: தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் அவசர முடிவுகள் எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலையும் காரிய தாமதத்தையும் சந்திக்க வேண்டி இருக்கும். புதிய நபர்களின் அறிமுகம் உண்டாகும்.

**விருச்சிகம்**: அடுத்தவர்களுக்காக பொறுப்புகளை ஏற்கும்போது ஒரு முறைக்கு பலமுறை யோசித்து முடிவு எடுப்பது நல்லது. புதிய நபர்களிடம் எச்சரிக்கை தேவை. வீண் அலைச்சலைக் குறைத்துக்கொண்டு வேலைகளில் கவனம் செலுத்துவது நல்லது.

**தனுசு**: பலவகையிலும் பிறர் உதவி கிடைக்கப் பெறுவீர்கள். யாருக்கும் வாக்குறுதிகள் கொடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் மற்றவர்களுக்காக பொறுப்புகள் ஏற்கும்போது மிகவும் கவனமாக இருப்பது வீண்பழி ஏற்படாமல் தடுக்கும்.

**மகரம்**: உங்கள் புத்தி சாதுரியத்தால் புகழையும், செல்வத்தையும் பெறுவீர்கள். எண்ணிய காரியங்களைத் திறமையாகச் செய்து முடிப்பீர்கள். எதிர்பார்த்த இடமாற்றம் கிடைக்கும். சில முக்கியமான முயற்சிகள் அதிக உழைப்பின் பேரில் செய்ய வேண்டி இருக்கும்.

**கும்பம்**: தொழில், வியாபாரம் செய்பவர்கள் தங்களது திறமையை வெளிபடுத்தி வியாபாரம் செய்ய வேண்டி இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்குப் புதிய பொறுப்புகள் கிடைக்கலாம். வேலை தொடர்பாக வெளியூரில் தங்க நேரிடலாம்.

**மீனம்**: அயலவர்களிடம் கவனமாகப் பேசுவதும் வாக்குவாதத்தைத் தவிர்ப்பதும் நல்லது. வெளியூர்ப் பயணம் செல்ல நேரிடும். மாணவர்கள் கல்வி தொடர்பான பயணம் செல்ல வேண்டி இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும்.

## நாளை

**ஆவணி-25 புதன்கிழமை | 10.09.2014**

திதி: துதியை பி.இ.04.05 வரை
நட்சத்திரம்: உத்தரட்டாதி பி.இ.02.28 வரை
சுபநேரம்: 04.33-06.03 வரை
இராகுகாலம்: 12.03-01.33 வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## நற்பண்புகளில் இந்தியரின் முறைகளே மேம்பட்டவை

"வேதங்களில் துறவு நிலை ஒப்புக் கொள்ளப்பட்டுதான் இருக்கிறது; ஆனால், ஆண் பெண் வேறுபாடின்றியே கூறப்பட்டுள்ளது. ஜனக மன்னரின் அவையில் யாஜ்ஞவல்கியர் கேள்வி கேட்கப்பட்ட விதம் உங்களுக்கு நினைவிருக்கிறதா? அவரைக் கேள்வி கேட்டவருள் முதன்மையானவள் வாசக்னவி என்பவள்; வாதில் வல்லவள் (அவர்கள் பிரம்ம வாதினி என்றே அழைக்கப்பட்டனர்). 'திறமையான வில்வீரனின் கையில் உள்ள ஒளிவீசும் இரு அம்புகளை ஒத்தவை எனது கேள்விகள்' என்கிறாள் அவள். அங்கு அவளது பெண் பிறவியைப் பற்றியக் கேள்வியே எழவில்லை. எமது பண்டைய குருகுலப் பல்கலைக்கழகங்களில் சிறுவர் சிறுமியரிடையே நிலவிய சமத்துவத்தைப் போலப் பூரணமானது வேறேதாவது உண்டா?" எமது வடமொழி நாடகங்களுள் சாகுந்தலத்தைப் படித்த பிறகு டென்னிசனின் 'இளவரசி' நமக்கு ஏதாவதுகற்பிக்கமுடியுமா? "எமது பண்டைப் பெருமைகளை மிகவும் அருமையாக நீங்கள் வெளிப்படுத்துகிறீர்கள், சுவாமிஜி!"

"அது ஒருவேளை உலகின் இரு வேறு பகுதிகளையும் நான் கண்டதனால் இருக்கலாம்! சீதையைத் தோற்றுவித்த இனம், சீதையைக் கற்பனையில் மட்டும் கண்டதாகவே வைத்துக் கொண்டால்கூட உலகிலேயே தன்னிகரில்லாத விதத்தில் பெண்மையின் மீது பக்தியுடையதென்பதில்ஐயமில்லை. மேலைநாட்டுப் பெண்களின் தலையில் சட்டத்தால் இறுகக் கட்டப்பட்டுள்ள பல சுமைகள் உள்ளன. சட்டம் என்னும் அந்தச் சுமைகள் நமக்குச் சற்றும் புரியாதவை. உண்மையாகவே நம்மிடம் குற்றங்களும் குணங்களும் இருப்பது போலவே அவர்களிடமும் இருக்கின்றன. அன்பு, மென்மை, நேர்மை இவற்றை வெளிப்படுத்த வேண்டும் என்பதே உலகினர் அனைவருடைய முயற்சியுமாகும். இந்தக் குணங்களை வெளிப்படுத்துவதில் மிகப் பெரிய இடம் வகிப்பது ஒரு நாட்டின் பழக்க வழக்கங்களே என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். நற்பண்புகளைப் பொறுத்த வரையில்இந்தியரின்முறைகளே மற்றவர்களுடைய முறைகளைவிடப் பலவழிகளில்மேம்பட்டவைஎன்று நான் தயக்கமின்றிக் கூறுவேன்"

# பூமியைத் தாக்கிய இராட்சத விண்கல் பெரிய பள்ளம் ஏற்பட்டுள்ளதால் அச்சம்



இலத்தீன் அமெரிக்க நாடுகளிலேயே மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள நிக்கரகுவா நாட்டின் தலைநகரான மனாகுவா நகரை நேற்று இராட்சத விண்கல் ஒன்று தாக்கியது. அங்குள்ள விமான நிலையத்தை அண்மிய வனப் பகுதியில் தீப்பிழம்பாக விழுந்த இந்த விண்கல், சுமார் 39 அடி குறுக்களவு கொண்ட மிகப் பெரிய பள்ளத்தை ஏற்படுத்தியது.

அது விழுந்த இடம் அடர்ந்த வனப்பகுதிஎன்பதால்அதிர்ஷ்டவசமாக எவருக்கும் எந்த ஆபத்தும் ஏற்படவில்லை.

விண்கல் விழுந்த ஓசையும் அதிர்வும் மனாகுவா முழுவதும் உணரப்பட்டதாகவும், நிலநடுக்கத்தை அளவீடு செய்யும் கருவியிலும் அதன் தாக்கம் பதிவானதாகவும் உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்தன.

விண்கல் விழுந்தபோது பலத்த அதிர்வும், அது விழுந்த ஓசை ஏற்படுத்திய அதிர்ச்சியில் அடுத்ததாக மிகப்பெரிய அதிர்வும் உணரப்பட்டதாகவும், அருகில் இருந்த விமான நிலையத்தில் இருந்த விமானங்களுக்கு அதனால் எந்த வித பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் தெரிய வந்துள்ளது.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2 | | | 4 | 6 | 1 | |
| | | | | 8 | 1 | 4 | 7 | |
| 1 | | | 5 | | | | | |
| 9 | 8 | 6 | 1 | 5 | | | | |
| 4 | | 1 | | 9 | | 2 | | 6 |
| | | | | 4 | 6 | 1 | 9 | 8 |
| | | | | | 9 | | | 4 |
| | 9 | 4 | 7 | 2 | | | | |
| | 2 | 3 | 4 | | | 8 | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 1 | 6 | 6 | 3 | 4 | 2 | 9 | 5 |
| 4 | 9 | 5 | 1 | 2 | 8 | 7 | 3 | 6 |
| 2 | 6 | 3 | 7 | 5 | 9 | 4 | 1 | 8 |
| 5 | 2 | 4 | 8 | 9 | 6 | 1 | 7 | 3 |
| 8 | 7 | 9 | 3 | 4 | 1 | 5 | 6 | 2 |
| 6 | 3 | 1 | 2 | 7 | 5 | 9 | 8 | 4 |
| 3 | 5 | 6 | 9 | 1 | 2 | 8 | 4 | 7 |
| 1 | 8 | 2 | 4 | 6 | 7 | 3 | 5 | 9 |
| 9 | 4 | 7 | 5 | 8 | 3 | 6 | 2 | 1 |

# தகுதிச் சுற்றுத் தோல்விக்கு றோயலைப் பழிதீர்த்து வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது ஞானமுருகன்



தகுதிகாண் சுற்றில் அடைந்த தோல்விக்கு பழி தீர்த்து விண் மீண் வெற்றிக்கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது மயிலங் காடு ஞானமுருகன் விளையாட் டுக் கழகம். பார்த்தீபனின் அதிர டிக் கோல்களினாலும் கயந்த னின் அபார கோல் காப்பினாலும் ஊரெழு றோயல் அணியின் கனவை தகர்த்தெறிந்த மயிலங் காடு ஞானமுருகன் அணி இறு திப் போட்டியில் வெற்றியீட்டியது.

தும்பளை கருணையுள்ளம் விண்மீன் நற்பணிமன்றத்தின் ஆதரவுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திய அணிக்கு 7 பேர் பங்குபற்றிய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி யின் இறுதியாட்டமும் பரிசளிப்பு விழாவும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வல்வை றெஜின்போ விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றன.

கழகத் தலைவர் அமலதாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகமும் மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக் கழகமும்மோதின. தகுதிகாண் சுற்றுப்போட்டியில் இந்த இரு அணிகளும் மோதிய போட்டியில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் 4:1 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதிக்கு தகுதி பெற்றி ருந்தது. அதேவேளை அந்த தோல்விக்கு எவ்வாறாயினும் பழி தீர்க்க வேண்டும் என்ற நோக்கத்தோடு ஞானமுருகன் அணியும் களமிறங்கியதால் மைதானத்தில் பெரும் திரளான பார்வையாளர்கள் குழுமியி ருக்க ஆட்டம் ஆரம்பமானது.

மிகவும் பரபரப்புடன் ஆரம்ப மான இந்தப்போட்டியின் தொடக் கமே ஞானமுருகன் அணிக்கு அசத்தலாக இருந்தது. மத்திய பகுதியிலிருந்து உதைக்கப்பட்ட ஆரம்ப உதையை பெற்ற தீபன் அதனைக் கோல் கம்பத்தை நோக்கி பலங்கொண்டு உதைக்க அது கோல் கம்பத்தின் மேல்பகு தியில் பட்டு வெளியேறியது. அந்த பரபரப்பு அடங்குவதற்குள் 4 ஆவது நிமிடத்தில் ஞானமுரு கன் அணியைச் சேர்ந்த பார்த் தீபன் அபார கோல் ஒன்றைப் போட்டார். இதற்குச் சவாலாக றோயல் அணியினர் முன் னோக்கிச் சென்று பந்தினை அடித்த போதும் அதனை ஞானமுருகன் அணியின் கோல் காப்பாளர் சாதூரியமாகப் பிடித் துக் கொண்டார். இதனை அடுத்து ஆட்டம் மேலும் சூடு பிடிக்க ஞான முருகன் அணியின் நட்சத்திர வீரர் தவரூபன் 7ஆவது நிமிடத் தில் தமது அணிக்கான இரண்டா வது கோலைப் போட்டார். இந்தச் சூழ்நிலையில் மேலதிக கோல் கள் போடாத நிலையில் 2:0 என்ற ரீதியில் ஞானமுருகன் முன்னிலை வகிக்க ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப் பட்டது.

இடைவேளையின் பின்னர் றோயல் அணியினர் தமது ஆட்டத்தை வேகப்படுத்தினர். ஆட்டம் தொடங்கி 2 ஆவது நிமிடத்தில் றோயல் அணிக்கு மூலை உதை கிடைத்தது. இவ் மூலை உதையை கஜகோபன் அடிக்க அதனை நிதர்சன் பெற்று அபாரமாக கோல் கம்பங்களை நோக்கி அடித்த போதும் அந்தப் பந்து கோல் கம்பத்துக்கு மேலா கச் சென்றது. இடைவேளையின் பின் 6 ஆவது நிமிடத்தில் ஞான முருகன் அணி வீரர் பார்த்தீபன் அணியின் மூன்றாவது கோலை யும் போட ஞானமுருகன் அணி யின் வெற்றி உறுதிசெய்யப்பட்டது. அதன் பின்னரும் கோல்களை பெறவேண்டும் என றோயல் அணியினர் கடுமையாகப் போரா டினர். இதன் பயனாக 13 ஆவது நிமிடத்தில் றோயல் அணியின் வீரர் காணுஜன் தட்டிக் கொடுத்த பந்தை கஜகோபன் கோலாக் கினார். ஆட்ட நேர இறுதியில் 3:1 என்ற அடிப்படையில் றோயல் அணியைத் தோற்கடித்து வெற் றிக்கிண்ணத்தை ஞானமுரு கன் விளையாட்டுக்கழக அணி சுவீகரித்தது.

இந்தப் போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கான வெற்றிக் கிண் ணங்களை வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜி லிங்கம், பருத்தித்துறை பிரதேச செயலர் இ.ஜெயசீலன் உட்பட பலரும் வழங்கினர். போட்டியின் ஆட்ட நாயகனாக ஞானமுரு கன் அணியைச் சேர்ந்த தீபனும், தொடர் ஆட்ட நாயகனாக அதே அணியைச் சேர்ந்த ஜெகனும் சிறந்த கோல் காப்பாளராக அதே அணியைச் சேர்ந்த சயந் தனும் தெரிவு செய்யப்பட்ட துடன், சுற்றுப் போட்டியில் அதிக கோல்களைப் போட்ட வர்களுக்கான விருதினை றோயல் அணியைச் சேர்ந்த கஜகோபனும், சிறந்த பின்கள வீரருக்கான விருதை திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழ கத்தைச் சேர்ந்த தீலிபனும், மூத்த வீரருக்கான விருதை ஊரெழு அணியைச் சேர்ந்த வெள்ளையும், வளர்ந்து வரும் வீரருக்கான விருதை ஞான முருகன் அணி வீரர் வாகீச னும், சிறந்த நன்னடத்தையை வெளிக் காட்டிய அணிக்கான விருதினை யாழ்.ஐக்கிய விளையாட்டுக் கழகமும் பெற்றுக் கொண்டன.

(ரி- 108- 422)

## தேசியமட்ட குழுநிலைப் போட்டிகள்



யாழ்ப்பாணம்,செப்.9


தேசிய மட்ட பாடசாலைகளுக் கிடையிலான இரண்டாம் கட்டக் குழுநிலைப் போட்டிகள் எதிர்வரும் 14ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரை நடை பெறவுள்ளன.

இதில் 19 வயதுப்பிரிவு ஆண், பெண் இருபாலருக்குமான ஹொக்கிப் போட்டிகளில் பெண் களுக்கான போட்டி கொழும்பு றோயல் கல்லூரி, கொழும்பு ஸ்ரீமாவோபண்டாரநாயக்க பாடசாலை மைதானங்களி லும், 15 வயது, 19 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபால ருக்குமான கரம் போட்டி யாழ்.மத்திய கல்லூரியில் உள்ளக அரங்கிலும், 19 வய துப்பிரிவு ஆண், பெண் இரு பாலருக்குமான மென்பந்துப் போட்டிகளில் ஆண்களுக் கான போட்டி யாழ். மத்திய கல்லூரி, யாழ்.இந்துக்கல் லூரி மைதானங்களிலும், பெண்களுக்கான போட்டி யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்திலும், 15 வயது, 17 வயது, 19 வயதுப்பிரிவு பெண்களுக்கான வலைப்பந் தாட்டப்போட்டி வியங்கொடை தேசியற் கல்வியற் கல்லூரி மைதானத்திலும், 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான குத் துச்சண்டைப் போட்டிகொழும்பு அசோக வித்தியாலயத்திலும், 17வயது, 19வயதுப்பிரிவு ஆண், பெண் இருபாலாருக் குமான பளுதூக்கல் போட்டி அரநாயக்க திப்பிட்டிய ராஜ கிரய மகா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளன. (ரி- 23)



தேசிய மட்ட 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கபடிப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்ற பருத்தித்துறை கலட்டி ஆர்.சி.வித்தியாலய அணியினர். (ரி-108)

# விறுவிறுப்பான ஆட்டம் சமநிலையில்



யாழ்ப்பாணம்,செப்.9

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் 19 வயதுப்பிரிவு ஆண்களுக் கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் விறுவிறுப் பாக நடைபெற்ற ஆட்டம் ஒன்று சமநிலையில் முடிவ டைந்தது.

நேற்று முன்தினம் ஞாயிற் றுக்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் மன் னார் உதைபந்தாட்ட லீக் அணியை எதிர்த்து யாழ். உதைபந்தாட்ட லீக் அணி மோதிக் கொண்டது.

இரண்டு அணியினரும் சம பலத்துடன் மோதிக் கொள்ள முதற்பாதி ஆட்டம் விறுவிறுப் பாக நடைபெற்றது. இதன் போது இரண்டு அணியின ரும் தமது அணிக்கான கோல் களைப் பெற எதிர் அணியி னரின் கோல்ப் பரப்பினை முற்றுகையிட்டு விளையாடி னர். ஆனால் இரண்டு அணி யினராலும் தமது அணிக் கான கோல்களைப் பெற முடியவில்லை. முதற் பாதி ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்ட போது இரண்டு அணிகளும் சமநிலையில் இருந்தன.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமானபோது இரண்டு அணியினரும் தமது ஆட்டத் தில் சில மாற்றங்களை மேற் கொண்டு விளையாட ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது. இதன்போது யாழ்.உதைபந் தாட்ட லீக் அணியினர் தமது அணிக்கான கோல்களைப் பெற எதிர் அணியினரின் கோல்பரப்பினை ஆக்கிர மித்த வண்ணம் இருந்தனர். இடைவேளையின் பின் 15 ஆவது நிமிடத்தில் மன்னார் லீக் அணியின் பின்கள வீரர் பந்தினை அடிக்க முற்பட்ட போது பந்து மன்னார் அணி யின் கோல்க் கம்பத்தினுள் நுழைந்தது. இதனால் யாழ். லீக் அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித் தது. தொடர்ந்து மன்னார் அணியினரும் தமது அணிக் கான கோலைப் பெற கடுமை யாக முற்சித்தனர். இதன் பயனாக 18 ஆவது நிமிடத்தில் நிப்ராஜ் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தினை சரியான முறையில் பயன்படுத்தி தனது அணிக்கான முதலாவது கோலை அடித்தார். மேலதிக மாக கோல்கள் எதனையும் பெற்றுக் கொள்ளாத நிலை யில் ஆட்ட நேர முடிவின் போது இரண்டு அணியினரும் தலா ஒவ்வொரு கோல்களைப் பெற்றிருக்க ஆட்டம் சமநிலை யில் முடிவடைந்தது. (ரி- 23)

# தொடர்ந்து மூன்றாவது தடவையாக சம்பியனை வென்ற செரீனா வில்லியம்ஸ்



நியூயோர்க் நகரில் நடைபெற்று வரும் கிராண்ட்ஸலாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் ரென்னிஸ் போட்டித் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவில் தொடர்ச்சியாக மூன்றாவது தடவையாக சம்பியன் பட்டத்தை வென்றார் செரீனா வில்லியம்ஸ்.

மகளிர் ஒற்றையர் இறுதிப்போட்டியில் உலகின் முதல் நிலை வீராங்கனையும், நடப்பு சம்பியனுமான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், முன்னாள் முதல் நிலை வீராங்கனையும், தற்போது 10 ஆவது வரிசையில் இருப்பவருமான டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி ஆகியோர் மோதினார்கள். இதில் செரீனா 6-3, 6-3 என்ற நேர் செற் கணக்கில் எளிதில் வென்று அமெரிக்க ஓபன் பட்டத்தை தொடர்ந்து 3ஆவது முறையாக கைப்பற்றி ஹட்ரிக் சாதனை புரிந்தார். இந்தச் சாதனை புரிந்த 2ஆவது வீராங்கனை இவர் ஆவார். இதற்கு முன்பு கிறிஸ் வெர்ட் 1975 தொடக்கம் 1978ஆம் ஆண்டு வரை தொடர்ந்து 4 முறை பட்டம் வென்றார். மேலும் செரீனா அமெரிக்க ஓபன் பட்டத்தை 6ஆவது தடவையாக கைப்பற்றி முத்திரை பதித்தார். இதற்கு முன்பு 1999, 2002, 2008, 2012, 2013 ஆகிய ஆண்டுகளில் பட்டம் பெற்று இருந்தார். இதன் மூலம் அவர் கிறிஸ்வெர்டை சமன் செய்தார். கிறிஸ்வெர்ட் அமெரிக்க ஓபன் பட்டத்தை 6 முறை வென்றது சாதனையாக இருந்து வந்தது. ஒட்டு மொத்தமாக செரீனா வில்லியம்ஸ் கைப்பற்றிய 18ஆவது கிராண்ட்ஸலாம் பட்டம் இதுவாகும். இதன் மூலம் அமெரிக்காவின் நவரத்தி லோவா, கிறிஸ் வெர்ட் ஆகியோரின் சாதனைகளையும் சமன் செய்தார். (ரி)

# ரி-20 ஆட்டத்தில் இங்கிலாந்து வெற்றி தோல்வியை பொறுப்பேற்றார் டோனி



இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஒரேயொரு ரி- 20 ஆட்டத்தில் இங்கிலாந்து நிர்ணயித்த வெற்றி இலக்கைத் துரத்திய இந்தியா இறுதிவரை போராடித் தோல்வியடைந்தது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அணித் தலைவர் இயன் மோர்கனின் அதிரடியான துடுப்பாட்டம் கைகொடுக்க இங்கிலாந்து அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 180 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. அதிரடியாக ஆடிய மோர்கன் 31 பந்துகளில் 7சிக்ஸர்கள், 3 பவுண்டரிகள் அடங்கலாக 71 ஓட்டங்களையும், அலெக்ஸ் ஹேல்ஸ் 40 ஓட்டங்களையும் பெற்றனர். இந்தியாவின் மொகமட் சமி 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

181 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய இந்திய அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 177 ஓட்டங்களைப் பெற்று 3 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. இந்திய அணி சார்பாக கோஹ்லி 66 ஓட்டங்களையும், தவான் 33 ஓட்டங்களையும், டோனி ஆட்டமிழக்காமல் 27 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் பின், அலி, குர்னி, வோக்ஸ் தலா ஒவ்வொரு இலக்குகளைக் கைப்பற்றிக் கொண்டனர். ஆட்டநாயகனாக இங் கிலாந்து அணியின் இயன் மோர்கன் தெரிவானார்.

இந்த ஆட்டத்தின் இறுதி ஓவரில் வெற்றிக்கு 17 ஓட்டங்கள் தேவைப்பட்டிருந்த நிலையில் தன் மீது அதீத நம்பிக்கை கொண்ட டோனி, அந்த ஓவரில் ஓட்டங்களை ஓடிப் பெறும் வாய்ப்புகள் இருந்தும் அவற்றைப் பெற்றுக் கொள்ளவில்லை. இறுதியில் இந்திய அணி 3 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவிக்கொண்டது. இந்தத் தோல்வியைத் தொடர்ந்து டோனியின் இறுதி ஓவர் செயற்பாடு குறித்து பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளன.

ஆட்டத்தின் பின்னர் தோல்வி குறித்து டோனி தெரிவிக்கையில், முதல் பந்தில் சிக்ஸர் அடித்தேன். நெருக்கடி ஏற்பட்டது. இருப்பினும் 2 பந்துகளை நான் அடித்திருக்க வேண்டும். ஆனால் அடிக்கவில்லை. பந்தை சரியாக மட்டையில் வாங்காத ஒரு தினமாக நேற்று அமைந்தது. பந்து மட்டையின் கீழ்ப் பகுதியிலேயே பட்டது. ஆகவே தோல்விக்குப் பொறுப்பேற்றுக் கொள்வதுதான் சரி. ராயுடு அப்போதுதான் களமிறங்கியிருந்தார். 6ஆம் அல்லது 7ஆம் நிலையில் களமிறங்கி நேரடியாக பெரிய ஷொட்களை அடிப்பது அவருக்குக் கடினமாக இருந்திருக்கும். அவரும் பந்துகளை மட்டையின் நடுப்பகுதியில் அடிக்க முடியாமல் இருந்தார். அதனால்தான் நானே நின்று ஆட்டத்தை முடிக்க முடிவெடுத்தேன். அந்தச் சமயத்தில் அப்படித்தான் யோசித்தேன். ஆனால் வெற்றி பெற முடியாமல் போனது. அந்த ஓவரின் தொடக்கத்திலேயே நானே ஆட்டத்தை வெற்றிக்கு இட்டுச் செல்வது என்ற முடிவை எடுத்தேன். ராயுடுவும் [illegible] வெற்றியைச் சாதித்திருக்க முடியும். ஆனால் முடிவு நேர ஆட்டம் எனது பலம். அதனால் நானே [illegible]பேற்றுக் கொண்டேன் என்றார் டோனி. (ரி)

# கிளார்க்கை மன்னிக்க முடியாது காட்டத்தில் டேல் ஸ்ரெய்ன்

கேப்ரவுன் டெஸ்ட் ஆட்டத்தின் போது தன்னை நோக்கி ஆஸ்திரேலிய அணித்தலைவர் வசைச்சொல்லை ஏவியதை மறக்கப்போவதில்லை என்றும் இதற்காக மைக்கல் கிளார்க்கை ஒரு போதும் தான் மன்னிக்க மாட்டேன் என்றும் தென்னாபிரிக்க வேகப் புயல் டேல் ஸ்ரெய்ன் காட்டமாகக் கூறியுள்ளார். கிரிக்கெட் ஆட்டக்களத்தில் தன்னை மிகவும் காயப்படுத்திய வசைச்சொல் ஒன்று உண்டென்றால் அது அன்று மைக்கேல் கிளார்க் கூறியதே என்றும் ஸ்டெய்ன் கூறியுள்ளார். சிம்பாப்வேயில் நடைபெற்ற முத்தரப்புத் தொடரில் ஆஸ்திரேலிய அணியை தென்னாபிரிக்கா வீழ்த்தியது. இதில் ஆட்டநாயகனாகத் தெரிவான ஸ்ரெய்ன் தொடர்ந்து நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கடந்த மார்ச் மாதம் தென்னாபிரிக்காவின் கேப்ரவுன் நகரில் நடைபெ[illegible] மூன்றாவது ஆட்டத்தை தோல்வியிலிருந்து காப்பாற்ற டேல் ஸ்ரெய்ன் துடுப்பாட்டத்தில் போராடிக் கொண் டிருந்த போது.வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் பற்றின்சன் ஸ்ரெய்னை நோக்கி ஓரிரு வார்த்தைகளைப் பகிர்ந்து கொள்ள இடையில் புகுந்த கிளார்க் டேல் ஸ்ரெய்னை நோக்கி வசைச் சொல்லைக் கூறியுள்ளார். ஆனால் கிளார்க் என்ன கூறினார் என்று இன்று வரை தெரிய வில்லை என்றும் இதற்காக அவர் உடனடியாகவே மன்னிப்புக் கேட்டி ருந்தாலும் அவரது மன்னிப்பில் உண்மை இருந்ததாகத் தான் கருத வில்லை என்று ஸ்ரெய்ன் இப் போது கூறியுள்ளார்.

இது குறித்து ஸ்ரெய்ன் கூறியதாவது : நான் பல விடயங்களை தனிப்பட்ட ரீதியில் எடுத்துக் கொள்வதில்லை. ஆனால் அன்று கிளார்க் கூறியதை மிகவும் தனிப்பட்ட விடயமாகவே எடுத்துக் கொண்டேன். இப்போதும் அப்படித் தான் கருதுகிறேன். அவர் ஊடகத்தில் தனது நடத்தைக்காக மன்னிப்பு கேட்டார் என்று எனக்குத் தெரியும். ஆனால் அதன் நேர்மை மீது எனக்கு சந்தேகம் இருக்கிறது. ஆனால் அவர் என் கையைக் குலுக்கி தனது மன்னிப்பு உண்மையானதே என்று கூறி, அவர் எப்படி நடந்து கொள்ள வேண்டு மோ அப்படி நடந்து கொண்டால் நான் அவரை மன்னிப்பது பற்றி யோசிப்பேன். இப்போதைக்கு அவர் இங்கு இல்லை. ஆகவே நான் ஆஸ்திரேலியா செல்லும் வரை காத்திருப்பேன் என்று கூறினார்.

சிம்பாப்வேயில் நடைபெற்ற முத்தரப்பு ஒருநாள் போட்டிகளின் போது, மைக்கல் கிளார்க் இந்தச் சம்பவம் பற்றி கூறும்போது, நான் அப்போது கேட்ட மன்னிப்பு நல்ல முறையில் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவே நினைத்தேன். டேல் ஸ்ரெய்ன் மீது எனக்கு நிறைய மரியாதை இருக்கிறது. இந்நிலையில் அந்த அணியினர் எங்கள் வீரர் களிடத்தில் பேச விரும்பவில்லை என்றாலும் அதனால் யாரும் கவலைப்படப் போவது மில்லை என்று மைக்கல் கிளார்க் கூறியிருந்தார். (ரி)





# சென்னைக்கு ரொனால்டினோ இல்லை

இந்தியன் சுப்பர் லீக் தொடரில் தங்கள் அணிக்கு ரொனால்டினோவை சேர்த்துக் கொள்ள சென்னை அணி மேற்கொண்டுவந்த முயற்சிகள் தோல்வியில் முடிந்துள்ளன.

அகில இந்திய உதைபந்துக் கூட்டமைப்பு சார்பில் இந்தியன் சுப்பர் லீக் தொடர் எதிர்வரும் ஒக்டோபர் 12இல் ஆரம்பிக்கிறது. ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரைத் தழுவிய இத்தொடரில் 8 அணிகள் கலந்து கொள்கின்றன. இந்த தொடரில் இந்தியா தவிர வெளிநாட்டு வீரர்களும் பங்கேற்கவுள்ளதால் ஒவ்வொரு அணியும் போட்டி போட்டுக் கொண்டு முன்னணி வீரர்களை ஒப்பந்தம் செய்து வருகின்றன்.

நடிகர் அபிஷேக்பச்சனுக்கு சொந்தமான சென்னை டைட்டன்ஸ் அணி, பிரேஸிலின் ரொனால்டினோவை தமது அணிக்கு வாங்குவதில் ஆர்வம் காட்டி வந்தனர். இவருக்கு வாரத்திற்கு 75 இலட்சம் ரூபா வீதம், 4 மாத காலத்துக்கு 12 கோடி ரூபா கொடுக்க முன்வந்ததாக கூறப்படுகிறது.

உலகின் நட்சத்திர வீரர்களான ஆர்ஜென்ரினாவின் மெஸ்சி, பிரேஸிலின் நெய்மர், சுவீடனின் இப்ராகிமோவிச், கொலம்பியாவின் பால்கோ போன்றவர்கள் தங்களது கழகங்கள் சார்பில் வாரத்திற்கு 2.25 கோடி முதல் 2.85 கோடி ரூபா வரை சம்பளமாகப் பெறுகின்றனர். இதனால், சென்னை அணி பேசிய தொகை ரொனால்டினோவிற்கு போதுமானதாக இல்லை எனத் [illegible] அணிக்காக இரண்டு ஆண்டுகளுக்கு பெரும் [illegible] தொகைக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். ரொனால்டினோவை அணியில் இணைத்துக்கொள்ள முடியாமல் போயுள்ள நிலையில் இத்தாலியின் மாட்டராசி, பாபியோ கானவரோ, பிரான்சின் நிகோலஸ் அனல்கா, ஸ்பெயினின் ரால் கன் சாலஸ் போன்ற பிரபல வீரர்களை ஒப்பந்தம் செய்யும் முயற்சியில் சென்னை அணியின் நிர்வாகிகள் தீவிரமாக இறங்கியுள்ளனர். (ரி)

# ரி- 20 அணித்தலைவராக பிஞ்ச்

ஆஸ்திரேலிய ரி- 20 அணியின் தலை மைப் பதவியில் இருந்து ஜோர்ஜ் பெய்லி பதவி விலகியதையடுத்து. அணித்தலைவர் பொறுப்பிற்கு ஆரோன் பிஞ்ச் நியமிக்கப் பட்டுள்ளார்.


டெஸ்ட் ஆட்டங்களில் தீவிர கவனம் செலுத்த உள்ளதால் ரி-20 அணித்தலைவர் பதவியிலிருந்து விலகுவதாக ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபைக்கு பெய்லி கடிதம் எழுதியிருந்தார். அவரது பதவி விலகல் கடிதத்தை ஏற்ற கிரிக்கெட் சபை, விரைவில் புதிய அணித்தலைவர் ஒருவரை நியமிப்பதாகத் தெரிவித்திருந்தது. இந்த நிலையில் ரி-20 கிரிக்கெட் ஆட்டங்களுக்கான புதிய அணித் தலைவராக ஆரோன் பிஞ்ச் நியமிக்கப் பட்டுள்ளார். இது குறித்து கருத்து தெரிவித் துள்ள பெய்லி, பிஞ்ச் அணித்தலைவர் பொறுப் பில் சிறப்பான முறையில் செயற்படும் தகுதி யுடையவர் என்றார்.

அணித்தலைவராகத் தெரிவான பிஞ்ச் கூறுகையில், தங்கள் நாட்டு அணிக்கு அணித் தலைவர் பொறுப்பு ஏற்கவேண்டும் என்று ஒவ்வொரு இளம் வீரரும் கனவு காண்பது இயல்பு. அந்த கனவு என்னைப் பொறுத்த வரையில் நனவாகி உள்ளது. கிரிக்கெட் சபையிடமிருந்து வந்த தொலைபேசி அழைப் பில் என்னை அணித்தலைவராக நியமித் திருப்பதாக கூறியபோது ஆச்சரியத்தில் மூழ் கினேன் என்று அவர் கூறினார். (ரி)

**விற்பனைக்கு**

புடைவைக் கடை பாவனைக்கு உகந்த நல்ல நிலையில் உள்ள புதிய சோகேஸ் -04 (4அடி X 5அடி) வெள்ளை நிறம் புதிய ராக்கை -03 (10அடி X 8அடி) வெள்ளை நிறம் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ள வேண்டிய இலக்கம்.

**Mob: 077 946 2050** (52061) (10)



# கிடைத்தது விசா மகிழ்ச்சியில் ஹபீஸ்

இந்தியாவில் நடைபெறவுள்ள சம்பியன்ஸ் லீக் 20 ஓவர் கிரிக்கெட் தொடரில் பங்கேற்க பாகிஸ்தானின் லாகூர் லயன்ஸ் அணி வீரர்களுக்கு விசா வழங்கப்பட்டது. இதனையடுத்து அந்த அணியின் தலைவர் மொகமட் ஹபீஸ் தனது மகிழ்ச்சியை வெளியிட்டுள்ளார். லாகூர் லயன்ஸ் அணியில் பாகிஸ்தான் அணி வீரர்களான உமர் அக்மல், அகமட் செஷாட், வகாப் ரியாஷ், நசீர் ஜாம்ஷெட் ஆகியோர் உள்ளனர்.

விசா கிடைத்தது பற்றிய மகிழ்ச்சியைத் தெரிவித்த மொகமட் ஹபீஸ் கூறுகையில், நாங்கள் நேசம் என்ற செய்தியுடன் இந்தியா செல்கிறோம். பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்களை அங்கு எவ்வளவு நேசிக்கிறார்கள் என்பதை நான் நன்றாக அறிவேன். பாகிஸ்தான் நாட்டின் தூதர்களாக நாங்கள் அங்கு செல்லவிருக்கிறோம். களத்தில் நல்ல கிரிக்கெட்டை ஆடுவது மட்டும் எங்கள் குறிக்கோள் அல்ல, களத்திற்கு வெளியேயும் சில நல்ல காரியங்களைச் செய்வோம். இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இருநாட்டிலும் கிரிக்கெட்டைப் போற்றுகின்றனர். எனவே நாங்கள் இந்தியாவில் சிறப்பாகச் செயல்படுவோம் என்று உறுதியாகக் கூறுகிறேன். எங்கள் அணி சிறிது காலமாக 20 ஓவர் கிரிக்கெட்டில் உற்சாகமாக ஆடி வருகின்றனர். தைரியமான பல வீரர்கள் அணியில் உள்ளனர். எனவே சம்பியன்ஸ் லீக்கின் சிறந்த அணிக்கு நிகராக எங்களால் செயற்பட முடியும் என்று நம்பிக்கை உள்ளது என்று கூறினார்.

சம்பியன் லீக் தொடரின் தகுதிச் சுற்றுப் போட்டிகள் முடிந்து பிரதான சுற்றுப் போட்டிகள் செப்டம்பர் 17ஆம் திகதி தொடங்குகிறது. செப்டம்பர் 13ஆம் திகதி தகுதிச் சுற்றுப் போட்டிகள் ராய்பூரில் தொடங்குகின்றன. (ரி)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 07.05.1954

மறைவு 11.08.2014



கடந்த 11.08.2014 திங்கட்கிழமை
சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

**அமரர் தில்லைநாதன் மங்கையர்க்கரசி**

அன்னாரின் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் நாளை (10.09.2014) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின் றோம்.

மேலும் எங்கள் அன்புத் தெய்வத்தின் மரணச் செய்திகேட்டு [illegible] ஓடோடி வந்தும், தொலைபேசி மூலம் ஆறுதல் [illegible] கூறியும், தேவையான உதவிகள் புரிந்தும், இறுதிக்கிரியைகளில் [illegible] கலந்துகொண்ட அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் [illegible] தெரிவித்துக் கொள்கின்றோம்.

764, K.K.S. Road,
தட்டாதெரு, யாழ்ப்பாணம்.

# டுர்காம் அணியில் ஆரோன்



இங்கிலாந்தில் தற்போது நடைபெற்றுவரும் கவுன்டி தொடரில் டுர்காம் அணியில் இணைந்தார் இந்திய வேகப்பந்து வீச்சாளர் வருண் ஆரோன்.

இந்திய அணியின் இளம் வேகப் பந்து வீச்சாளரான வருண் ஆரோன் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில், சராசரியாக 140 கி.மீ.க்கும் அதிகமான வேகத்தில் தொடர்ச்சியாக பந்து வீசி அசத்தினார். அத்துடன், இங்கிலாந்து கவுன்டி அணிகளில் விளையாடவேண்டும் என்ற தனது விருப்பத்தையும் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், தற்போது டுர்காம் கவுன்டி அணியில் ஒப்பந்தம் [illegible] ஆகியுள்ளார். இதுகுறித்து அணி நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், வரும் சம்பியன்ஸ் லீக் ரி- 20 தொடரில், சென்னை அணியில் பங்கேற்பதற்காக ஜான் ஹேஸ்டிங்ஸ் அணியிலிருந்து தற்காலிகமாக விலகுகிறார். இவரது இடத்தில், நார்த்தாம்ப்டன்ஷயர், வார்விக்சயர் அணிகளுக்கு எதிரான ஆட்டங்களில் வருண் ஆரோன் விளையாட உள்ளது மகிழ்ச்சி, என தெரிவித்துள்ளது. இது குறித்து வருண் ஆரோன் கூறுகையில், அடுத்த தொடரில். இங்கிலாந்தில் [illegible] விளையாட விரும்பினேன் [illegible] கவுண்டி கிரிக்கெட்டில் [illegible] பெருமையானது. இந்த வாய்ப்பு விரைவில் கிடைத்தது மகிழ்ச்சி. டுர்காம் அணிக்காக விளையாடுவது எனக்குப் பெருமை தான் என்றார்.

## 'டெங்கு அற்ற இலங்கை' ஓவியப்போட்டிக்கு பரிசுகள்

வெல்லாவெளி, செப். 9
மட்டக்களப்பு - மகிழடித்தீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் ஏற்பாட்டில் 'டெங்கு அற்ற இலங்கை' என்ற தொனிப்பொருளில் பாடசாலை மாணவர்கள் மத்தியில் நடத்தப்பட்ட ஓவியப்போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த ஓவியங்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு வியாழக்கிழமை மகிழடித்தீவு வைத்திய சுகாதார அதிகாரி அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மகிழடித்தீவு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் இ.ஸ்ரீநாத் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மண்முனை தென்மேற்கு கோட்டக்கல்விப் பணிப்பாளர் ந.தயாசீலன், மற்றும் பிரதேச பாடசாலைகளின் அதிபர்கள், உக்டா நிறுவன தலைவர், வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து சிறப்பித்தனர்.

மண்முனை தென்மேற்கு கோட்டத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் இடையே நடத்தப்பட்ட இந்த ஓவியப் போட்டியில் மிகச்சிறந்த 10 ஓவியங்கள் தெரிவு செய்யப்பட்டுபரிசில்கள்வழங்கப்பட்டமை குறிப்பிடத் தக்கதாகும். (ஓ-10)




சம்மாந்துறை கல்வி வலயத்துக்குட்பட்ட கணேசா வித்தியாலய மாணவர்களுக்கு பாதணி வழங்கலும் சுற்றாடல் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சின்னம் சூட்டல் நிகழ்வும் அதிபர் பொ.பாரதிதாசன் தலைமையில் அண்மையில் வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் அதிதிகளாக சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.எஸ்.நஜீம் மற்றும் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான உமர் மௌலானா, அமீன், எஸ். புவனேந்திரன், வேள்ட் விஷன் நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் ஆர்.சதீஸ் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செல்வநாதன்,அம்பாறை மாவட்ட சுற்றாடல் அதிகாரசபை ஆணையாளர் அறுஸ்கான் வேப்பையடி படைமுகாம் பொறுப்பதிகாரி மற்றும் பாடசாலைக்கு உதவிகள் வழங்கிய பலரும் கலந்துகொண்டனர். (ஓ-10)

### மதுக்களஞ்சியத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு, செப். 9
மட்டக்களப்பு திருப்பெருந்துறையில் கட்டப்பட்டுள்ள மதுபானக் களஞ்சியசாலைக்கு எதிராக ஆர்ப்பாட்டமொன்ற மேற்கொள்ளப்பட்டுள்ளது.
திருப்பெருந்துறையில் வசிக்கும் பொதுமக்களே வெள்ளிக்கிழமை மாலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
குறித்த இடத்தில் மதுபான சாலை அமைக்கப்பட்டதை விரும்பாத மக்கள் அந்த வளாகத்தினுள் மதுபானங்களுடன் [illegible] லொறிகளை வெளியேற்றக் கோரியே குரல் எழுப்பினர்.
இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு பொலிஸார் வந்து குறித்த லொறிகளையும் அனுமதிப் பத்திரத்தையும் பரிசோதனை செய்தனர். பின்னர் மதுபானங்களுடன் இருந்த லொறியை களஞ்சியத்தை விட்டு வெளியே அனுப்பியதையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர். (ஓ-10)


## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தில் பணிபுரியும் பாலவேந்தன்
அவர்களின் அன்புத் தந்தை
**முருகேசு சபாம்பிள்ளை**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

106,
ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

உரிமையாளரும், ஊழியர்களும்.
அருள் விநாயகர் ரேடர்ஸ்
(சி/16559)(4.3.6)


## தலைமைத்துவப் பயிற்சியை நிறைவு செய்தோர் கௌரவிப்பு

சம்மாந்துறை, செப். 9
சம்மாந்துறை வலய பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் தலைமைத்துவ ஆற்றலை வளர்க்கும் நோக்கில் நடத்தப்பட்ட தலைமைத்துவப் பயிற்சியை நிறைவு செய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு சம்மாந்துறை தாருஸ்ஸலாம் வித்தியாலய மண்டபத்தில் சனிக்கிழமை நடைபெற்றது.
சமாதான கற்கை நெறிகள் பணியகத்தின் ஏற்பாட்டில் ஸ்ரீலங்கா முஸ்லிம் இளைஞர் சம்மேளனத்தின் அனுசரணையில் இந்தத் தலைமைத்துவ பயிற்சி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.
சமாதானகற்கைநெறிகள்பணியகத்தின் தலைவர் கலா நிதி எஸ்.எல்.றியாஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சவூதி தூதுவராலய வெகுசன தொடர்பு அதிகாரியும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீட உறுப்பினருமான ஐ.எல்.எம். மாஹிர், சம்மாந்துறை வலயக் கல்வி பணிப்பாளர் எம்.எஸ். எஸ்.நஜீம், முஸ்லிம் இளைஞர் சம்மேளனத்தின் செயலாளர் வை.பீ.சலீம், சம்மாந்துறை பிர தேச செயலக தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர் சீ.திருக் குமார், தாருஸ்ஸலாம் வித்தியாலய அதிபர் ஏ.சீ. ஏ.எம்.இஸ் மாயில், மாணவர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.
இதன்போது பாடசாலை மாணவர்களுக்கான தலை மைத்துவ வழிகாட்டி எனும் நூல் ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது.



நூலின் முதல் பிரதியை சவூதி தூதுவராலய வெகுசன தொடர்பு அதிகாரியும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீட உறுப்பினருமான ஐ.எல்.எம். மாஹிர் கலாநிதி எஸ்.எல்.றியாஸிடமிருந்து பெற்றுக் கொண் டார். (ஓ-10)


### திருமலை விபத்தில் பெண் சாவு

திருகோணமலை -ஹொரவப்பொத்தான பகுதியில் ஓட்டோ ஒன்று மின் கம்பத்துடன் மோதுண்டதில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.
உயிரிழந்தவர் அத்தாபெந்திவெவ- றொட்டவெவ பகுதியைச் சேர்ந்த ஜி.நிமாலி ரன்தெனிய (வயது-36) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.
சம்பவம் குறித்து தெரிய வருவதாவது:-
ஹொரவப்பொத்தான பகுதியிலிருந்து கணவர் -மனைவி மற்றும் இரண்டு வயது குழந்தையும் ஓட்டோவில் வந்து கொண்டிருந்த வேளை பள்ளமான பகுதியில் ஓட்டோவின் பிரேக் பிடிபடாததால் மின் கம்பத்துடன் மோதுண்டது.
படுகாயமடைந்த மூவரும் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைக்கப்பட்டனர். காயமுற்ற பெண்ணுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை பயனளிக்காத நிலையில் அவர் உயிரிழந்துள்ளார். (ஓ-10)


## மரண அறிவித்தல்

### முருகேசு சபாம்பிள்ளை

(முன்னாள் களஞ்சியப் பொறுப்பாளர் - இலங்கை போக்குவரத்து சபை )



சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சபாம்பிள்ளை நேற்று (08.09.2014) திங்கட்கிழமை காலமானார்.
அன்னார் பாலமணியின் அன்புக் கணவரும், பாலகௌரி (யாழ்/ இந்து மகளிர் கல்லூரி), பாலவேந்தன் (கரன் - அருள் விநாயகர் ரேடர்ஸ் - ஊழியர்), பாலமனோகரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், டினேஸின் (Civil Engineer) பாசமிகு மாமனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.09.2014) செவ்வாய்க்கிழமை [illegible] 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சீரணிச் சந்தி,
சண்டிலிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 207 1762



## விற்பனைக்கு

26 ஸ்ரீ -XXXX இலக்கமுடைய Water Bowser விற்பனைக்குண்டு.
தொ.பே: 077 595 7133
(51847)(4.6.3)

## வேலையாட்கள் தேவை

மானிப்பாயில் அமைந்துள்ள எமது நிறுவனத்துக்கு
* கடன் சேகரிப்பாளர் (Cash Collecter)
* வர்ணம் பூசுபவர் (Painting)
* ...ப்பொருள் விற்பனையாளர் (... Salesman)
* கட்டடப் பொருள் உற்பத்தி மற்றும் மேற்பார்வை செய்யக்கூடியவர்கள்

தேவை.
தொடர்பு: 077 210 5286, 077 704 6614



## மரண அறிவித்தல்

### வைரவி மார்க்கண்டு (மாங்காய்)

(பழைய பாட்ஸ் கடை உரிமையாளர்)



சுதுமலை, ஈஞ்சடி வைரவர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் 2ஆம் ஒழுங்கை பலாலி றோட், யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட வைரவி மார்க்கண்டு நேற்று (08.09.2014) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்ற கனகம்மாவின் அன்புக்கணவரும், மகேஸ்வரி, பூவதி, [illegible] நாகராஜா, புவனேஸ்வரி, பேபி கமலா, வசந்தா, சறோஜினிதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், வீரசிங்கம், காலஞ்சென்ற அழகுராசா மற்றும் இரத்தினேஸ்வரி காலஞ்சென்ற குணசேகரம் மற்றும் வீரசிங்கம், இராஜேஸ்வரன், நாகராசா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.09.2014) செவ்வாய்க்கிழமை அவரது மகனின் இல்லத்தில் நடைபெற்று, மு.ப. 10 மணிக்கு தகனக்கிரியைக்காக பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச்சு றோட்,
விளையாட்டு வீதி,
கட்டப்பிராய். 077 071 0764

தகவல்:
[illegible] நாகராஜா
[illegible]
(51848)(6.4.3)

# உதயன் பரிசுப் போட்டியில் வென்றோர் விவரம்

யாழ்ப்பாணம், செப். 9

செல்வச்சந்நிதி ஆலயத்தின் வருடாந்த திருவிழாவை முன்னிட்டு உதயன் பத்திரிகை நிறுவனம் நடத்திய பரிசு குலுக்கல் நிகழ்வில் பரிசு பெற்றோர் விவரம்:-

08.09.2014, மு.ப. 10.00 மணி மா. சின்னத்தங்கம், வியாபாரி மூலை பருத்தித்துறை, ஆர். ஜனார்த்தனன், திக்கனை கரணவாய், எஸ் பரமேஸ்வரி, பாரதி வீதி, கம்பர்மலை, செ.சானுயா, காளிகோவில் நெல்லியடி, கோ. செல்வமோகன், 112/1, 10 ஆவது ஒழுங்கை கொழும்பு-3.

மு.ப. 11.00 மணி ஜெ. சாந்தினி, 28, கலைமகள் வீதி சுதுமலை மேற்கு சுதுமலை, கு.கோபிகா, தாவளை இயற்றாலை வரணி, செ. சிவலிங்கம், இல. 02, 05 வீட்டுத்திட்டம் கிளிநொச்சி, எஸ். சிங்கராஜா, மட்டுவில் மத்தி சாவகச்சேரி,

நண்பகல் 12.00 மணி சு.சுவேந்திரன் 5901/12 யூனிட் தருமபுரம், இ. நீதிராஜ், மீசாலை கிழக்கு, மீசாலை, தெ.ரமேஸ், இல.192 கலாசாலை வீதி திருநெல்வேலி, ந.நதீஸ்குமார், மல்வம் உடுவில், சுன்னாகம்,

பி.ப. 2.00 மணி அ. அருண்ராஜ், கரவெட்டி மேற்கு, கரவெட்டி, பி.பாலகுமார், ஏழாலை மேற்கு, ஏழாலை, த.நாகறஞ்சினி, அராலி மத்தி வட்டுக்கோட்டை, அ.கயானன், விக்னேஸ்வரா வீதி, கரவெட்டி

பி.ப. 3.00 மணி ஆர். கிருபாகரன், கரவெட்டி மேற்கு கரவெட்டி, கு. இரகுராம், கரணவாய் தெற்கு, கரணவாய், கே.ராகவேந்திரன், சந்நிதி கிழக்கு வீதி தொண்டைமானாறு, சி.நித்திலன், குயவன்புலம், சமரபாகு வல்வெட்டித்துறை.

பரிசில்கள் இன்று செல்வச் சந்நிதி ஆலயத்தில் அமைக் கப்பட்டுள்ள உதயன் தற்காலிக பணிய கத்தில் காலை 11 மணி முதல் வழங்கப்படும்.

## சுப்ரமணியசுவாமி மீது ஜெயலலிதா வழக்கு

### இந்திய மீனவர் கைது விடயத்தில்

பாரதீய ஜனதா கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான சுப்ரமணிய சுவாமிக்கு எதிராக தமிழக முதல்வர் ஜெயலலிதா ஜெயராம் அவதூறு வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

இலங்கை அரசால் தொடர்ச்சியாக இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுவது தொடர்பில் சுப்ரமணிய சுவாமி அண் மையில் தெரிவித்த கருத்துக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. நேற்று இந்த வழக்கு தாக்கல் செய் யப்பட் டுள்ளது. (ற)

## கண்ணீர் அஞ்சலி



புங்குடுதீவு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட

**தில்லையம்பலம் பாலசிங்கம்**

**(ஓய்வு பெற்ற கிராம சேவையாளர்)**

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத் தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப் பதோடு ஈடுசெய்ய முடியாத துயரத்தில் இணைந்து கொள்கின்றோம்.

த.தவராசா குடும்பம்
த.சங்கரராசா குடும்பம்
ஏ.தியகராசா குடும்பம்
சு.துரைசிங்கம் குடும்பம்

புங்குடுதீவு (52051)

## வருடாந்த உற்சவம் - 2014 கலந்துரையாடல்

சரித்திர பிரசித்தி பெற்ற நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் 2014 எதிர்வரும் 03.10.2014 ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு தினங்கள் நடைபெற திருவருள் கைகூடியுள்ளது என்பதை அறியத் தருவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.


இவ் விடயம் தொடர்பான கலந்துரையாடல் பிரதேச செய லர்-வடமராட்சி கிழக்கு அவர்கள் தலைமையில் மேற்படி ஆலய முன்றலில் எதிர்வரும் 21.09.2014 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் நடைபெறவுள்ளது. எனவே திருவிழா உபயகாரர்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு எம் பெருமானுடைய வருடாந்த அலங்கார உற்சவம் சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**பரம்பரை தர்மகர்த்தா/தலைவர்,**
**நாகர்கோயில் பூர்வீகநாகதம்பிரான்**
**ஆலய பரிபாலன சபை.**

(52053) (10)

## மரண அறிவித்தல்

### சூசைப்பிள்ளை யோசேப் இரத்தினம்



பலாலி தெற்கு, வயாவிளானைப் பிறப்பிடமாகவும், மாட்டின் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட யோசேப் இரத்தினம் நேற்று (08.09.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சூசைப்பிள்ளை-ஞானம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செபமாலை-நேசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயசீலியின் (ஜெயராணி) அன்புக் கணவரும், காலஞ்சென்ற விஜிதா மற்றும் பற்றீசியா (ஆசிரியை- யா/வைத்தீஸ்வரா கல்லூரி), சதீஸ் (உரிமையாளர்- யாழ். எலக்ரோனிக் வொச் வேர்க்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தேவா, உஷா ஆகியோரின் அன்பு மாமனும், அல்வினஸ், மாசில்லாமணியம், மேரி மெக்டலின், மேரி நவநேசம், மேரி யோகம், மேரி புஸ்பம், பிறேமதாஸ் ஆகியோரின் அன்பு சகோதரனும், அமுதா, அனுஷா, அனுராஜ், யுவராஜ் ஆகியோரின் பெரிய தந்தையும், துஷாறா, நிஷாரா, உதேய் நிஷான், ஜெருஷன், ஜெருசிகா, அஸ்வின் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (09.09.2014) செவ்வாய் கிழமை மாலை 2 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு யாழ். புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 18, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம்.** (52052) (10) **தகவல்: சதீஸ் (மகன்) 021 561 8114**

## தொடர்ச்சிகள்

### கட்டுப்பாட்டை

நசுங்கிச் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். பலர் காயங்களுடன் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். புத்தூர் மட்டுவில் வீதி வழியாக பயணித்த குறித்த பஸ் வீரவாணி வளைவில் கட்டுப்பாட்டை இழந்து தடம்புரண்டுள்ளது. நேற்றிரவு 8 மணியளவில் இந்த விபத்து நடந்துள்ளது. உயிரிழந்தவர் மானிப்பாய் கட்டுடையைச் சேர்ந்த என்.சதீஸ்குமார் (வயது-24) என்பவரே உயிரிழந்தவராவார். வவுனியா ரெலிக்கொமில் பணிபுரிபவர் ஆவார். இவர் விடுமுறையில் வீடு வந்து, திரும்பும்போதே இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

வழித்தட அனுமதிப் பத்திரங்கள் இல்லாத பஸ்கள் சேவையில் ஈடுபட முடியாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதையடுத்துக் கடந்த சில நாள்களாக வழித்தட அனுமதி அற்ற பஸ்கள் யாழ்.-கொழும்பு பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடவில்லை. இந்தநிலையில் நேற்று விபத்துக்குள்ளான குறித்த பஸ்ஸுக்கும் வழித்தட அனுமதிப் பத்திரம் இல்லை என்று கூறப்படுகின்றது. அதனாலேயே ஏ-9 வீதி வழியாகச் செல்லாது பயணிகளை ஏற்றிக் கொண்டு புத்தூர் வீதியூடாகக் குறித்த பஸ் பயணித்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

பஸ் அதிக வேகத்துடன் பயணித்ததால், வண்ணாத்திப்பாலத்துக்கு அருகில் உள்ள வளைவில் திருப்ப முற்படும் போது முன்னால் உள்ள மின் கம்பத்துடன் மோதி அருகில் உள்ள பள்ளத்தில் வீழ்ந்து தடம்புரண்டுள்ளது. பின்னர் இராணுவத்தினரின் உதவியுடன் பஸ் தூக்கப்பட்டு, உயிரிழந்தவரின் சடலம் மீட்கப்பட்டது. உயிரிழந்தவர் மிதிபலகையில் நின்று பயணித்தமையாலேயே உயிரிழக்க நேரிட்டது என்று சக பயணிகள் கூறுகின்றனர்.

உயிரிழந்தவரின் உடல் தற்போது அச்சுவேலி பிரதேச மருத்துவனையில் வைக்கப்பட்டுள்ளது.

காயமடைந்தவர்கள் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையிலும், சாவகச்சேரி வைத்தியசாலையிலும், யாழ்.போதனா வைத்திய சாலையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர். குறித்த பஸ்ஸில் 40க்கும் அதிகமானவர்கள் பயணித்தனர் என்றும், அவர்களில் அநேகர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்ட போதும், சரியான எண்ணிக்கையை உறுதிப்படுத்த முடியவில்லை. (ற-4.11.9)

### ஐ.நாவின்

யாளர் நவநீதம்பிள்ளையின் பணிகளை நாம் நன்றியுடன் நினைவு கூருகின்றோம். குறிப்பாக இலங்கையில் அர்த்தமுள்ள பொறுப்புக்கூறலை ஊக்குவிப்பதற்கும், மனித உரிமைகளுக்கு மதிப்பளிப்பதை ஊக்குவிப்பதற்கும் அவர் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு நன்றியைக் கூறுகின்றோம்.

அத்துடன் இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பிலான, ஐ.நா மனித உரிமைகள் ஆணையகத்தின் விசாரணைக்கு இலங்கை ஒத்துழைக்க வேண்டும்"- என்று குறிப்பிட்டார். பின்னர் உரையாற்றிய பிரிட்டன் தூதுவரும் இவ்வாறான கருத்தையே வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் நடைபெற்ற இறுதிப் போரில் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர் பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணை யாளர் அலுவலகம் விசாரணைகளை நடத்தி வருகிறது. அந்த விசாரணைக ளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு இலங்கை அரசு தொடர்ச்சியாக மறுத்து வருகிறது. இந்த நிலையிலேயே பிரிட்டன் மற்றும் அமெரிக்கா மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளது.

**விற்பனைக்கு**

எயார் கொம்பிரசர் (Air Compresure), பலசரக்கு கடைக்குரிய தளபாடங்கள் (Fridge, Defreezer, றாக்கைகள், கண்ணாடி அலுமாரிகள்), Communication தளபாடங்கள் என்பன விற்பனைக்கு உண்டு (52059) (10)

தொடர்பு: 077 967 8733

**வீடு விற்பனைக்கு**

கோப்பாய் தெற்கு பழைய வீதி வீரபத்திரர் கோயிலடியில் புதிதாக கட்டப்பட்ட வீடு உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0779670436, 0779291600 (52057)

**வேலை வாய்ப்பு வெற்றிடம்**

யாழில் உள்ள பிரபல பல்தேசிய தொலைத் தொடர்பு கம்பனிக்கு உடனடியாக Sim விற்பனை பிரதிநிதிகள் தேவை.

மாதாந்தம் 50000/= ற்கு மேற்பட்ட வருமானம் பெறலாம். (ஆண், பெண் இருபாலாரும்)

தொடர்புகட்கு: 62/33 Old Post Office Road, Stanly Road, Jaffna. 078 500 2562 (52056)

**நோயாளர் நலன்புரி சங்கம்**
**ஆதார வைத்தியசாலை - தெல்லிப்பழை**

## பணிநிலை வேண்டுகை

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரி சங்கம் நோயாளர்களைப் பராமரிக்கும் தொண்டர்கள் ஆண்/பெண் இருபாலாரிடமிருந்தும் பணிநிலை வேண்டுகைகளைக் கோரியுள்ளது.

விண்ணப்ப முடிவு திகதி : 20.09.2014

விண்ணப்பப்படிவத்தை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் 100ரூபா செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

T.P:077 900 5856

லயன் சி.ஹரிகரன்
செயலாளர்

(52054)



**மதுரா அழகுக்கலைப் பயிற்சி நிலையம்**
(கோப்பாய் நாவலர் பாடசாலை அருகில்)

பதிவுகள் ஆரம்பம் 10.10.2014

பயிற்சியில் இணைய விரும்புவோர் உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்

அழகுகலை டிப்ளோமா பயிற்சி பேசியல் 20, சாறி டிரெஸ்ஸிங் 10, மேக்கப் 06, ஹெயர் டிரெஸ்ஸிங் 20, ஸ்ரைலிங் 20, ஹெயர் செற்றிங் 4, பெடிக்கியூர், மெனிக்கியூர், நெயில் ஆட், மெஹந்தி, பிம்பிள் ட்றிட்மென்ட், வகலிங், திரெட்டிங், பிறைடல் டிரெஸ்ஸிங் 4.

பயிற்சிக் கட்டணம் 8000.00
புரொபஷனல் கோர்ஸ் 20000.00
பயிற்சி முடிவில் சான்றிதழ் கொடுக்கப்படும்.

சாறி வேர்க், கேக் ஐசிங், தையல், பிறாண்ட் வேர்க், ஆகிய பயிற்சிகளும் நடைபெறுகின்றன.

ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும் பதிவுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன (52056)(10)

தொடர்பு: 077 9362642 பழைய வீதி, கோப்பாய். மகளிர் மட்டும்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி
**சுஜிதா சுந்தரலிங்கம்**
(இல. 07, கென்ஸ்மன் வீதி, சாவகச்சேரி)

Best Wishes

கடந்த 28.08.2014 பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற மொரட்டுவப்பல்கலைக்கழக 35 ஆவது பட்டமளிப்பு விழாவில் B.Sc Engineering (T.M) Hons பட்டத்தைப் பெற்ற சுஜிதா அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். வாழ்த்துவோர்: நடராசா குடும்பம்.

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு advt@uthayan.com 0215671111

## தொடர்ச்சிகள்

### புதிய

உரிமைகள் சபையின் முன்னைய ஆணையாளரின் செயற்பாடு அப்பட்டமாகவே நியாயமற்றது என்பதை கூறிவந்தோம். புதிய ஆணையாளர் அப்படியிருக்க மாட்டார் என்று நம்புகின்றோம்."- என்று அமைச்சர் பதிலளித்தார்.

ஐ.நா. விசாரணைக்கு இலங்கை ஒத்துழைக்காது என்ற நிலைப்பாட்டில்தான் தொடர்ந்தும் இருக்கின்றதா என்று அமைச்சரிடம் வினவப்பட்டபோது, "அதைப் பற்றி பொறுத்திருந்துதான் சொல்ல முடியும். அவசரப்பட்டு இப்போது எதுவும் சொல்ல முடியாது. முன்னைய ஆணையாளர் இலங்கை வந்து வெளியிட்ட கருத்துக்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவை. புதிய ஆணையாளருடன் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்ட பின்னர்தான் எதனையும் சொல்ல முடியும்."- என்று தெரிவித்துள்ளார்.

சிறுபான்மை மதங்கள் மீதான தாக்குதல் தொடர்பிலும், புதிய மனித உரிமைகள் ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளாரே என்று அவரிடம் கேட்கப்பட்டபோது, "அவருக்கு தவறான விடயங்கள் போய்ச் சேர்ந்திருக்கின்றன. இரண்டு மதக் குழுக்களுக்கு இடையில் சண்டை நடந்திருப்பது என்னமோ உண்மைதான். அந்த விடயங்களிலும் இரண்டு தரப்புக் கதைகள் இருக்கின்றது என்பதை மறக்கக் கூடாது"- என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-5)

### நாளாந்தம்

வடமாகாணத்தில் நுகர்வோர் பெரிதும் கொள்வனவு செய்யாத நிலையில் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் நாட்டரிசியில் அதிகம் ஆர்வம் காட்டியுள்ளதால் 85 ரூபாவில் இருந்து 100 ரூபா வரை அரிசிவிற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்த அரிசி விலை அதிகரிப்பில் நுகர்வோர் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். நகர்புற வர்த்தக நிலையங்களில் ஒரு கிலோ நாட்டரிசி 85 ரூபாவில் இருந்து 90 வரை விற்பனை செய்யப்பட்டு வரும் நிலையில் கிராமப்புற வர்த்தக நிலையங்களில் 100 ரூபாவுக்கு அதிகமாக விற்பனை செய்யப்படுகின்றது.

கடந்த போகத்தில் வடக்கு மாகாணத்தில் நெல் உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் அடுத்த வருடம் நாட்டரி சிக்குத் தட்டுப்பாடு ஏற்படும் என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் நுகர்வோர் அதிகமாக நாட்டரிசி நெல் வகைகளில் ஆட்டக்காரி இனம் உட்பட்ட அரிசி வகைகளையே அதிகளவு கொள்வனவு செய்து வருகின்றனர். காரணம் கட்டுப்பாட்டு விலையில் உள்ள அரிசி வகைகள் தரமற்றதாகச் சந்தைகளில் விற்பனை செய்யப்படுவதாக அவர்கள் கூறுகின்றனர்.

இதனைக் காரணமாகக் கொண்டு வர்த்தகர்கள் நாட்டரிசியைக் கூடுதல் விலைக்கு விற்பனை செய்து வருவதாகவும், சில வர்த்தக நிலையங்களில் நாட்டரிசி பதுக்கப்பட்டுள்ளதாவும் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் பாவனையாளர் அதிகார சபையினரிடம் கேட்டபோது, கட்டுப்பாட்டு விலைகளில் உள்ள அரிசிகளைக் கூடுதல் விலைக்கு விற்பனை செய்தால் மட்டுமே சட்ட நடவடிக்கை எடுக்க முடியும். ஏனைய கட்டுப்பாட்டு விலை இல்லாத அரிசிகளை இறக்குமதிச் செலவுக்கு ஏற்ப நியாயமான விலையில், குறைந்த விலை வித்தியாசத்தில் விற்பனை செய்யமுடியும். எனினும் விற்பனை செய்யப்படும் அரிசிகளின் விலைப் பட்டியலை வர்த்தக நிலையங்களில் காட்சிப்படுத்தவேண்டும் எனத் தெரிவித்தனர்.

இதேவேளை, இருப்பில் உள்ள அரிசிகள் மற்றும் நெல்லின் விபரங்களை அந்தந்த மாவட்ட செயலங்களின் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினரிடம் மொத்த விற்பனையாளர்கள் மற்றும் நெல் களஞ்சிய வர்த்தகர்கள் ஒப்படைக்க வேண்டும் என உள்நாட்டு வர்த்தக அமைச்சு அறிவித்துள்ளது. (த-14)

### ஊவாவில்

இதன்போது, ஊவா தேர்தல் நடவடிக்கைகளுக்காகச் சமுர்த்தி உத்தியோகத்தர்களை அனுப்ப வேண்டாம் என்று தேர்தல்கள் ஆணையாளர் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார். அத்துடன் மனித உரிமைகள் ஆணைக்குழுவும் சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் இது தொடர்பில் அறிவித்திருந்தது.

இதற்கு முன்னதாக, யாழ்ப்பாணத்திலிருந்து 146 சமுர்த்தி உத்தியோகத்தர்களை, வடக்கு மாகாண ஆளுநரினால் வழங்கப்பட்ட மாகாண சபையின் 2 பஸ்களில் ஊவா மாகாணத்துக்கு அழைத்துச் செல்ல திட்டமிடப்பட்டிருந்தது. தேர்தல்கள் ஆணையாளரின் அறிவிப்பு வெளியாகியதும் விசேட பஸ் சேவைகள் ரத்துச் செய்யப்பட்டதுடன், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பயணமும் கைவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும், யாழ். மாவட்ட திவிநெகும திணைக்களத்தின் மாவட்ட உத்தியோகத்தர் ஒருவர், ஒரு தொகுதி சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களைத் தனியார் பஸ்ஸில் ஊவா மாகாணத்துக்கு அழைத்துச் சென்றுள்ளார். இவ்வாறு கடந்த 5 ஆம் திகதி அழைத்துச் செல்லப்பட்டவர்கள் நேற்றுக் காலை யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளனர். (த-5)

### முகமாலை

தமது சொந்த இடங்களில் மீள்குடியேறுவதற்கான பதிவுகளை மேற்கொண்டுள்ளனர். மேற்குறித்த குடும்பங்கள் தற்போது யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், திருகோணமலை, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் வாழ்ந்து வருகின்றனர் என்றும், இவர்களை இவ்வருட இறுதிக்குள் மீள்குடியேற்றம் செய்ய இருப்பதாகவும் கடந்த ஐந்தாம் திகதி பச்சிலைப்பள்ளிப் பிரதே செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (த-55)

### பனங்களியை

னாளிகளுக்கு இது தொடர்பான இரண்டு நாள் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. எதிர்வரும் 15 ஆம், 16 ஆம் திகதிகளில் இந்தப் பயிற்சிப் பட்டறை இடம்பெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பனை அபிவிருத்திச் சபை இந்தப் போகத்தின்போது கூடுதலாக பனம் பழத்தில் இருந்து பனம் களியைப் பெறுவதற்கும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இந்த பனம்களி ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டு நீண்ட நாள்களுக்குப் பாதுகாப்பான முறையில் வைக்கப்பட்டு அதில் இருந்து பனம் பொருள்கள் தயாரிக்கப்படும்-என்றார். (த-17)

### கர்ப்பிணியை

வரி நிதியத்துக்குச் சொந்தமான ரிப்பர் மோதியதனால் கர்ப்பிணியின் வயிற்றுப் புறத்தினூடாக ரிப்பர் சில் ஏறி குடல் வெளியேறி சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்தார்.

அதனுடன் தொடர்புடைய குற்றச்சாட்டிலேயே 6 பேர் கைதாக 7 பேர் சரணடைந்துள்ளனர். அவர்களை 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் நேற்று உத்தரவிட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-4)

### மூன்றாம்

வாறு பல வழிகளிலும் அரசுதான் தீர்வு விடயத்துக்கு முட்டுக்கட்டையிடுகின்றது.

இந்த நிலையில், இந்த அரசை நாம் எப்படி நம்புவது? தெரிவுக்குழுவுக்கு எந்த அடிப்படையில் செல்வது? ஆகவேதான் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடனான பேச்சை நாம் கோருகின்றோம். அத்தகையதொரு சூழல் உருவாகினால்தான் பேச்சுக்கு செல்வதற்கு கூட்டமைப்பு முடிவெடுக்கும். மாறாக அரசின் மிரட்டல்களுக்கு அடிபணிய வேண்டிய அவசியம் எமக்கும் கிடையாது" என்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்டார்.

### நாடு திரும்பினார்.

ராஜபக்ஷவைச் சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து கலந்துரையாடினார்.

அத்துடன், இரு நாட்டு பிரதிநிதிகளுக்கு இடையில் பல புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் இதன்போது கைச்சாத் திடப்பட்டமையும் குறிப்பிடத் தக்கது.

### முதலமைச்சரை

லாளர் மனோகணேசன் ஊடாக, வடக்கு முத லமைச்சருக்கு தகவல் அனுப்பியுள்ளார்.

இது தொடர்பில் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் 'உதயனுக்குத்' தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண சபைக்கும், கொழும்பு அரசுக்கும் இடையில் கருத்தியல் ரீதியில் முரண்பாடுகள் எழுந்துள்ளன. இது தொடர்பில் அரச தரப்பு என்ற ரீதியில், வடக்கு முதல்வருடன் பேசுவதற்கு தான் தயாராக இருக்கிறார் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ என்னிடம் தெரிவித்தார்.

பேச்சுக்காக யாழ்ப்பாணத்துக்கு வந்து சந்திக்கவும் தான் தயாராக இருக்கிறார் என்று அவர் மேலும் தெரிவித்திருக்கிறார். இல்லையேல் தனது அலுவலகத்திலோ தனது வீட்டிலோ கூட சந்திப்பை வைத்துக்கொள்ள முடியும் என்றும் கூறியிருக்கிறார்.

இதனை வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரனிடம் நான் தெரியப்படுத்தியுள்ளேன். அவர் இது தொடர்பில் எந்தப் பதிலும் வழங்கவில்லை. இந்தப் பேச்சு நடக்க வேண்டும் என்றோ, 'இதில் நான் மத்தியஸ்தம் வகிக்க வேண்டும் என்றோ எந்த ஆர்வமும் எனக்கு இல்லை. முடிவெடுக்க வேண்டியது வடக்கு முதலமைச்சர்தான். நான் பாதுகாப்பு அமைச்சின் செயலர் சொல்லிய தகவலை, வடக்கு முதல்வருக்குத் தெரியப்படுத்தியுள்ளேன் - என்றார்.

அதேவேளை, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் நேற்றுமுன்தினம் வவுனியாவில் இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் மாநாட்டில் உரையாற்றும் போது, 'வெளிநாட்டுச் சூழல், அயல்நாட்டு சூழல், உள்நாட்டு சூழல் என்பவை சற்று கரிசனை தந்து கொண்டிருப்பதால் அரச முக்கியஸ்தர்களைப் பொறுத்த வரையில் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கின்றனர். வட மாகாண முதலமைச்சரைப் பக்கத்தில் வைத்துத் தனிமையில் பேச வேண்டும் என்று சகோதரர்கள் இருவரும் காரணமில்லாமல் வெவ்வேறாகக் கருத்து வெளியிட்டிருக்க மாட்டார்கள்' என்று மறைமுகமாக, ஜனாதிபதியின் சகோதரர்களான பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய அழைத்ததையும் இதேபோன்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் ஜனாதிபதியின் மற்றொரு சகோதரருமான பஸில் ராஜபக்ஷவும் ஏற்கனவே அழைத்ததையும் மறைமுகமாகச் சுட்டிக்காட்டியிருந்தார்.

கோத்தபாயவின் அழைப்புத் தொடர்பில் மின்னஞ்சல் மூலம் முதலமைச்சரின் கருத்தைப் பெற எடுத்த முயற்சி நேற்றிரவு வெற்றியளிக்கவில்லை. (உ-5,22)

### நவிப்பிள்ளையின்

தனது கன்னியுரையை நிகழ்த்தினார். அந்த உரையிலிலேயே அவர் மேற்கண்ட விடயங்களைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

"இலங்கையில் மனித உரிமை ஆர்வலர்களுக்கு எதிராக பிரயோகிக்கப்படும் பயமுறுத்தல்களையிட்டு நான் அச்சமடைந்துள்ளேன். இலங்கையில் மனித உரிமைப் பணியாளர்கள், சாட்சிகள், பாதிக்கப்பட்டவர்கள் தற்போதும் அச்சுறுத்தப்படுகின்றனர். இந்த நடவடிக்கை குறித்து நான் கவலையடைகின்றேன்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் ஆரம்பித்துள்ள சர்வதேச விசாரணைக்கு இலங்கை அரசு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். மேலும் இலங்கையில் முஸ்லிம், கிறிஸ்தவ சிறுபான்மையினர் மீதான தாக்குதல்களை நான் கடுமையாகக் கண்டிக்கிறேன்."- என்று அவர் தனது உரையில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் தனது உரையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

"ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் முன்னாள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் செயற்பாடுகளையே நானும் பின்பற்ற விரும்புகிறேன்.

அத்துடன் ஆஸ்திரேலியா, புகலிடக் கோரிக்கையாளர் களின் உரிமையை தொடர்ந்தும் மீறி வருகின்றது. போதியளவு வளங்கள் இல்லாத நாடுகளில், அகதிகளாக காணப்பட்டவர்களை ஆஸ்திரேலியா குடியமர்த்தும் நடவடிக்கைகள் சரியானவை அல்ல.

அடைக்கலம் கோருவோரை கடலில் வைத்து விசாரிப்பதையும் கப்பல்களை தடுத்து நிறுத்தி திருப்பி அனுப்புவதையும் கடுமையாக நான் கண்டிக்கின்றேன். எதேச்சாதிகாரமாக தடுத்துவைத்தல், சித்திரவதைக்கு உட்படும் சாத்தியம் ஆகிய மனித உரிமை மீறல்களுக்கு இந்த கொள்கை வழிவகுத்துள்ளது"- என்று தெரிவித்துள்ளார். (ந-5)

### சிவாஜியின்

துக் கொள்ளப்படவுள்ளது.

இதனை விடவும், அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானத்தால், தற்போதைய திறந்த பொருளாதாரச் சூழ்நிலை காரணமாக தனியார் துறையு டன் போட்டி போட முடியாத சூழ்நிலையையும் கருத்தில் கொண்டு கூட்டுறவுத்துறையை மேம்படுத்தும் வழி வகைகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக இத்துறையில் அறிவும், அனுபவமும் கொண்ட, வடக்கு மாகாண சபை உறுப்பினர்களையும், நடைமுறை அறிவுமுள்ள கூட்டுறவாளர்களையும் உள்ளடக்கிய செயற்குழுவை நியமித்தல் என்ற பிரேரணையும்,

ஆளுங்கட்சி உறுப்பினர் அ.அஸ்மினால், யாழ்ப்பாண பிரதேச செயலகத்தில் மீள்குடியேற்ற பதிவுகளை மேற்கொண்டுள்ள முஸ்லிம் மக்களை இந்திய வீட்டுத் திட்டத்தில் உள்வாங்குதல் தொடர்பில் மாவட்டச் செயலரையும், பிரதேச செயலரையும் கோருதல் என்ற பிரேரணையும்,

எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசாவால், பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள சங்கிலித் தோப்பு இராஜ அரண்மனையின் ஒரு பகுதியான மந்திரிமனை அமைந்துள்ள காணியையும் தொல்பொருள் ஆராய்ச்சி நிலையத்திற்கு பாரப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளல் என்ற பிரேரணையும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இவற்றுக்கு மேலதிகமாக ஆளுங்கட்சி உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதனால், முதலமைச்சரிடம் கேள்விகள் தொடுக்கப்பட்டுள்ளன. அவரால் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதியும், கடந்த பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதியும் காணி தொடர்பாக முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை முதலமைச்சரிடம் கேள்வியாக அவர் எழுப்பியுள்ளார். அத்துடன் இந்திய வீட்டுத் திட்டம் தொடர்பில் முன்வைக்கப்பட்ட பிரேரணை, காணிக் கச்சேரி நடத்துமாறு கோரிய பிரேரணை ஆகியவற்றுக்கு இதுவரையில் என்ன நடந்தது என்பது தொடர்பிலும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

மற்றொரு ஆளுங்கட்சி உறுப்பினரான அ.அஸ்மின், கல்வி அமைச்சரிடம் கேள்வி எழுப்பியுள்ளார். ஒஸ்மானிய கல்லூரிக்குச் சென்ற ஆளுநர் பாடசாலை அதிபரை மாற்றியமை தொடர்பிலேயே அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (ந-5)

### அரோகரா

பல்லாயிரக்கணக்கான அடியார்கள் வடம்பிடித்து இழுக்க தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலய கந்தன் தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருட்காட்சி வழங்கினார்.

காலை 8.30 தொடங்கிய தேர் உற்சவம் முற்பகல் 9.30 மணிக்கு தேர் இருப்பிடம் அடைந்தது.

ஆலய வீதிகளில் சிவிலுடையிலும் சீருடையிலும் அளவுக்கதிகமாக பொலிஸார் கடமையில் ஈடுபட்டிருந்ததால் திருட்டுக்கள் இடம்பெறுவது ஓரளவு குறைக்கப்பட்டிருந்தது. ஆனாலும் சில சங்கிலிகள் அறுக்கப்பட்டமை தொடர்பில் தமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன் சந்தேகத்துக்கு இடமாக நடமாடினர் என்று கருதப்படும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். மேலும் பாதுகாப்பு நிலையத்தில் விடப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளதாக அங்கு அமைந்துள்ள பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் தற்காலிக பணிமனையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ந-109,108,173)

### ஐ.நா.

பழிவாங்கப்படுகின்றார்கள் என்ற குற்றச்சாட்டையும் முற்றாக நிராகரித்துள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 27 ஆவது அமர்வில் உரையாற்றிய தூதுவர் ரவிநாத் ஆரியசிங்க இதனைத் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். "சர்வதேச சமூகத்துடன் இலங்கை தொடர்ந்தும் பேச்சு மேற்கொண் டுள்ளது. எனினும், சர்வதேச விசாரணையைக் கோரும் மார்ச் மாத பிரேரணையை நிராகரிக்கின்றது. போர்க் கால கரிசனைகள் குறித்த விடயங்களுக்குத் தீர்வு காண்பதற்காக அரசு தொடர்ந்தும் உள்ளூர் பொறிமுறைகளைப் பயன்படுத்தும்.

சாட்சி பாதுகாப்பு தொடர்பான சட்ட மூலம் திங்கட்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றது. ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் விசாரணைகள் அதன் ஆணையை மீறுவது டன் உள்ளூர் பொறிமுறையை முற்றுமுழுதாக மதிக்காததாக காணப்படுகின்றது. நல்லிணக்கத்தைப் பாதிக்கிறது"- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-5)

### 2,500

ஊடாகவே நகர்த்தி வந்துள்ளனர். அவ்வாறான இடங்களுக்குப் பொலிஸார் வரமாட்டார்கள் என்ற தற்துணிவிலேயே அவர்கள் இவ்வாறு வகை தொகையின்றி பனைகளைத் தறித்துள்ளனர். கடந்த சில மாதங்களாக நடைபெற்று வரும் இந்தச் சட்டவிரோத நடவடிக்கையால், சுமார் 2 ஆயிரத்து 500 பனைகள் அழிக்கப்பட்டுள்ளன என்று கணக்கிடப்படுகின்றது.

தறிக்கப்பட்ட பனைகளை அனுமதியின்றிக் கொண்டு சென்றனர் என்ற குற்றச்சாட்டில் இரு டிராக்டர்களில் ஏற்றிச் செல்லப்பட்ட 125 பனங்குற்றிகளுடன் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர் என்றும், 180 பனங்குற்றிகளோடு நேற்றும் இரு டிராக்டர்களுடன் இரு வர் கைது செய்யப்பட்டுள்ள னர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் பளையைச் சேர்ந்தவர்கள் என்றும், விசாரணைகளின் பின்னர், இன்று நீதிமன்றில் அவர்கள் முற்படுத்தப்படுவர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ந-4)

உதயன் 09.09.2014



## தண்டம்

கிளிநொச்சி, செப்.9

வாகனம் செலுத்துவதற்கான உரிய ஆவணங்கள் இல்லாத குற்றச்சாட்டில் பளைப் பொலிஸாரால் கடந்த 2ஆம் திகதி கைதுசெய்யப்பட்டு நேற்று முன்தினம் கிளிநொச்சி நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்ட சாரதி ஒருவருக்கு கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றம்15ஆயிரம் ரூபா தண்டம் செலுத்துமாறு உத்தரவிட்டுள்ளது. சாரதி தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதன் அடிப்படையில் இந்தத் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. (கு-18)

+++

கிளிநொச்சி, செப்.9

ஒரு போத்தல் கசிப்பை வைத்திருந்த நபர் ஒருவருக்கு கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றம் ரூபா.10 ஆயிரம் தண்டம் விதித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை தர்மபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நபர் வெள்ளிக்கிழமை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதன் அடிப்படையில் நீதிமன்றத்தால் இந்தத் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. (வ)



வவுனியா பறண்நட்டகல் கிராமத்தில் அமைந்துள்ள அடைக்கல அன்னையின் திருநாள் நேற்று கொண்டாடப்பட்டது. காத்தான்குளம் பங்குத்தந்தை எஸ்.வசந்தகுமார், கோமரசங்குளம் பங்குத் தந்தை எம்.செபமாலை மற்றும் ஓமந்தை பங்குத் தந்தை ஜே.அல்போன்ஸ் தலைமையில் ஒப்புக் கொடுக்கப்பட்ட கூட்டு திருப்பலியில் பெருமளவான மக்கள் கலந்து கொண்டனர். (வ-421)




பளை, செப்.9

சட்டவிரோதமாக பனைமரம் தறித்து வாகனத்தில் ஏற்றிச் செல்ல முற்பட்ட வேளையில் பொலிஸாரிடம் வசமாக மாட்டிக் கொண்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் பளை, கறுக்காய் பகுதியில் இடம்பெற்றது.

பொலிஸாரைக் கண்டதும் பனை மரம் ஏற்றியவர்கள் அங்கிருந்து தப்பியோடியதால் மரங்கள் ஏற்றிய டிராக்டரையும் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான வெட்டப்பட்ட பனை மரங்களையும் மீட்டு பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பாக பளைப் பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொண்டபோது தமக்குக் கிடைத்த தகவலை அடுத்து கறுக்காய் பகுதிக்கு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர்.டி.ராஜபக்ஷ தலைமையிலான பொலிஸ் குழுவினர் அங்கு சென்றபோது பனைமரங்கள் ஏற்றிய நிலையில் காணப்பட்ட டிராக்டரையும் மரங்களையும் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு வந்துள்ளதாகவும் இன்று நீதிமன்றில் பாரப்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

தென்மராட்சி, செப்.9

பஸ்ஸில் பயணித்த வேளையில் பணத்தையும் தொலைபேசியையும் தொலைத்த பெண்ணை சக பயணி ஒருவர் தாக்கியதில் காதிலிருந்து இரத்தம் வழிந்தது.

இந்தச் சம்பவம் நேற்று ஏ-9 வீதியில் பயணித்த பஸ்ஸில் இடம்பெற்றது.

சம்பவம்குறித்து மேலும் தெரியவருவதாவது:-

"பஸ்ஸிலிருந்து இறங்கிய வேளையில் கைப்பையினுள் வைக்கப்பட்டிருந்த பணமும் கையடக்கத் தொலைபேசியும் தொலைந்து விட்டது. நீங்கள் கண்டீர்களா" என்று குறித்த பெண் கேட்ட போது திடீரென அந்தப் பெண்ணைத் தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

காதிலிருந்து இரத்தம் வழிந்த நிலையில் குறித்த பெண் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். தாக்கிய பயணி பஸ்ஸில் சென்றுவிட்டார். (வ-9)




கொழும்பு, செப்.9

நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் நேற்றுமுன்தினம் அதிகாலை 6 மணி முதல் நேற்று மாலை 6 மணி வரையான 36 மணித்தியாலங்களில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் 15 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 32 பேர் காயமடைந்துள்ளனர்.

கெக்கிராவ மரதன்கடவல பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் அதிகாலை 1.30 மணிக்கு இடம்பெற்ற வாகன விபத்தில் 4 பேர் கொல்லப்பட்டனர்.

இதனைத் தவிர கடந்த மூன்று தினங்களுக்குள் பண்டாரகம, மாவனல்லை பிரதேசங்களில் 4 பேரும், மஹியங்கனை பிரதேசத்தில் இராணுவ சிப்பாய் ஒருவரும், மினுவங்கொடையில் இருவரும், கண்டி, கொழும்பு, பிலியந்தலை, வாரியபொலையில் தலா ஒருவரும் உயிரிழந்தனர். அவர்களில் இருவர் பெண்கள் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரின் அலுவலகம் தெரிவித்துள்ளது. (வ)

கொழும்பு, செப்.9

கொழும்பு-கண்டி பிரதான வீதியில் வெலிவேரிய ஹீந்பத்வில என்ற இடத்தில் மோட்டார் சைக்கிளும் லொறியும் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஓய்வு பெற்ற ஆயுள்வேத வைத்தியர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுக் காலை இடம்பெற்ற சம்பவத்தில் காயமடைந்த அவருடைய மனைவி கம்பஹா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (வ)

## யானை தாக்கியதில் குடும்பஸ்தர் காயம்


மட்டக்களப்பு, செப்.9

மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் பிரதேசத்தில் உள்ள முறுத்தானை காட்டுப் பகுதியில் நேற்று திங்கட்கிழமை காட்டு யானை ஒன்று தாக்கியதில் படுகாயமடைந்த வந்தாறுமூலை, செட்டியார் வீதியில் வசிக்கும் விநாயகமூர்த்தி சண்முகநாதன் (வயது-50) என்பவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை வழமை போன்று விறகுகள் எடுப்பதற்காக ஏனைய தொழிலாளர்களுடன் சென்ற அவரை, காட்டினுள் நின்ற யானை தாக்கியுள்ளது.

இந்த நிலையில், ஏனையோர்; யானையின் தாக்குதலுக்கு அகப்படாதவாறு அங்கிருந்து தப்பியோடியுள்ளனர்.

அதன் பின்னர், படுகாயமடைந்த அவரை ஏனைய தொழிலாளர்கள் மாவடி வேம்பு பிரதேச மருத்துவமனையில் சேர்த்தனர்.



பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர். (வ)

# டெங்கு கட்டுப்பாட்டு வாரம் நாளை ஆரம்பமாகிறது

## பரவும் சூழலை வைத்திருப்போருக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல்

யாழ்ப்பாணம், செப். 9

வடகிழக்கு பருவ பெயர்ச்சி மழை சில மாதங்களில் ஆரம்பிக்கவுள்ளதை அடுத்து, டெங்கு நோய்ப் பரம்பலைக் கட்டுப்படுத்தும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கொழும்பு சுகாதார அமைச்சு எதிர்வரும் 10ஆம் திகதி முதல் 16 ஆம் திகதிவரை நாடளாவிய ரீதியில் தேசிய நுளம்பு க்ட்டுப்பாட்டு வாரமாகப் பிரகடனப் படுத்தியுள்ளது. அதனை உரிய முறையில் செயற்படுத்த வேண்டும். - இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"டெங்கு நோய் பரம்பலை சுகாதார திணைக்களத்தால் மட்டும் கட்டுப்படுத்த முடியாது. அதனைக்கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட திணைக்களங்கள், நிறுவனங்கள், உள்ளூராட்சிமன்றங்கள், பாடசாலைகள், பொது அமைப்புக்கள், பொதுமக்கள் அனைவரது ஒத்துழைப்பும் அவசியமாகவுள்ளது. எனவே, சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக உரிய செயற்பாடுகளை முன்னெடுத்து டெங்கு நோயைக் கட்டுப்படுத்த உதவ வேண்டும். பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி மன்ற செயலாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், வைத்தியசாலைப் பொறுப்பதிகாரிகள், நிறுவனத் தலைவர்கள், பாடசாலை அதிபர்கள், வர்த்தக நிலைய உரிமையாளர்கள் இதனை செயற்படுத்த வேண்டும்.

பிரதேச மட்டத்தில் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் நோக்கில் பிரதேச செயலாளர் பிரதேச டெங்கு கட்டுப்பாட்டுக் குழுக் கூட்டத்தை உடனடியாகக் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர் கிராம மட்ட டெங்கு கட்டுப்பாட்டுக் குழுக்கள் கிராம மட்டத்தில் நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க வேண்டும்.

நாளை புதன்கிழமை சகல பாடசாலைகள், பல்கலைக் கழகம், தனியார் கல்வி நிலையங்கள், உயர் கல்வி நிலையங்கள், மாணவ விடுதிகள், கல்வியியற் கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகள், முன்பள்ளிகள் என்பனவற்றில் சிரமதானம் இடம்பெறும். இரண்டாம் நாளான நாளை மறுதினம் வியாழக்கிழமை சகல அரச நிறுவனங்கள், திணைக்களங்கள், அமைச்சுக்கள், வைத்தியசாலைகள், பொலிஸ், இராணுவ, கடற்படை, விமானப் படை முகாம்களில் சிரமதானம் இடம்பெற வேண்டும். 12ஆம் திகதி வெள்ளிக் கிழமை பொது இடங்கள், பொதுச்சந்தைகள், வடிகால் கள் சுத்தம் செய்யப் படவேண்டும். எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை தனியார் வீடுகள், தொழிற்சாலைகள், கைத்தொழில் நிலையங்கள் சிரமதானம் செய்தல் வேண்டும். 14 ஆம் திகதி தனியார் வீடுகள், வணக்கத்தலங்கள் சிரமதானம் செய்யப்படும். 15 ஆம் திகதி எதிவரும் திங்கட்கிழமை கட்டட நிர்மாணத் தலங்கள், பராமரிப்பற்ற காணிகள், வீடுகள் சிரமதானம் செய்யப் படும். 16 ஆம் திகதி பன்சாலைகள், மயானங்கள், ரயில் நிலையங்கள், வீதியோரங்கள் சிரமதானம் செய்யப்படும்.

இவற்றை சகல அரச, தனியார் நிறுவனங்கள் பணியாளர்களால் முழுமையாக சிரமதான அடிப்படையில் துப்புரவு செய்யப்பட வேண்டும். பாடசாலைகள் மாணவர்களின் பங்களிப்புடன் சிரமதான அடிப்படையில் பாடசாலை வளவும், சுற்றாடலும் துப்புரவு செய்யப்பட வேண்டும். வர்த்தக நிலையங்கள் உரிமையாளர்களால் துப்புரவு செய்ய ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

வைத்தியசாலைகள் உத்தியோகத்தர்கள், ஊழியர்களின் பங்களிப்புடன் துப்புரவு செய்யப்பட வேண்டும். தனியார் கல்வி நிலையங்கள் உரிமையாளர்களால் துப்புரவு செய்ய ஏற்பாடு செய்யப்பட வேண்டும். வணக்கத்தலங்கள் சம்பந்தப்பட்ட அறங்காவலர் சபையின் ஏற்பாட்டில் சிரமதான அடிப்படையில் துப்புரவு செய்யப்பட வேண்டும். தனியார் வீடுகள் உரிமையாளர்களால் அல்லது குடியிருப்பாளர்களால் துப்புரவு செய்யப்பட வேண்டும். பராமரிப்பற்ற வீடுகள், காணிகள் உரிமையாளர்களால் அல்லது பராமரிப்பாளர்களால் துப்புரவு செய்யப்பட வேண்டும். பொதுச்சந்தைகள், மயானங்கள் போன்ற பொது இடங்கள் உள்ளூராட்சி மன்றங்களால் துப்புரவு செய்யப்பட வேண்டும். கழிவு நீர் வாய்க்கால்கள் சம்பந்தப்பட்ட திணைக்களங்களாலும் உள்ளூராட்சி மன்றங்களினாலும் துப்புரவு செய்யப்பட வேண்டும். டெங்கு பரவும் சூழலை வைத்திருப்பவர்களுக்கு நீதிமன்றங்களிலும் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

காய்ச்சல் நோயாளர்கள் யாழ். மாவட்டத்தில் டெங்கு நோய் தற்போது தீவிரமாக பரவி வரும் நிலையில் காய்ச்சல் ஏற்படும் நோயாளர்கள் பின்வரும் ஆலோசனைகளை பின்பற்றுமாறு கோரப்படுகின்றனர்.


தற்போதைய சூழ்நிலையில் காய்ச்ச்ல் ஏற்படும்போது அது டெங்காக இருக்கலாம். எனவே, காய்ச்சல் ஏற்படும் நோயாளர்கள் பூரண ஓய்வில் இருக்க வேண்டும். வேலைக்குச் செல்பவர்களும், மாணவர்களும் விடுமுறை பெற்று வீட்டில் ஓய்வெடுக்க வேண்டும். வீட்டிலும் கடுமையான வேலையேதும் செய்யாது பூரண ஓய்வில் இருக்க வேண்டும். பொதுவாக டெங்கு காய்ச்சலின் பின்விளைவுகள், இறப்புக்கள் காய்ச்சல் தணிந்த பின்னரே ஏற்படுவது வழமை. எனவே காய்ச்சல் தணிந்த பின்னரும் இரண்டு நாள்களுக்கு ஓய்வு அவசியம். மாணவர்கள் காய்ச்சல் ஏற்படும் காலத்தில், விளையாட்டுக்களில் பங்குபற்றுவதைத் தவிர்க்க வேண்டும். கடந்த காலங்களில் டெங்கு காய்ச்சலுடன் பரசிற்றமோல் வில்லைகளை போட்டுக் கொண்டு விளையாட்டுக்களில் பங்குபற்றிய இரண்டு மாணவர்கள் அநியாயமாக உயிரிழந்ததை சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

காய்ச்சலின்போது போதிய நீராகாரங்களை அருந்தி உடலின் நீர்த்தன்மை வற்றாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். சில நோயாளர்கள் பரசிற்றமோல் வில்லைகளை அளவுக்கு அதிகமாக பாவித்து சுய வைத்தியம் செய்வதை அவதானிக்க முடிகிறது. அதனால் ஈரல் பாதிக்கப்பட்டு இறப்பு ஏற்படலாம். எனவே காய்ச்சல் ஏற்படும் நோயாளர்கள் சரியான வைத்திய ஆலோசனையின்படி பரசிற்றமோல் வில்லைகளை பாவிக்க வேண்டும். குறிப்பாக குழந்தைகளுக்கு இது மிகமிக அவசியம். காய்ச்சலுடன் மயக்கம், வயிற்று வலி, வாந்தி, வயிற்றோட்டம் போன்ற அறிகுறிகள் காணப்படும் நோயாளர்கள் காலந்தாழ்த்தாது உடனடியாக தகுந்த வைத்திய ஆலோசனையைப் பெறவேண்டும். (ற-4-14)



கிளிநொச்சி முருகானந்தாக் கல்லூரியின் பவளவிழா நேற்று நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் க. வி. விக்னேஸ்வரன் கலந்துகொண்டு பவள விழா மண்டபத்தைத் திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன், வடமாகாண கல்வியமைச்சர் த. குருகுலராஜா, வடமாகாண சபை உறுப்பினர் ப. அரியரட்ணம், கிளிநொச்சி வலயக்கல்வி பணிமனையின் அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் உட்பட பெருமளவானோர் கலந்துகொண்டனர். (து-18)





புத்தூர் மட்டுவில் வீதியில் நேற்று விபத்துக்குள்ளான பஸ். இந்த விபத்தில் ஒருவர் உடல் நசிந்து உயிரிழந்தார்.





| | | |
|---|---|---|
| கொழும்பு —துபாய் | —20000 | O/W |
| கொழும்பு — சென்னை | —22000 | RTN |
| கொழும்பு — திருச்சி | —22400 | RTN |
| கொழும்பு — டோகா | —26000 | O/W |
| கொழும்பு — மலேசியா | —32000 | RTN |
| கொழும்பு — பெங்களூர் | —32200 | RTN |
| கொழும்பு — சிங்கப்பூர் | —30800 | RTN |
| கொழும்பு — சிட்னி | —61000 | O/W |
| கொழும்பு — மாலைத்தீவு | —32000 | RTN |
| கொழும்பு — மிலான் | —57800 | O/W |
| கொழும்பு — சுவிஸ் | —83500 | RTN |
| கொழும்பு — லண்டன் | —45400 | O/W |
| கொழும்பு — பிரான்ஸ் | —45500 | O/W |
| கொழும்பு — ஜேர்மன் | — 71500 | RTN |
| கொழும்பு — நியூசிலாந் | —88700 | O/W |
| கொழும்பு — கனடா | —105700 | O/W |

வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்ளலாம்

யாழ் நகரில் நம்பிக்கையான பாதுகாப்பான 24 மணித்தியால சேவை வழங்குனர்

#128, Brown Road, Jaffna
128, பிறவுண் வீதி யாழ்ப்பாணம்


# ஐ.நா. விசாரணைக் குழுவை இந்தியாவுக்குள் அனுமதிக்குக

இலங்கைக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணைக் குழுவை இந்தியாவுக்குள் அனுமதிக்க வேண்டும் என்பது உட்படப் பல கோரிக்கைகளை முன்வைத்து மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகம் இன்று ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளது. இலங்கைக்கு எதிராக விசாரணையை மேற்கொள்ளும் சர்வதேச விசாரணைக் குழு, இந்தியாவில் தங்கியிருந்துவிசாரணைகளை மேற்கொள்ள இந்தியா அனுமதிக்கவேண்டும். ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை உரையாற்ற அனுமதிக்கக் கூடாது. இடம் பெயர்ந்த தமிழ் மக்கள் சொந்த இடங்களில் குடியமர்த்தப்பட வேண்டும். தனியான தமிழீழம் தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகள் இந்த ஆர்ப்பாட்டத்தின் போது முன்வைக்கப்படவுள்ளன. (ற)


**நாய்க்குட்டி விற்பனைக்கு**

45 நாள்கள் நிரம்பிய ஜேர்மன் செப்பேட் விற்பனைக்குண்டு. ஊசி போடப்பட்டது.

தொ.பே: 075 498 5445 (31850) (4.6.3)

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS

**After A/L What Next???**

இன்னும் சில நாட்களில் நீங்கள் பல்கலைக்கழகம் செல்லவேண்டும், படித்துப் பட்டதாரியாக வேண்டும் அல்லது வேறு உயர் கற்கை நெறிகளைக் கற்க வேண்டும் அல்லது போட்டித் தொழிற்சந்தையிலே நல்ல வேலை வாய்ப்பை பெற வேண்டும், இவ்வாறான உங்களின் கனவுகள் நனவாக வேண்டுமெனில், நீங்கள் வாழ்க்கையில் வளம்பெற வேண்டுமெனில் தற்போதைய காலகட்டத்தில் ஆங்கில அறிவு மிக, மிக அவசியமானது

**Spoken English With Grammar - Quick Learning Course**

Duration: (1 1/2 Months)

- சர்வதேச தராதரத்திற்கேற்ற பாடத்திட்டம்.
- கற்கைநெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகிறது.
- விரிவுரைகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக (Audio & Video) நடைபெறுகின்றது.
- ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.

**நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும்.**

**Diploma In English** Duration: (2 Months)

தற்காலத்திலே ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. உயர் கல்வி கற்பதாயினும் சரி, அலுவலகத்தில் வேலை புரிவதாயினும்சரி, Internet, E-mail, Internet Chatting மற்றும் நாளாந்த வாழ்க்கையிலே இலத்திரனியல் சாதனங்களை பாவிப்பதிலும் சரி ஆங்கிலத்தின் தேவையை யாரும் புறந்தள்ளமுடியாது. இதை நாம் நன்கு உணர்ந்து எல்லோரும் இலகுவில் கற்கக்கூடிய விதத்தில் ஒரு பாடத்திட்டத்தினைப் புதிய தொழில்நுட்பங்களுடன் (Audio & Video System) அமைத்துள்ளோம்.

**B1 Exam** Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளைவிட மிகவும் இலகுவானதுடன் IELTS-4.5இற்கு ஒப்பானது. இது British High Commission இனால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்குத் தோற்றமுடியும். Duration: (2 Months)

**IELTS** Acadamic/General — We do Official Online Registration for Exam Candidates — Duration: (2 Months)

(International English Language Testing System)

Student Visa / Migration Visa மூலம் Canada, Newzeland, USA, Australia, UK போன்ற நாடுகளுக்குச் செல்பவர்களுக்கானது.

**We gurantee success rate 6.5 band and above**

**A1 Exam** Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

U.K அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது (City & Guilds)
சான்றிதழின் கால எல்லை வரையறையற்றது
நம்பிக்கைக்குரிய சர்வதேசப் பரீட்சை
ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது — Duration: (2 Months)

Batches Starts on
10/09/2014 @3.00pm
13/09/2014 @3.00pm
15/09/2014 @9.00am
17/09/2014 @9.00am
20/09/2014 @11.00am

No.15, Sirambiyady Lane, Jaffna (Near Ariyakulam Junction & Sathosa). Tel :021224550
No.3, 6th Lane, VairavarKovil Rd, Vairavapuliyankulam, Vavuniya. Tel:0243245287
Head Office. No.30 1/5, W.A. Silva Mawatha, Colombo -06. Tel 0112500207
Hot Lines : 0777585913, 0777222422, 0714299935

**அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை தரம் - III**

போட்டிப் பரீட்சை விசேட வகுப்புக்கள்
பொது உளச்சார்பு, மொழித்திறன்
* அச்சடித்த பாடக் குறிப்புக்கள்
* புதிய மொழித்திறன் மாதிரி வினாத்தாள்
* 60 மணித்தியாலம் கொண்ட விரிவுரைகள்

பிரிவு - I
திங், புதன், வெள்ளி 4 - 5.30 Pm
பிரிவு - II
சனி, ஞாயிறு 3 - 5.30 Pm

ஆரம்பம்:
10. 09. 2014 புதன் 4 Pm
தொடர்புகளுக்கு: 077 217 0065
ஜுபிலி கல்லூரி
தீர்வின் ஆஸ்பத்திரி பின் வீதி, மானிப்பாய்.

**SPOKEN ENGLISH**
WITH DIPLOMA CERTIFICATE

இம்முறை A/L எழுதியோர், இளைஞர், யுவதிகள், பல்கலை புகுமுக மாணவர்கள், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.

பதிவுசெய்யவேண்டிய இறுதி திகதி - 13.09.2014
13.09.2014 இற்குமுன் பதிவுசெய்வோருக்கு அனுமதிக்கட்டணம் 20 பாடப்புத்தகங்கள் (தமிழ்-ஆங்கிலம்) மற்றும் VIDEO DVD இலவசம்!

வாரநாள் பிரிவுகள் (திங்கள், புதன்) ஆரம்பம்
1.காலை 8.00-10.00 2.காலை 10.00-12.00

வார இறுதிநாள் (சனி, ஞாயிறு) பிரிவுகள்
1.காலை 08.00-10.00 2.காலை 10.00-12.00

எமது இறுதிப்பிரிவில் பயின்ற 3000 பேருக்கான சான்றிதழ்கள் வெகுவிரைவில் வழங்கப்படும்.

SAAMSON Experts in English Training
179, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 621 4567

**Revision & Paper Class**

2014 GCE O/L பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான

**வரலாறு**

R.S. சந்திரன்
ஆசிரியர், யாழ்.இந்துக்கல்லூரி.

குறிப்பு:
- வெளிமாணவர்களும் பங்குபற்றலாம்.
- தரம் 10,11 பாடத்திட்டங்கள் முழுமையாக பூர்த்தி செய்யப்படும்

ஆரம்பம் 10-09-2014 புதன்கிழமை மாலை 5.00
T.P : 021 320 0755

றோயல் அக்கடமி
யாழ்நகர் நல்லூர்

"நன்மைகள் விழைய நன்மைகள் செய்வோம் நமக்கென உளதை பிறர்க்கும் கொடுப்போம்"

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி




கற்பதற்கு FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் உலகின் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. (யாழில் 1976 முதல்). 136+ நாடுகளில் 1040+ கிளைகள். உயர் தகுதியுடைய ஆசிரியர்கள், சரியான உச்சரிப்பு, நேரடியாக பிரெஞ் ஆசிரியரிடம் படிக்கலாம். இலங்கையில் AF மட்டுமே அங்கீகரிக்கபட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF A1, A2) ஐ வழங்குகின்றது. (எங்கு படித்தாலும் DELFஐ எமது கிளைகளில் மட்டுமே எழுத முடியும். பரீட்சை கட்டணம் : AF மாணவர்களுக்கு Rs.3500 ஏனையோருக்கு Rs.9000). பிரெஞ்சு மொழிபெயர்புகள், AUDIO CDs & BOOKS இலவசமாக பாவிக்கலாம். யாரும் படிக்கலாம். ஓரிரு மாதங்களும் படிக்கலாம். LETTRE & PHOTOCOPIES இலவசம். உடன் பதியுங்கள் ஆரம்பம் 13.9.2014

குறிப்பு :வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு உத்தியோகபூர்வ நிறுவனம் AF மட்டுமே. பொய் விளம்பரங்களை நம்பாதீர்கள்

021 222 8093 61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்...

கச்சேரி → புகையிரதகடவை → AF or ஆரியகுளத்திலிருந்து நக்கா றோட் → AF

**இலவச கணினிப்பயிற்சி**

**Web design Multimedia Networking**

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு 15 வருடங்களைப் பூர்த்தி செய்த எமது நிறுவனம் பாடசாலைக்கல்வியை பூர்த்தி செய்த மாணவர்களிற்கு மேற்படி பயிற்சி நெறியினை **கற்கை நெறிக்கட்டணமின்றி** வழங்கவுள்ளோம்.

விண்ணப்பிக்க விரும்புவோர் Free<Name> <Date.of.Birth><District> என்பவற்றை 772395895 என்ற இலக்கத்திற்கு sms செய்யவும்.

Registered:இளைஞர் திறன் விருத்தி அமைச்சு, மூன்றாம் நிலை தொழிற்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழு

**MCS**


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.09.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.